அரசு அருங்காட்சியகம், சென்னை

அருங்காட்சியக மலர்

(எப்ரல் 2000 - செப்டம்பர் 2000)



வெளியிடுபவர்

முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப.,

அருங்காட்சியகங்களின் ஆணையர்,

அரசு அருங்காட்சியகம், சென்னை-600 008.

டிசம்பர் 2000

அரசு அருங்காட்சியகம், சென்னை
அருங்காட்சியக மலர்
(ஏப்ரல்–செப்டம்பர் 2000)

முதன்மை ஆசிரியர்
முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப.,
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை–600 008.

ஆசிரியர்கள்
முனைவர் வே. ஜெயராஜ்,
காப்பாட்சியர், வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம்,
திரு க. சேகர்,
காப்பாட்சியர், சிறுவர் அருங்காட்சியகம்,
அரசு அருங்காட்சியகம், சென்னை–600 008.

புதிய தொடர்ச்சி–பொதுப் பகுதி – மலர் 4, 2000

©
அருங்காட்சியகங்களின் ஆணையர்
டிசம்பர் 2000

பதிப்பாண்டு:2000 (ஏப்ரல்–செப்டம்பர் 2000)

©அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை–600 008.
டிசம்பர் 2000

விலை: ரூ 40.00

தொலைபேசி
: 91–044–8261578
: 91–044–8269638
நிகரி : 91–044–8218735
மின்னஞ்சல் : govtmuse@md4.vsnl.net.in

முன்புற அட்டைப் படம்
தேசீய கலைக் கூடம் (விக்டோரியா கட்டிடம்) கி.பி. 1906

பின்புற அட்டைப் படம்
அருங்காட்சியகக் கலையரங்கம், கி. பி. 1896

கட்டுரைகளிலுள்ள கருத்துகளுக்கு கட்டுரையாசிரியர்களே பொறுப்பாவர்.

செய்தியைத் தட்டச்சு செய்து கொடுத்த ஆணையரின் நேர்முக எழுத்தர் திருமதி வெ. சசிகலா மற்றும் நேர்முக சுருக்கெழுத்தர் திருமதி ச. தாரா அவர்களுக்கும் அவற்றை நூலாகக் கட்டிக் கொடுத்த அச்சகப் பிரிவு பணியாளர்களுக்கும் நன்றி.

–தொகுப்பாசிரியர்கள்

பொருளடக்கம்

அருங்காட்சியகங்களின் ஆணையரின் கடிதம் .. V

செய்திப் பகுதி

அரசு அருங்காட்சியகத்துறை ஓர் அறிமுகம் .. 1
சிறப்பு நிகழ்வுகள் 2
சிறப்புச் சேகரிப்புகள் 3
விருந்தினர் வருகை 11
கண்காட்சி மற்றும் ஆய்வுக்கு உதவிகள் .. 12
பயிற்சிகள், விழாக்கள் மற்றும் போட்டிகள் .. 14
கருத்தரங்குகள், பணிப்பட்டறைகள் மற்றும் சொற்பொழிவுகள் 15
கருத்தரங்குகள்/பணிப்பட்டறைகளில் ஆய்வுக் கட்டுரை அளித்தல் 16
கருத்தரங்குகள்/பணிப்பட்டறைகளில் கலந்து கொள்ளல் 18
திங்கள் சொற்பொழிவுகள் 19
பயிற்சிகளில் சிறப்புரை 20
வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 23
அருங்காட்சியகம்இ காட்சிக்கூடச் சீரமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் 23
கண்காட்சிகள் 25
அருங்காட்சியகம் இடமாற்றம் 26
நூல், கட்டுரைகள் வெளியீடுகள் 27
ஆராய்ச்சித் திட்டங்கள் 30
ஆய்வு அறிக்கைகள் 31
பாதுகாப்புச் சேவை / பாதுகாப்புப் பணிகள் .. 31
அலுவலர் மாற்றங்கள் 32
ஆய்வுப் பயணங்கள் 32
பார்வையாளர்கள் 35
விற்பனையிலுள்ள வெளியீடுகள் 36

கட்டுரைப் பகுதி

கோவை மருதமலை மூங்கில் துரு பகுதியிலுள்ள
தொல்பழங்காலப் பாறை ஓவிய இடங்கள்
—முனைவர் சி. மகேசுவரன் 42
நாகப்பட்டினம் அருங்காட்சியகத்தில் தமிழ்க்
கடவுளின் கற்சிற்பம் – *க. சரவணன்* 48
தலைப்பலி சிற்பம் – *முனைவர் ஜெ. ராஜா முகமது*.. 53
சங்கநூல்கள் காட்டும் ஓவியக்கலை
—திருமதி ரு.தே. துளசிபிருந்தா 56
காவிய நகரம் காஞ்சிபுரம்
—திருமதி ஜா.மோ.காந்திமதி 61
குரங்கு மண்டபம் *—திரு ந. சுந்தரராஜன்* 64
பத்ரேஸ்வரி அம்மன் மற்றும் சீனிவாசர்
கற்சிற்பங்கள்— *திரு ந.சௌந்திர பாண்டியன்* .. 67
நாகப்பட்டினம் மாவட்டத்தில்
அண்மைக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட
புதைபொருட்கள் குறிப்பு—*திரு க. சரவணன்* .. 70
பண்டைய தமிழகக் காசுகளை முன்மாதிரியாகக்
கொண்ட இலங்கைக் காசுகள்
—திருமதி இரா.சாந்தி 73
ஆர்க்கிட்கள்
—திரு. *க. இலக்குமி நாராயணன்* 76
சென்னை அரசு அருங்காட்சியகத்தின்
[illegible] ஆண்டு கால வளர்ச்சியில் தாவரவியற் பிரிவு
– திருமதி ம. ந. புஷ்பா 78
தீத்தடுப்பு முறைகளும் தீத்தடுப்புக் கருவிகளும்
– *முனைவர் வே. ஜெயராஜ்* 82

அருங்காட்சியகங்களின் ஆணையரின் கடிதம்...

2000–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரையிலான அருங்காட்சியகத் துறையின் செய்திகளைத் தாங்கி வருகிற இவ்வருங்காட்சியக மலரைத் தங்களுக்கு வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

சென்னை, அரசு அருங்காட்சியகம் 1851–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தென்னிந்தியாவின் கலை மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்தை எதிர்கால சந்ததியினருக்குப் பாதுகாத்துத் தரும் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு, தற்பொழுது தனது 150வது வருடச் சேவையில் அடியெடுத்து வைக்க இருக்கிறது. இதனைச் சிறப்பாக கொண்டாடும் வகையில் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டிடங்களான பாந்தியன் கட்டிடம் மற்றும் தேசிய கலைக்கூடக் கட்டிடம் ஆகியவைகளைப் பழைய நிலைக்கு மீட்டெடுத்து பாதுகாக்கும் பணிகளை மேற்கொள்ளுதல், விழாக் கொண்டாடுதல், கருத்தரங்கம் மற்றும் கருத்தரங்க மலர் வெளியிடுதல், அருங்காட்சியகக் கலையரங்கக் கட்டிட உருவம் பொறிக்கப்பட்ட சிறப்பு அஞ்சல் வில்லை வெளியிடுதல் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் சென்னை அரசு அருங்காட்சியகத்தை வலைதளம் மூலமாக தொடர்பு கொண்டு தேவையான தகவல்கள் மற்றும் கலைப் பொருட்களின் நிழற்பிம்பங்களைக் கண்டு தேவையான குறிப்புகளை எடுத்துக் கொள்ள வசதியாக, வலைதளம் அமைப்புப் பணிகள் விரைவில் முழுமைப்படுத்தப்பட உள்ளன.

2000–2001ஆம் நிதியாண்டில், வலைதளம் அமைத்தல், பார்வையாளர்களின் பயன்பாட்டிற்கென நவீன வசதிகளுடன் கூடிய இரு கழிவறைத் தொகுப்புகளை ஏற்படுத்தி தொடர் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், தேசியக் கலைக்கூட காட்சியில் உள்ள சிறந்த ஓவியங்களுக்குக் கண்ணாடி ஒளி இழை மூலம் ஒளியூட்டுதல், திருச்சி அருங்காட்சியகம் அமைந்துள்ள இராணி மங்கம்மாள் கட்டிடத்தில், பாதுகாப்பு அமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற திட்டப் பணிகளுக்காக அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ 40.00 இலட்சத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டுப்புற ஓவியக்கலைகள் நலிந்து விடாமல் பாதுகாக்கும் நோக்கத்தில், விருப்பமுள்ளவர்களுக்கு அக்கலைகளில் பயிற்சி அளிக்கின்ற வகையில் சென்னை தேசீய நாட்டுப்புற இயல் உதவி மையத்துடன் இணைந்து தஞ்சாவூர் ஓவியம், கலம்காரி ஓவியம் மற்றும் மதுபானி ஓவியம் ஆகிய மூன்று பணிப்பட்டறைகள் அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டன.

திங்கட் சொற்பொழிவுகள், வேனிற்காலப் பயிற்சிகள், போட்டிகள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி முகாம்கள் சிறுவர்களுக்

மனதில் கலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் பதிகின்ற வகையில் சென்னை, மாவட்ட அருங்காட்சியகங்களில் நடத்தப்பட்டன. அருங்காட்சியகங்களின் ஆணையர் மற்றும் காப்பாட்சியர்களால் பல்வேறு ஆய்வுகள் அவரவர் துறைகளில் மேற்கொள்ளப்பட்டு, ஆய்வுமுடிவுகள் நூல்களாகவும், கட்டுரைகளாகவும் வெளியிடப்பட்டு அவைகள் பொதுமக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

அருங்காட்சியகங்களை மேம்படுத்த அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைக்கேற்ப, மைய அரசின் 'கலைப்பொருட்களைப் பாதுகாக்க, பயிற்சி தரும் ஆய்வகங்களில்' ஒன்றாக, இவ்வருங்காட்சியகத்தின் வேதியியல் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் வடிகால் வாரியம் அருங்காட்சியக வளாகத்தில் மழைநீர் சேகரிப்பு வசதியைச் செய்துள்ளது. திருநெல்வேலி மாவட்ட அரசு அருங்காட்சியகம் வரலாற்று பாரம்பரிய மிக்க கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அருங்காட்சியகத் துறையின் கீழ் இயங்கிவரும் சென்னை மற்றும் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் கல்விப் பணிகள், சேகரிக்கப்படும் அரும்பொருட்கள் தொடர்பான செய்திகளை அனைவரும் அறியும் வகையில் வெளியிடப்படும் இவ்வருங்காட்சியக மலர் தொடர்ந்து மேலும் பல்வேறு சிறப்பம்சங்களுடன் வெளிவர தங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

ரா.கண்ணன்

சென்னை: 600008 (முனைவர் ரா.கண்ணன், இ.ஆ.ப)

நாள்: 19.12.2000

அருங்காட்சியகச் செய்தி

1


2

3

4


5
6
7
8
9

முன்பக்கங்களிலுள்ள வண்ணப் படங்களின் விளக்கம்

1. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் 14.08.2000 அன்று தேசியக் கலைக்கூடக் கட்டிட முகப்பு மற்றும் மண்டபங்களில் சிறப்பு ஒளியமைப்பு, நீரூற்று மற்றும் டைனோசார் மாதிரிகளுக்கான சிறப்பு ஒளியமைப்புகளைத் துவக்கி வைத்தார். சட்டப் பேரவைத் துணைத்தலைவர், திரு. பரிதி இளம்வழுதி, துறைச் செயலாளர் திரு. எஸ். இராமகிருட்டிணன், இ.ஆ.ப. மற்றும் அருங்காட்சியகங்களின் ஆணையர், முனைவர். ரா.கண்ணன், இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர்.

2. திருச்சி மாவட்டம், பெட்டவாய்த்தலைப்பேட்டை கிராமத்திலுள்ள புத்தர் சிலையை அருங்காட்சியகங்களின் ஆணையர், முனைவர். ரா. கண்ணன்,இ.ஆ.ப. கல்விப்பிரிவுக் காப்பாட்சியர், திரு. க. இலக்குமிநாராயணனுடன் ஆய்வு செய்கின்றார்.

3. சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பொது மக்கள், வண்ண நீரூற்று, ஒளியூட்டப்பட்ட தேசியக் கலைக் கூடக் கட்டிடம் மற்றும் டைனோசர் மாதிரிகளைப் பார்வையிட்டு மகிழ்கின்றனர்.

4. சிறுவர் அருங்காட்சியகம் முன்புறமுள்ள ஒளியூட்டப்பட்ட டைனோசர் மாதிரிகள்.

5. முனைவர். வே. ஜெயராஜ் எழுதிய சென்னை கிறித்தவக் கல்லூரியின் எண்ணெய் வண்ண ஓவியங்கள் பாதுகாப்பு என்ற நூலை, முனைவர். ரா. கண்ணன், இ.ஆ.ப. வெளியிட முன்னாள் இயக்குநர், திரு. என். அரிநாராயணா பெற்றுக் கொண்டார்.

6. புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் என்ற பயிற்சியில் திரு. கே. எஸ். ரகுபதி, இ.ஆ.ப., டாமின் நிறுவன மேலாண்இயக்குநர் தொடக்கவுரையாற்றுகிறார்.

7. திரு. ககன்சிங் பேடி, இ.ஆ. ப., மதுரை மாநகரஆணையர் வேனிற்கால விடுமுறை பயிற்சயின்போது வரையப்பட்டு, காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஓவியங்களைப் பார்வையிடுகிறார்.

8. பழனி அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்ட ஒருநாள் பயிற்சியில் பயிற்சியாளர்கள், கல்வெட்டைப் படியெடுக்கின்றனர்.

9. அருங்காட்சியகக் காப்பாட்சியர் மற்றும் நுண்கலைக்கூட விளக்குநர் ஆகியோருடன் அருங்காட்சியகங்களின ஆணையர் இடுகட்டியிலுள்ள (நீலகிரி) பாறை ஓவியத்தை ஆய்வு செய்கிறார்.

அருங்காட்சியகச் செய்தி

அரசு அருங்காட்சியகத் துறை ஓர் அறிமுகம்

சென்னை, அரசு அருங்காட்சியகம் 1851ல் 1100 புவியியல் பொருட்களுடன் உருப்பெற்று, இன்று ஒரு பல்நோக்கு அருங்காட்சியகமாகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆராய்ச்சி நிறுவனமாகவும், தொல் பொருளியல், மானிடவியல், நாணயவியல், கலை, தாவரவியல், விலங்கியல், புவியியல், வேதியியப் பாதுகாப்பு, சிறுவர் அருங்காட்சியகம் ஆகிய காட்சிக் கூடங்களுடனும் கல்வி, வடிவமைப்பு, வேதியியப் பாதுகாப்பு போன்ற துணைப் பிரிவுகளுடனும் செயல்பட்டு வருகிறது. இதுவரை, இத்துறை 19 மாவட்ட அருங்காட்சியகங்களைத் தோற்றுவித்து, செயல்பட்டு வருகிறது. சேகரித்தல், பதிவு செய்தல், ஆய்வு செய்தல் காட்சிப்படுத்துதல், கல்விப்பணி, நூல் வெளியீடு செய்தல் போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டு சிறந்த பணியாற்றி வருகிறது.

இந்த அருங்காட்சியக மலர் 2000 ஏப்ரல் திங்கள் முதல் 2000 செப்டம்பர் திங்கள் வரையிலான இத்துறை தொடர்பான செய்திகளையும் பல்வேறு கட்டுரைகளையும் உள்ளடக்கி வருகிறது.

கீழ்க்கண்ட மாவட்டங்களில் மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன.

1. அரசு அருங்காட்சியகம், திருகோகர்ணம், புதுக்கோட்டை—622002, தொ.பே.எண்.04322/22247
2. அரசு அருங்காட்சியகம், நாவலர் சாலை, சேலம்—636001
3. அரசு அருங்காட்சியகம், காந்தி அருங்காட்சியக வளாகம், மதுரை—625020, தொ.பே.எண்.0452/650298
4. அரசு அருங்காட்சியகம், இராணி மங்கம்மாள் மண்டபம், திருச்சிராப்பள்ளி—620002
5. அரசு அருங்காட்சியகம், கோட்டை, வேலூர்—632004
6. அரசு அருங்காட்சியகம், நகராட்சி அலுவலகக் கட்டிடம், ஈரோடு—638001
7. அரசு அருங்காட்சியகம், பாலி இல்லம், 70, மைசூர் சாலை, உதகமண்டலம்—643001
8. அரசு அருங்காட்சியகம், காட்டூர், கோயம்புத்தூர்—642009
9. அரசு அருங்காட்சியகம், அரசு மருத்துவமனை சாலை, கடலூர்—607001
10. அரசு அருங்காட்சியகம், புனித மார்க் சாலை, சமாதானபுரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி—627002

11. அரசு அருங்காட்சியகம், காந்தி நினைவு மண்டபச் சாலை, கன்னியாகுமரி—629702
12. அரசு அருங்காட்சியகம், அப்சரா திரையரங்கம் அருகில், கிருட்டிணகிரி—635001
13. அரசு அருங்காட்சியகம், மலையடிவாரம், பழனி—624601
14. அரசு அருங்காட்சியகம், வாரச்சந்தைச் சாலை, சிவகங்கை—630561
15. அரசு அருங்காட்சியகம், அருள்மிகு தியாகராஜ பெருமான் கோயில் வளாகம், திருவாரூர்—610002
16. அரசு அருங்காட்சியகம், 35, முதல் கடற்கரைச்சாலை, நாகப்பட்டினம்—609001
17. அரசு அருங்காட்சியகம், 117, முனுசாமி அவென்யூ, காஞ்சிபுரம்—636501
18. அரசு அருங்காட்சியகம், அசனம்மாள் கட்டிடம், தலைமை அஞ்சலகச் சாலை, இராமநாதபுரம்—623501
19. அரசு அருங்காட்சியகம், நகராட்சி வணிக வளாகம், கரூர்—639 001.

மாவட்ட அருங்காட்சியகங்கள் பிரதி வெள்ளிக்கிழமை, இரண்டாம் சனிக்கிழமை மற்றும் தேசிய விடுமுறை நாட்கள் தவிர அனைத்து நாட்களிலும் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இயங்குகின்றன.

சிறப்பு நிகழ்வுகள்

சென்னை, அரசு அருங்காட்சியக தேசியக் கலைக்கூடத்தில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் 14.08.2000 அன்று தேசியக் கலைக்கூட கட்டிட முகப்பு மற்றும் மண்டபங்களில் சிறப்பு ஒளி அமைப்பு, முன்புறம் அமைக்கப்பட்ட 'ஒளியூட்டப்பட்ட நீரூற்று' மற்றும் 'டைனோசார்' மாதிரிகளுக்கான சிறப்பு ஒளியமைப்பு ஆகியவைகளைத் துவக்கி வைத்தார். சட்டமன்றப் பேரவைத் துணைத்தலைவர், மாண்புமிகு பரிதி இளம்வழுதி, துறைச் செயலாளர், திரு சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். சென்னை அரசு அருங்காட்சியகம், தேசிய நாட்டுப்புறவியல் உதவி மையத்துடன் இணைந்து தக்க பயிற்சியாளர்களைக் கொண்டு, கலைகள் நலிவடையாமல், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி பயிற்சி அளிக்கும் வகையில் பணிப்பட்டறைகள் நடத்த திட்டமிடப்பட்டு இதுவரை தஞ்சாவூர் ஓவியங்கள், கலம்காரி ஓவியங்கள், மதுபானி ஓவியங்கள் என்ற தலைப்புகளில், பணிப்பட்டறைகள் மூலம் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன.

மதுரை அரசு அருங்காட்சியகமும் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகமும் இணைந்து 24.04.2000 முதல் 24.05.2000 முடிய ஒரு

மாத காலத்திற்கு கோடைக்கால பயிற்சி முகாமை நடத்தியது. குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல் வர்மக்கலை, பரதநாட்டியம், ஓவியக்கலை, சிலம்பம், கராத்தே, பொம்மை செய்தல், புகைப்படக்கலை, கண்ணாடி ஓவியம் போன்றவைகளில், 1000 மாணவ மாணவியருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 27.05.2000 அன்று நடைபெற்ற நிறைவுநாள் விழாவில் மதுரை மாநகர ஆணையர் திரு சுகன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் பயிற்சி பெற்ற மாணவ மாணவியருக்குச் சான்றிதழ்களை வழங்கினார். மாவட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

திருநெல்வேலி, அரசு அருங்காட்சியகம் வாடகைக் கட்டிடத்திலிருந்து, பாளையங்கோட்டை புனித மார்க் சாலையில் அரசு கட்டிடத்திற்கு 01.04.2000 அன்று முதல் மாற்றப்பட்டு, 02.08.2000 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கி. தனவேல், இ.ஆ.ப., அவர்களால் மாவட்டப் பெருமக்கள் முன்னிலையில் பொதுமக்கள் பார்வைக்கு துவக்கி வைக்கப்பட்டது.

சிறப்புச் சேகரிப்புகள்

புதையலாகப் பெறப்பட்டவை

சென்னையில்

சென்னை அரசு அருங்காட்சியக மானிடவியல் பிரிவில் தருமபுரி மாவட்டம், பொன்னகரம் வட்டத்திலிருந்து தங்க ஒட்டியாணம் ஒன்றும், கையில் கட்டும் தங்கக் கம்பிக் காரை ஒன்றும் முருக்குக் கம்பிக் காரை ஒன்றும், தங்கக் கம்பி ஒன்றும், தங்கக் கம்பித் துண்டு ஒன்றுமாக மொத்தம் ஐந்து இனங்களும், ஊத்தங்கரை வட்டம், மோட்டூர் கிராமத்திலிருந்து பதினொரு துண்டு சாமித் தகடுகள், புதுக்கோட்டை மாவட்டம் செரளப்பட்டி கிராமத்திலிருந்து வெள்ளி அரை ஞாண் கயிறு ஒன்று, வெள்ளி முகப்புத் துண்டு ஒன்று, வெள்ளித் துண்டு அரை ஞாண் கயிறுடன் ஒன்று, வெள்ளித் துண்டு ஒன்று, வெள்ளி கொண்டை மோதிரம் ஒன்று, பெரிய வெள்ளி மிஞ்சி நான்கு, நடுத்தர அளவு வெள்ளி மிஞ்சி இரண்டு, சிறிய வெள்ளி மிஞ்சி ஒன்று, உடைந்த வெள்ளி துண்டு ஒன்று, வெள்ளி அரைமுடி ஒன்று, உடைந்த வெள்ளித் துண்டுகள் ஐந்து, சிறிய வெள்ளி வளையங்கள் இரண்டு, வெள்ளிச் சலங்கைகள் பதிமூன்று, வெள்ளிச் சங்கிலியின் உடைந்த துண்டுகள், தொங்குக் கடுக்கன் ஒன்று, அலமுருகு இரண்டு, வெள்ளிக் காப்புகள் இரண்டு, வெள்ளிச் சலங்கை முத்துகள் மூன்று, வெள்ளியும் செம்பும் கலந்த பொன் தொங்குக் கடுக்கன் மூன்றுமாக மொத்தம் பத்தொன்பது இனங்கள் பெறப்பட்டு, அருங்காட்சியக இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

நாணயவியல் பிரிவில் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து நான்கு விக்டோரியா வெள்ளி நாணயங்களும் ஒரு ஐந்தாம் ஜார்ஜ் வெள்ளி நாணயமும், தருமபுரி மாவட்டத்திலிருந்து நூற்றுத் தொண்ணூற்று ஒன்று 'தென்னிந்திய தங்க நாணயங்களும் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டன.

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

ஒரு விநாயகர் கற்சிலை (56 செ.மீ உயரம்) கூத்தாநல்லூரிலிருந்து (தஞ்சாவூர் மாவட்டம்) பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டது.

சேலம்

கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோமேசுவரர் படிமம் (உயரம் 21 செ.மீ. அகலம் 31 செ.மீ.) ஒன்று சேலம் வட்டாட்சியர் மூலமாக பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டது.

மதுரை

சிறிய தற்கால துர்கை படிமம் (8 செ.மீ. உயரம்) ஒன்று திருமங்கலம் வட்டாட்சியரிடமிருந்தும் பழமையான ஒரு உலோக முக்காலியும், ஒரு இரும்புக் கோடாரியும் (நாயக்கரின் காலத்தைச் சேர்ந்தவை) மேலூர் வட்டாட்சியரிடமிருந்தும் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டன.

திருச்சிராப்பள்ளி

லால்குடி வட்டம், மாந்துறை கிராமத்தில் கிடைத்த 5 செ.மீ. உயரமும், 3 செ.மீ. அகலமும் கொண்ட தவழ் கண்ணன் படிமம், லால்குடி வட்டாட்சியர் மூலம் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டன.

வேலூர்

அப்புக்கல் கிராமத்திலிருந்து எட்டு செப்பு வாட்கள் புதைப் பொருட்களாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஈரோடு

கொங்குச் சோழர் காலத்திய ஸ்ரீதேவி கற்சிற்பம் ஒன்றும் (94 x 28 செ. மீ), 12 ஆம் நூற்றாண்டின் கன்னட மொழிக் கல்வெட்டு ஒன்றும், சத்தியமங்கலத்திலிருந்து புதைப் பொருட்களாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி

இராமநாதபுரம் வட்டம் கும்பிக்குளம் கிராமத்தில் கண்டறியப்பட்ட 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பித்தளையிலான காளியின் கவசம் (2 அடி) ஒன்றும், நான்குநேரி வட்டம், கீழ்மஞ்சுவிளை கிராமத்தில் கிடைத்த 18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பித்தளையிலான இரண்டு தவழும் கிருட்டிணர் சிலைகள் (3.8, 2.8 அங்குலம்) ஒரு உடைந்த சங்கு மாதிரி, ஒரு சிறிய கெண்டி (350 கிராம்) மற்றும் மூடியுடன் கூடிய சிறிய கிண்ணம் (150 கிராம்) ஒன்றும், தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், கொம்மிடிக்கோட்டை கிராமத்தில் கி.பி. 15 – 16 –ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வள்ளி தெய்வயானை (34 செ.மீ, 31 செ.மீ) படிமங்கள், கி.பி. 17–18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாமா–ருக்மிணி சிலைகள் (27 செ.மீ, 10.4 செ.மீ) ஸ்ரீவைகுண்டம் வட்டம் ஆதிச்சநல்லூர் கிராமத்திலிருந்து கி.பி. 17–ஆம் நூற்றாண்டு பித்தளைச் சொம்பு ஒன்றும் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி

விளவங்கோடு வட்டாட்சியர் மூலம் சீனிவாசர் (கி.பி. 18–ஆம் நூற்றாண்டு), பத்ரேசுவரி அம்மன் (கி.பி. 17–ஆம் நூற்றாண்டு) கற்சிற்பங்கள் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டன.

கிருட்டிணகிரி

ஒசூர் வட்டாட்சியர் மூலமாக ஒரு பெரிய (440 கிராம்) பித்தளைக் கட்டியும் ஒரு சிறிய (250 கிராம்) பித்தளைக் கட்டியும் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டன.

கடலூர்

மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக வளாகத்திலிருந்து ஆங்கிலேயர் காலக் கல்வெட்டு (உயரம் 39 அங்குலம், கி.பி. 18–ஆம் நூற்றாண்டு) ஒன்று, திருவதிகையில் இருந்து கி. பி. 10–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஷ்ணு (3அடி), ஸ்ரீதேவி (3.25அடி) கற்சிற்பங்கள் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டன.

பழனி

நிலக்கோட்டை வட்டம், மட்டப்பாறை கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட கி. பி. 16–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அய்யனார் கற்சிற்பம் ஒன்று பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டது.

சிவகங்கை

காரைக்குடி வட்டாட்சியர் மூலமாக கி.பி.18–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஷ்ணு கற்சிற்பம் ஒன்று பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டது.

திருவாரூர்

வேதாரண்யம் வட்டாட்சியர் மூலமாக உலோகப் புதைப் பொருட்களான நான்கு வழிபாட்டுத் தட்டுகள் (5 கிலோ கிராம்), ஒரு நீர்க் கூடுவை (400 கிராம்) மற்றும் இரண்டு கை விளக்குகள் (400 கிராம்) பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டன.

நாகப்பட்டினம்

வேதாரண்யம் வட்டாட்சியர் மூலமாக, செம்போடை கிராமத்தில் கிடைத்த பாலசுப்பிரமணியர் கற்சிற்பம் (3.75', தற்காலம்) பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டது.

கரூர்

வீரக்கல் (கி. பி. 10-ஆம் நூற்றாண்டு, உயரம் 140 செ.மீ.), அய்யனார் (10-ஆம் நூற்றாண்டு, 52 செ.மீ.), திக்பாலகர் (10-ஆம் நூற்றாண்டு, உயரம் 84 செ.மீ.), ஆகிய கற்சிலைகள் தேய்ந்து போன நிலையில் தேவர் மலையில் (குளித்தலை) கண்டறியப்பட்டு, புதைபொருட்களாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டன.

கள சேகரிப்பு மற்றும் அன்பளிப்பாகப் பெறப்பட்டவை

சென்னையில்

இந்திய புவியியல் ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து 15 புவியியல் பொருட்களும், ஜெம் கிரானைட்ஸ் நிறுவனத்தினரிடமிருந்து டோலரைட் லெப்டினைட் போன்ற 12 பல வண்ணக் கருங்கற்களும் அன்பளிப்பாகப் புவியியல் பிரிவிலும், சிறப்புக் கண்காட்சிக்காக மருத்துவ பயன்பாடுடைய 50 காற்றுக் குழாய்த் தாவரங்கள் தொட்டிச் செடிகளாகவும், 25 தாவரங்கள் உலர் தாவரங்களாகவும் பின்லாந்தின் குயுப்பியோ அருங்காட்சியகத்திலிருந்து 99 காற்றுக் குழாய் தாவரங்களும் பெறப்பட்டு, தாவரவியல் பிரிவிலும் 17 முதல் நாள் அஞ்சல் உறைகள் மற்றும் விளக்க அட்டைகள் நாணயவியல் பிரிவிலும் அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

ஒரு பச்சோந்தி, ஒரு ஆமை, ஒரு செட்டி நாட்டு மர வட்டிகை, ஒரு செம்பு நாணயம் (புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர் அம்மன் காசு, கி.பி. 19-ஆம் நூற்றாண்டு) போன்றவை சேகரிக்கப்பட்டு, புதிதாக இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

சேலம்

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் வட்டத்திலிருந்து முழுமையாகச் செதுக்கப்படாத ஒரு காந்தி கற்சிலையும் (உயரம் 47 செ.மீ), ஆஸ்திரியா, ஆற்காடு நவாப், விக்டோரியா, ஐந்தாம் ஜார்ஜ், ஆறாம் ஜார்ஜ் மற்றும் ஏழாம் எட்வர்டு ஆகியோர் வெளியிட்ட 10 வெள்ளி நாணயங்கள், 1867 மற்றும் 1872–ஆம் ஆண்டில் எழுதிய இரண்டு வீட்டு மனை ஆவணங்கள், விக்டோரியா, ஐந்தாம் ஜார்ஜ், ஆறாம் ஜார்ஜ் மற்றும் ஏழாம் எட்வர்டு உருவம் பொறித்த, உபயோகப்படுத்தப்பட்ட அஞ்சல் வில்லைகள் நான்கையும் சேர்த்து 16 இனங்கள் அரூரைச் சார்ந்த திரு. எஸ். அன்சாரிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

மதுரை

பாண்டியர் மற்றும் நாயக்கர் கால 11 செப்பு நாணயங்கள், திரு.கே.தங்கராஜிடமிருந்து,வைகையாற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட 2 அடி உயர காளி கற்சிலை ஒன்று, திரு பி.கே.சிவகுமாரிடமிருந்து பிரம்மகுமாரிகளின் முதல் நாள் அஞ்சல் உறை ஒன்று, தலைமைத் தபால் அலுவலரிடமிருந்து 27 முதல் நாள் அஞ்சல் உறைகள் மற்றும் விளக்க அட்டைகள் அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி

உறையூரைச் சேர்ந்த திருமதி ஃபாத்திமா என்பவரிடமிருந்து எகிப்து. பிலிப்பைன்ஸ், வங்கதேசம், பாகிஸ்தான், குவைத், ஜோர்டான் ஆகிய நாடுகளின் ஒன்பது பணத் தாட்கள் கொடையாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

வேலூர்

அரக்கோணம், திரு. மண்ணு என்பவரிடமிருந்து ஒரு எண்ணெய்க் குடம், ஆசிரியர், திரு. சையத் சலீம் அகமதுவிடமிருந்து ஒரு மரப் பானை, விண்ணமங்கலம் திரு. கே. துரைசாமியிடமிருந்து ஒரு சம்புவராயர் காலச் செம்பு நாணயம் ஆகியவை அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஈரோடு

களச்சேகரிப்பாக 3 அடி நீளமுள்ள உடும்பு ஒன்றும், கே.எஸ்.ஆர்.பொறியியற் கல்லூரி மாணவர் திரு. ப.அறிவழகன் வழங்கிய பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 100 தபால் தலைகள் அன்பளிப்பாகவும் பெறப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கிருட்டிணகிரி

காரக்குப்பம் கிராமத்திலிருந்து விஜயநகரக் காலக் கல்வெட்டு (உயரம் 5¾', அகலம் 3') ஒன்றும், எமக்கல்நத்தம் கிராமத்திலிருந்து வில்தாங்கி இறந்த வீரனுக்கு எடுக்கப்பட்ட கன்னட எழுத்துக்களுடன் கூடிய நடுகல் ஒன்றும், களச் சேகரிப்பாக, இருப்பில் சேர்க்கப்பட்டன.

உதகமண்டலம்

150 ஆண்டுகள் பழமை வாய்ந்த கல் உரல் (3' X 2.75') ஒன்று பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர்

மரமேறு தளைக் கயிறு, பாளைத் தட்டும் மரக் கொட்டாப்பளி, 'வெடிப்பலா உலர் கனி' இரண்டு, காடர் பழங்குடியினரது கல்மூங்கிலால் ஆன கத்தி ஒன்று, போஜ்பத்தர் மரப்பட்டைத் துண்டு ஒன்று ஆகியவை அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

கடலூர்

கூத்தக்குடி கிராமத்திலிருந்து சோழர் கால நரசிம்மர் கற்சிலை ஒன்று இரண்டு கீழ்க் கைகள் உடைந்த நிலையிலும், இரு விஷ்ணு சிலைகள் சிதைந்த நிலையிலும், கருடன், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு (2.25 அடி), கடிகாரம் வைக்கும் பெட்டி, கல்சட்டி, 1929-ஆம் வருடத்திய வீசைக் கற்கள் மற்றும் இரும்பு அளவை ஒன்று ஆகியவை சேகரிக்கப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி

தூத்துக்குடி, முட்டம், திருச்செந்தூர், கன்னியாகுமரி போன்ற கடலோரப் பகுதிகளிலிருந்து களச் சேகரிப்பாக (மொத்தம் 44) துளையுடலிகள், பவளங்கள், மரப் பவளம், கடல் குதிரை, மெல்லுடலிகள், சிப்பிகள் போன்றவையும், அன்பளிப்பாக பாளையங்கோட்டை, திரு. டி.அகஸ்டின் என்பவரிடமிருந்து சுறா மீன் ஒன்று, சித்த மருத்துவக் கல்லூரி தாவரவியல் துறைப் பேராசிரியர் திரு. எஸ்.சோமசுந்தரம் அவர்களிடமிருந்து 15 மருத்துவ உலர் தாவரத் தொகுப்புகள், அஞ்சல் துறையினரிடமிருந்து 27 அஞ்சல் உறைகள் மற்றும் 51 அஞ்சல் வில்லைகளும் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி

விஜயவாடா, திரு. வெங்கட்ராவ், ஓவியர் மூலம் 'பாத்திக் ஓவியம்' ஒன்று, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், அய்யன் திருவள்ளுவர், பசும்பொன் முத்துராமலிங்கம், வ.உ.சிதம்பரனார், பாரதியார் ஆகியோரின் நிழற்படங்கள், அஞ்சல் துறையினரிடமிருந்து 30 முதல் நாள் அஞ்சல் உறைகள் மற்றும் விளக்க அட்டைகள் அன்பளிப்பாகவும் சுடுமண் பொம்மைகள் நான்கு விலைக்கும் வாங்கப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

பழனி

தோடர் இன மக்கள் பயன்படுத்திய கைத்தடி போன்ற 16 மானிடவியல் பொருட்கள், சிறிய நகைத் தராசுப் பெட்டி ஒன்று, பீரங்கிக் குண்டு ஒன்று, நவபாஷாணங்கள் போன்றவையும், தண்ணீர்ப் பாம்பு, சாரைப் பாம்பு, 6 கடல்வாழ் உயிரிகள், தவளை மற்றும் ஓணான் எலும்புக் கூடுகள், இரு தூக்கணாங்குருவிக் கூடுகள் போன்ற விலங்கியல் சார்ந்த பொருட்களும், நேதாஜி கால, ஒரு பக்கம் அச்சடிக்கப்பட்ட 1000 ரூபாய், ஜெய்ப்பூர் அரசு நீதிமன்ற கட்டண துபால் தலை ஒன்று மற்றும் நான்கு பூட்டான் நாட்டு துபால் தலைகளும் அஞ்சல் துறையினரிடமிருந்து 82 முதல் நாள் உறைகள் மற்றும் விளக்க அட்டைகளும் அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

சிவகங்கை

திரு. தண்டத்தேவரிடமிருந்து அம்மன் மரச் சிற்பம் ஒன்றும், திரு. எஸ்.கே.செல்லம் செட்டியாரிடமிருந்து, இரண்டாவது போத குரு மகாராசா மற்றும் இரு இராணிகள் கற்சிற்பங்களும் (5வது ஜமீன், காலம் கி.பி. 1848–1863), திரு ரமேஷிடமிருந்து நவீனக் கால ஓலைச் சுவடிக் கட்டு ஒன்று, திரு. முத்துவிடமிருந்து பித்தளை 1/2 அணா நாணயம் ஒன்று, சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேலாளரிடமிருந்து சுடுமண் எண்ணெய் சேமிப்பு கலன் (காலம் 200 ஆண்டுகளுக்கு முன், கொள்ளளவு 250 மில்லி) மற்றும் குதிரை நினைவுக் கல்வெட்டு ஒன்றும் ஜாக்குலின் கென்னடி மற்றும் ஜவஹர்லால் நேரு புகைப்படங்கள் திரு. ஞானவல்லவனிடமிருந்தும், திரு. இரா. நகலனிடமிருந்து ஒரு வெள்ளி, 5 பித்தளை வெளி நாட்டு நாணயங்களும், திரு மு.சோமசுந்தர பாரதியிடமிருந்து அலங்கரிக்கப்பட்ட நிலைப் பலகை ஒன்றும் அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

திருவாரூர்

நீடாமங்கலம், திருமதி. சி. பேபி கமலாம்பாள் அவர்களிடமிருந்து 7 மரப் பொம்மைகள், 3 கல் அகல் விளக்குகள், அலங்காரப் பொம்மைத் தாங்கி ஒன்று, 8 சங்குகள், 2 குங்குமச் சிமிழ் ஆகியவையும்,

திருவாரூர் திரு. ராஜ நீதிதாசன் அவர்களிடமிருந்து 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட 3 மரச் சிற்பங்களும், பல்வேறு பெரு மக்களிடமிருந்து குவைத், டச்சுக் குடியரசு, யுனைடட் அரபு எமிரேட்ஸ், ஹாங்காங், புருனை, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, அமெரிக்கா, வங்காளதேசம் மற்றும் பிரான்சு நாடுகளைச் சேர்ந்த 39 நாணயங்கள் மற்றும் தாள் பணங்கள் கொடையாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

நாகப்பட்டினம்

வேட்டைக்காரனிருப்பு கிராமத்தின் திரு. எம்.எஸ்.முஜீபுஹரீக் என்பவரிடமிருந்து 8 செ.மீ. உயரமுடைய மூன்று குத்து விளக்குகள் அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம்

கரப்பான் பூச்சியின் உணவு மண்டலம், சுவாச மண்டலம், நரம்பு மண்டலம், தலை மற்றும் வாய் பகுதிகளின் அமைப்பை விளக்கும் பாரீசுச் சாந்து மாதிரிகளும் (13.5 X 13.5 அங்குலம்) கடல் சிப்பிகள் (18 வகை), 50 உள்நாட்டு, வெளிநாட்டு அஞ்சல் வில்லைகள், மற்றும் 10 இராச இராச சோழனின் செப்பு நாணயங்களும் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம்

திரு. கிருட்டிணன் என்பவரிடமிருந்து ‘காக்டி’ இனத் தாவரப் பூக்கள் பற்றிய 10 தபால் தலைகள், திரு. வீரபாண்டி என்பவரிடமிருந்து தமிழ் மாதம், ஆண்டு, எண்கள் பற்றிய பத்து பழங்கால ஓலைச் சுவடிகள், திரு. ஆல்பர்ட் என்பவரிடமிருந்து இரண்டு சிங்க இறால் மீன்கள், திருமதி. அம்பிகாவதி என்பவரிடமிருந்து மர உரி ஒன்று, திரு. வைத்தியநாதனிடமிருந்து கள் சேகரிக்கும் சுரைக் குடுவைகள், திரு. சூரியமூர்த்தியிடமிருந்து பல்வேறு நாணயங்கள், திரு. முருகானந்தத்திடமிருந்து கஞ்சிரா இசைக்கருவி திரு. வழிவிட்டார் தேவர் என்பவரிடமிருந்து 1908 ஆம் ஆண்டு இராமநாதபரம் சேதுபதி முத்ததுராமலிங்க சேதுபதிக்கும் சேது நாச்சியாருக்கும் நடந்த விவாகப் பத்திரிக்கயின் நகல் ஒன்றும் அன்பளிப்பாகப் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

கரூர்

கரூர் சட்ட மன்ற உறுப்பினர், திருமதி. வாசுகி முருகேசன் அவர்களிடமிருந்து 13 செ.மீ. உயரமும், 10 செ.மீ. அகலமும் கொண்ட நடராசர் படிமம் ஒன்று, வரலாற்று பேராசிரியர் திரு. இராசசேகர தங்கமணி அவர்களிடமிருந்து முத்திரை மோதிரம் (பித்தளை) ஒன்று 27 கிழக்கிந்தியக் கம்பெனி செப்புக் காசுகள் அன்பளிப்பாகவும் பெறப்பட்டு, இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

விருந்தினர் வருகை

சென்னையில்

தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை மாண்புமிகு அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் 14-08-2000 அன்று சென்னை அருங்காட்சியகத்திற்கு வருகை புரிந்து வண்ண ஒளி நீருற்று, தேசியக் கலைக்கூடம் மற்றும் டைனோசார் மாதிரிகளுக்கான சிறப்பு ஒளி அமைப்பு ஆகியவற்றைத் துவக்கி வைத்தார்.

ஆஸ்திரேலிய அருங்காட்சியகத்தின் அறிவியலார் திரு. வினோத் டானியல் யானைகள் தொடர்பான சிறப்புக் கண்காட்சியை சென்னை அருங்காட்சியகத்துடன் இணைந்து நடத்துவது தொடர்பாக 2.9.2000 அன்று அரும்பொருட்களைப் பார்வையிட்டார்.

சென்னையிலுள்ள பிரான்சு நாட்டு பண்பாட்டு நிறுவன இயக்குநர் திரு. எம். கிறிஸ்டோபி லி டு 5.9.2000 அன்றும் புதுதில்லியிலுள்ள பிரான்சு நாட்டு தூதரக பண்பாட்டுத் தூதுவர் திரு. யாபட் 8.9.2000 அன்றும் அரசு அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டனர்.

மாவட்டங்களில்

திரு. ஜோகேந்திர பத்ரா, இ.ஆ.ப., ஒரிசா மாநில உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் நலத்துறை செயலர் அவர்கள் 10.5.2000 அன்று உதகமண்டலம் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கி. தனவேல், இ.ஆ.ப.,கோட்டாட்சியர் மற்றும் பாளை சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். முகமது கோதர்மைதீன் ஆகியோர் 02.07.2000 அன்று திருநெல்வேலி அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டனர்.

திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் 27.4.2000 அன்று மதுரை அரசு அருங்காடசியத்தைப் பார்வையிட்டார்.

கண்காட்சி மற்றும் ஆய்வுக்கு உதவிகள்

சென்னையில்

திரு. சி.டி. சோலங்கி (பீரங்கிகள்), திரு. நடன காசிநாதன் (பல்லவ சிற்பங்கள்), திருமதி. ரமா நாராயணன் (துணி வகைகள்), திரு. வினோத் தானியல் (யானைச் சிற்பங்கள்) ஆகியோருக்குத் தொல்லியல் பிரிவிலும்; திருமதி. ஞான சௌந்தரி, பேராசிரியை (நாணயங்கள் பற்றிய பாடத்திட்டத்திற்காக) திரு. கோவிந்தசுவாமி (தென்னிந்திய வெள்ளி நாணயங்கள்) ஆகியோருக்கு நாணயவியல் பிரிவிலும்; முனைவர் டி.பி. ஜேம்ஸ், அறிவியலார், மைய மீன் வளத்துறை (மெல்லுடலிகள்), திரு. பழ. குமரன், ஆய்வாளர், பார்சலோனா பல்கலைக்கழகம், ஸ்பெயின் (கடல் பாலூட்டிகள்) ஆகியோருக்கு விலங்கியல் பிரிவிலும்; அகரமுதலி திட்ட இயக்ககத்திற்கு 'குறிஞ்சித் தாவரம்', 'காளான்கள்' குறித்த விபரங்கள் தாவரவியற் பிரிவிலும்; அண்ணா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த நான்கு மாணவ மாணவியர்க்கும் (கட்டிடக்கலை), பிஎச்.டி. பகுதிநேர மாணவரின் ஆய்வுக்கும் வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகத்தில் ஆய்வுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

'உச்சநீதிமன்றத்தின் 50–வது ஆண்டு நிறைவு மற்றும் இந்திய சட்ட அமைப்பு' தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தின் சார்பில் சென்னை இராணிமேரிக் கல்லூரியில் நடைபெற்ற சிறப்புக் கண்காட்சியில் (5–19, அக்டோபர் 2000), சிறுவர் அருங்காட்சி யகத்திலுள்ள சென்னை 'மாநகர முதன்மையர் '(ஷெரிப்) பயன்படுத்திய பொருட்களுடன் பங்கேற்கப்பட்டது.

வில்லிவாக்கம் சிங்காரம்பிள்ளை மேல்நிலைப்பள்ளி மற்றும் ஜே.என் சிங்வீ ஜெயின் மெட்ரிகுலேஷன் பள்ளி கண்காட்சிக்கு நாணயவியல், புவியியல், விலங்கியல் மற்றும் தாவரவியல் பகுதிகளிலிருந்து கண்காட்சிக்கான பொருட்கள் கொடுக்கப்பட்டு, மீண்டும் பெறப்பட்டன.

மாவட்டங்களில்

புதுக்கோட்டையில், எம். சரவணன் (விராலி மலையில் ஓர் ஆய்வு), எம்.பிரேமா (தொண்டைமான் மன்னர்கள் ஆட்சியில் நீர்ப்பாசனம்), எஸ்.ரவிசங்கர், (புதுக்கோட்டை மாவட்டத்தில் குகைக் கோயில்கள், முனைவர் சிவப்பிரகாசம், பூண்டி புஷ்பம் கல்லூரி மற்றும்,

பேராசிரியர் எஸ். நசிருதீன், காதர் மொகிதீன் கல்லூரி வரலாற்றுத் துறைப் பேராசிரியர்கள் இருவருக்கும், மதுரையில் செல்வி. சுபஸ்ரீ (நடுகல்), திரு. சீ. இலட்சுமணன் (கல்வெட்டுகள்), வரலாற்றுப் பேராசிரியர் திருமதி மீனாட்சி (கல்வெட்டுகள்), திரு. பி. ஆறுமுகம் (கல்வெட்டுகள்), திரு திருமலை, முனைவர். வேடி (பிராமி எழுத்துக்கள்) ஆகியோருக்கும்; திருச்சியில் செ. சேவியர் (திருச்சியில் நடந்த அகழ்வாராய்ச்சிகள்), திரு. எ. ஜெரால்டு பெனடிக் (இராணி மங்கம்மாளும் அவரது காலமும்), செல்வி பி.அமுதவேணி (கங்கை கொண்ட சோழபுரம் மற்றும் கல்வெட்டுகள்) ஆகியோருக்கும்; வேலூரில் திரு. ஸ்ரீதர்(வேலூர் வரலாறு), திரு. கே.வி. சுப்ரமணி (வேலூர் மாவட்ட பாறை ஓவியங்கள்), திரு. பூபாலன் (திருவண்ணாமலை மாவட்டக் கோயில்கள்) ஆகியோருக்கும்; ஈரோட்டில் திரு. ஜோதி பாக்கியம் (ஈரோடு நகராட்சி), திரு. அப்துல்கனி (தென்னிந்திய பழங்குடிகள் மற்றும் முஸ்லீம்கள்), ஈரோடு தலைமை அஞ்சல் அலுவலகத்திற்கு பவானி சங்கமேஸ்வரர் ஆலயம் பற்றியும், திரு. நல். நடராசன் (ஈரோடு மாவட்டத்தின் கல்வெட்டுகள்) ஆகியோருக்கும்; உதகமண்டலத்தில் திரு. குமாரவேலு (நீலகிரி மாவட்ட நடுகற்கள்) அவர்களுக்கும் ; கோயம்புத்தூரில் அமெரிக்க மானிடவியல் பேராசிரியர் திரு. ஆலன் சாக்ரீல் (பாறை ஓவியங்கள், நடுகற்கள், கல்வெட்டுகள்), முனைவர் இரா. நாகசாமி (மூன்று படிமங்களை ஒளிப்பட ஆவணமாக்கவும்), முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., (பாறை ஓவியங்கள் சிந்துசமவெளி நாகரீக குறியீடுகளுக்கும் பாறை ஓவியங்களுக்குமான தொடர்பு) ஆகியோருக்கும் ; கடலூரில் திரு. கே. ஜோதிலிங்கம், திரு அண்ணாதுரை, திரு. ராஜா ஆகியோருக்கும் ; திருநெல்வேலியில் பொறியாளர்கள் ஆர். சுந்தர் மற்றும் டி. டென்னிஸ் (நாணயங்கள்), திரு வி. சுகுமார் (கிருஷ்ணாபுரம் சிற்பங்கள்) ஆகியோருக்கும்; கன்னியாகுமரியில் முதுகலை சுற்றுலா மாணவ மாணவியர்க்கும் (குமரி மாவட்டத்தின் சுற்றுலா தலங்கள்); கிருட்டிணகிரியில் கல்லூரி மாணவ மாணவியருக்கும் (தருமபுரி மாவட்ட வரலாற்றுச் சிறப்புகள், மருத்துவத் தாவரங்கள்); நாகப்பட்டினத்தில், தஞ்சை பல்கலைக்கழக ஆய்வு மாணவர், திரு. சே. சாட்சிலிங்கம் (தொல்பொருளியல்) என்பவருக்கும்; காஞ்சிபுரத்தில் மாவட்ட பட்டு வளர்ச்சி மற்றும் விற்பனை அலுவலகத்தின் திருமதி அ. ஜோதி, திருமதி. காஞ்சனா (இந்திய அந்துப் பூச்சிகள்) ஆகியோருக்கும் ; இராமநாதபுரத்தில் சென்னை திரு சுப்பிரமணியன் (கொல்லிமலை பழங்குடியினர்), திரு. கீர்த்திவாசன், சென்னை (சேதுபதி நாணயம்), ஆராய்ச்சியாளர் திரு இளங்கோவன், மதுரை (உத்திரகோசமங்கை நடராசர்) இராமநாதபுரம் மாவட்ட உதவி நீதிபதி திரு. ஆனந்தகுமார் ('இசைக்கருவிகளில் யாழ்') ஆகியோருக்கும்; கரூரில் அரசு

கலைக்கல்லூரி மாணவிகளுக்கும் (கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள்) ஆய்வுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

பயிற்சிகள், விழாக்கள் மற்றும் போட்டிகள்

22.04.2000 ஐம்பெரும் விழா – பேச்சுப் போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல், கோலம், நடனம், ஓவியப்போட்டிகள் – அரசு அருங்காட்சியகம், சேலம்

26.04.2000 – 30.04.2000 பாத்திக் ஓவியப் பயிற்சி – மதுரையைச் சேர்ந்த 20 இல்லத்தரசிகளுக்கு நடத்தப்பட்டது – அரசு அருங்காட்சியகம், மதுரை.

04.05.2000 – 01.06.2000 கலைப்பொருட் பாதுகாப்பு – ஓவியர்களுக்கானது, வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம், சென்னை

16.05.2000 – 22.05.2000 ஓவியப் பயிற்சி' – பள்ளி மாணவ மாணவியர்க்கு – அரசு அருங்காட்சியகம், வேலூர்

01.06.2000 – 30.06.2000 அரும்பொருட்பாதுகாப்புப் பயிற்சி– வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம், சென்னை

26.06.2000 ஸ்டெல்லா மேரிக் கல்லூரி நுண்கலைத் துறை மாணவிகளின் உதவியுடன் தொல்லியல் காப்பறையிலுள்ள பொருட்களைச் சீர்படுத்துதல் –வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம் மற்றும் தொல்பொருள் பிரிவு, சென்னை

27.06.2000 சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த ஓவிய, கட்டுரைப் போட்டிகள் – பள்ளி மாணவர்களுக்கு – அரசு அருங்காட்சியகம், கடலூர்

05.07.2000 ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டி – 'பரிசளிப்பு விழா' – அரசு அருங்காட்சியகம், கடலூர்

17.07.2000 – 20.7.2000	ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி – 50 மாணவிகளுக்கு அளிக்கப்பட்டது – விருதுநகர் "ரங்கோலி ஸ்கிரீன்ஸ் நிறுவனம்" மற்றும் அரசு அருங்காட்சியகம், மதுரை
17.07.2000 – 26.07.2000	கல்வெட்டுப் பயிற்சி – பல்வேறு கல்லூரிகளின் 70 மாணவ மாணவியருக்கு – அரசு அருங்காட்சியகம், சேலம்.
10.08.2000	'கல்வெட்டுகள்' ஒரு நாள் பயிற்சி–நடத்துநர் முனைவர் செ. இராசு கொங்கு ஆய்வு மைய இயக்குநர் – அரசு அருங்காட்சியகம், பழனி
11.08.2000 – 18.08.2000	'புவியியல் பொருட்களின் முக்கியத்துவம்' பயிற்சி – 12 கல்லூரி மாணவர்களுக்கு – புவியியல் பிரிவு, சென்னை.
12.08.2000	முற்பகல் 'ஓவியப் போட்டி'யும் பிற்பகல் 'பரிசளிப்பு விழா'வும் – 1200 பள்ளி மாணவர்கள் போட்டியில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு ஓவியர் சங்கம், வின்னர் தையலகம் மற்றும் அரசு அருங்காட்சியகம், ஈரோடு
15.08.2000	'53வது சுதந்திர தின விழா' – அரசு அருங்காட்சியகம், ஈரோடு
15.08.2000	'53வது சுதந்திர தின விழா' – உலக அமைதிக்கு மனமாசு நீக்கம்' என்ற நூல் ஆய்வரங்கம் – அருங்காட்சியகம், சேலம்
ஜூலை – செப்டம்பர் 2000	'புல்வெளி ஓவியப் பயிற்சி' – ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை பிற்பகலிலும் நடைபெற்றது. 60 மாணவ மாணவியர் பயன் பெற்றனர். வேலூர் மாவட்டஓவியர் சங்கம், ஸ்ரீ புற்று மகரிஷி சமூக மருத்துவ சேவா மையம் மற்றும் அரசு அருங்காட்சியகம், வேலூர்
04.09.2000	'ஓவியப்போட்டி' – 34 பள்ளிகளின் 340 மாணவ மாணவியருக்கு – அரசு அருங்காட்சியகம், திருவாரூர்.

கருத்தரங்குகள், பணிப்பட்டறைகள் மற்றும் சொற்பொழிவுகள்

சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களில் கீழ்க்கண்ட கருத்தரங்குகள், பணிப்பட்டறைகள், முகாம்கள் மற்றும் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

21.05.2000 – 26.05.2000	'தஞ்சாவூர் ஓவியம்' பணிப்பட்டறை – சென்னை அரசு அருங்காட்சியகமும் தேசிய நாட்டுப்புற இயல் உதவி மையமும் இணைந்து சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நடத்தியது. (கலை மற்றும் கல்விப்பிரிவுகள்)

03.07.2000 – 08.07.2000 'கலம்காரி ஓவியம்' – பணிப்பட்டறை சென்னை அரசு அருங்காட்சியகமும் சென்னை தேசிய நாட்டுப்புற இயல் உதவி மையமும் இணைந்து சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நடத்தியது. (கலை மற்றும் கல்விப் பிரிவுகள்)



05.09.2000 – 10.09.2000 'மதுபானி ஓவியம்' – பணிப்பட்டறை சென்னை அரசு அருங்காட்சியகமும் தேசிய நாட்டுப்புற இயல் உதவி மையமும் இணைந்து சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நடத்தியது (கலை மற்றும் கல்விப்பிரிவுகள்)

05.09.2000 'தமிழ்க்கடவுள் முருகன் : வரலாறும் தத்துவமும்' நூலின் திறனாய்வுக் கருத்தரங்கம் – தமிழ் அமைப்புகளான 'தமிழ் நேயம்' தமிழோசைப் பதிப்பகம் ஆகியவற்றுடன் இணைந்து வடகோவைக் கல்வியகத்தில் (அரசு அருங்காட்சியகம், கோவை)

12.09.2000 'கல்வெட்டுகளைப் படியெடுத்தல்' – பணிப்பட்டறை – மன்னர் கல்லூரி தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் மாணவர்களுக்கு –அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை

கருத்தரங்கு, பணிப்பட்டறைகளில் ஆய்வுக் கட்டுரை அளித்தல்

22.06.2000 அறிவார்ந்த பொருட்களைப் பாதுகாக்க பன்னாட்டுச் சட்டங்கள் – சென்னை ஆசியவியல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட பணிப்பட்டறையில் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப.,ஆணையர், அரசு அருங்காட்சியகம், சென்னை

23.06.2000 பண்பாட்டுப் பொருட்களைப் பாதுகாக்கும் இந்தியச்சட்டங்கள் – சென்னை ஆசியவியல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட பணிப்பட்டறையில் திரு க. இலக்குமிநாரராயணன், காப்பாட்சியர், கல்விப் பிரிவு, சென்னை

28.04.2000 ஈரோடு கல்வெட்டியல் கழக மாநாட்டில் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப.,ஆணையர், அரசு அருங்காட்சியகம், சென்னை கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

28.04.2000	'கல்வெட்டுகள் போன்றவற்றின் பாதுகாப்பு' – ஈரோடு கல்வெட்டியல் கழக மாநாட்டில் முனைவர் வே. ஜெயராஜ், காப்பாட்சியர், வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம், சென்னை
29.04.2000	'பாதுகாப்பு வல்லுநர்களுக்கெதிரான சவால்கள்' – அகில இந்திய அருங்காட்சியகங்களின் மாநாடு, திருச்சூர், முனைவர் வே. ஜெயராஜ், காப்பாட்சியர், வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம், சென்னை
29.05.2000	'தஞ்சாவூர் ஓவியப் பாதுகாப்பு' தஞ்சாவூர் பணிப்பட்டறையில் உரை, முனைவர் வே. ஜெயராஜ், காப்பாட்சியர், வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம், சென்னை
20.06.2000	1. 'பண்பாட்டுப் பொருட்களைப் பாதுகாக்க அரசின் நடவடிக்கைகள்' 2. பண்பாட்டுப் பொருட்களைப் பாதுகாக்க புதிய யுக்திகள் – சென்னை ஆசியவியல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட பணிப்பட்டறையில் முனைவர் வே. ஜெயராஜ், காப்பாட்சியர், வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம், சென்னை
19.08.2000 மற்றும் 20.08.2000	'சேதுபதி மன்னர் செப்பேடுகளில் கடல் வாணிபச் செய்திகள்' – தமிழகத் தொல்லியல் கழக 10வது கருத்தரங்கு, தஞ்சாவூர் – முனைவர் ஜெ. ராஜா முகமது, காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை
19.08.2000 – 20.08.2000	'சிந்துச் சமவெளி நாகரிகம் தமிழர்களுடையது' – கட்டடக்கலை ஓர் ஆதாரம் தமிழகத் தொல்லியல் கழக 10வது கருத்தரங்கு, தஞ்சாவூர் திரு செ. கோவிந்தராஜ்,காப்பாட்சியர்,அரசுஅருங்காட்சியகம், உதகமண்டலம்
21.08.2000	'தமிழ்நாட்டு நினைவுச் சின்னங்கள்' – தமிழ்நாடு வரலாற்றுக் கழகக் கருத்தரங்கம், கொடைக்கானல் – முனைவர் வே.ஜெயராஜ், காப்பாட்சியர், வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம், சென்னை
22.08.2000	'அப்புக்கல் புதையல் போர் வாட்கள்' – தஞ்சையில் நடைபெற்ற தொல்லியல் கழக 10–வது கருத்தரங்கு – திரு. ம. காந்தி, காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், வேலூர்

30.08.2000 'நீலகிரி உயிரிச் சூழல் மண்டலப் பழங்குடியினரது சுற்றுச் சூழல் குறித்த மரபார்ந்த அறிவுச் சொத்து' – கருத்தாளர் – கூடலூர் பகுதி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு பயிலரங்கு, பண்டிப்பூர், முனைவர் சி. மகேசுவரன், காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், கோவை

ஆகஸ்டு 2000 'இனம் கண்டறியப்படாத செப்புக் காசுகள்' – தென்னிந்திய நாணயவியல் கழகம் கர்நாடக மாநிலம் தார்வாரில் நடத்திய கருத்தரங்கு – திருமதி. இரா.சாந்தி, காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு, சென்னை

29.09.2000 'பங்கள நாடு' தமிழ்நாடு வரலாற்றுக் கழகக் கருத்தரங்கம் – கொடைக்கானல் திரு. ம. காந்தி, காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், வேலூர்.

23.09.2000 – 24.09.2000 ஐரோப்பிய அருங்காட்சியகங்களில் கோரமண்டலத் துணி வகைகள் (ஆங்கிலம்) – தமிழ்நாடு வரலாற்றுக் கழகக் கருத்தரங்கம், கொடைக்கானல் – முனைவர் ஜெ. ராஜா முகமது, காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை

22.09.2000 – 23.09.2000 'திராவிடப்பாணி துணின் தோற்றம்' – தமிழக வரலாற்றுப் பேரவையின் 7வது கருத்தரங்கு, கொடைக்கானல் – திரு செ. கோவிந்தராஜ், காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், உதகமண்டலம்

23.09.2000 – 24.09.2000 சிவகங்கை வேலு நாச்சியாரின் தமிழ்க் கல்வெட்டு' – தமிழக வரலாற்றுப் பேரவையின் 7வது மாநில மாநாடு, கொடைக்கானல் – திரு ந. சுந்தரராஜன்,காப்பாட்சியர்,அரசு அருங்காட்சியகம், கடலூர்

கருத்தரங்குகள்/பணிப்பட்டறைகளில் கலந்து கொள்ளல்

19.04.2000 – 21.04.2000 மைய அரசின் வெளி நாடுகளுக்கு கண்காட்சிக்காக அனுப்பப்படும் கலைப் பொருட்களின் மதிப்பை நிர்ணயம் செய்யும் குழுவில் புது தில்லியில் பங்கேற்றார் – திரு. இரா.பாலசுப்பிரமணியன், காப்பாட்சியர், தொல்பொருள் பிரிவு.

28.04.2000 – 30.04.2000 26வது அகில இந்திய கல்வெட்டாய்வாளர்கள் மாநாடு, ஈரோடு மற்றும் 20வது அகில இந்திய இடப் பெயராய்வுக் கழக மாநாடு, ஈரோடு –திரு. ஜெ. முல்லை அரசு, காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், ஈரோடு

29.04.2000 அகில இந்திய அருங்காட்சியகவியல் முகாம்' திருச்சூர் திரு. ம. காந்தி, காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், வேலூர்

19.06.2000 – 24.06.2000 'அறிவார்ந்த பொருட்களின் உரிமை – கலைச்செல்வக் காப்புரிமைப் பயிலரங்கு' – ஆசியவியல் நிறுவனம், சென்னை – திரு. ஜா.ரா. அசோகன், திரு. க. சேகர், திரு ந. சுந்தரராஜன், திரு க. சரவணன், காப்பாட்சியர்கள் மற்றும் திருமதி பிரேமதீபராணி, விளக்குநர்.

27.08.2000 கன்னியாகுமரி மாவட்டத்தில் மத, இனக் கலவரங்கள்–அமைதி அறக்கட்டளை நடத்திய கருத்தரங்கு–திரு. ந. சௌந்திர பாண்டியன், காப்பாட்சியர், அரசுஅருங்காட்சியகம், கன்னியாகுமரி

05.09.2000 'தமிழ்க்கடவுள் முருகன் – வரலாறும் தத்துவமும்' நூல் ஆய்வரங்கம், கோயம்புத்தூர் – திரு. செ. கோவிந்தராஜ், காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், உதகமண்டலம்

22.09.2000 – 24.09.2000 ஊருடகவாசிகளின் பாதுகாப்பு–அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர்–பயிலரங்கு–திரு பா. ஜவஹர், காப்பாட்சியர், விலங்கியல் பிரிவு.

திங்கள் சொற்பொழிவுகள்

பொதுமக்கள், மாணவர்கள், ஆய்வு மாணவர்கள் பயன்பெறும் வகையில் திங்கள் சிறப்புச் சொற்பொழிவுகள் கீழ்க் கண்டுள்ளவாறு சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களில் நடைபெற்றன.

சென்னையில்

20.04.2000 "கணிதத்திற்கான பண்பாட்டுச் சூழலில் 2000 கணித ஆண்டுக்கு வரவேற்பு"- திரு பி. கே. ஸ்ரீநிவாசன், காப்பாட்சியர் – இயக்குநர், இராமானுசன் அருங்காட்சியகம் மற்றும் கணித மையம், சென்னை – 600013

31.05.2000 இந்தியாவின் இயற்கை வளங்கள்– திரு சி.எஸ். குப்புராஜ், தலைமைப் பொறியாளர்(ஓய்வு),பொதுப்பணித் துறை, தமிழ்நாடு அரசு

28.06.2000 'சிந்துவெளி எழுத்து' – முனைவர் இரா. மதிவாணன், முதன்மைப் பதிப்பாசிரியர், அகரமுதலித்திட்ட இயக்ககம், சென்னை – 600008

20.07.2000 பல்லுயிர் பெருக்கம் எவர் உரிமை ? மனித தாவர உறவு–முனைவர் பி. தயானந்தன், தாவரவியல் துறைத் தலைவர், சென்னைக் கிருத்துவக் கல்லூரி

21.08.2000 தொழில் முனைவுத் தகைமை— முனைவர் ஆர். செயராமன், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தொழில் முனைவு ஆய்வியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

26.09.2000 இந்திய—தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பண்பாட்டுத் தொடர்புகள் — அகில உலக மகளிர் சங்க அறக்கட்டளைச் சொற்பொழிவு — முனைவர் கே.வி. இராமன், தொல்லியல் துறைப் பேராசிரியர் (ஓய்வு), சென்னைப் பல்கலைக்கழகம்

மாவட்டங்களில்

05.06.2000 'நாம் சந்திக்கும் சுற்றுச் சூழல் பிரச்சனைகள்' — திரு. குரு.ஆறுமுகம், துணைச் செயலர், சேலம் மாவட்ட இயற்கை மருத்துவர்கள் சங்கம், சேலம்

21.06.2000 'ஈரோடு மாவட்டத்தில் ஓவியக்கலை'—திரு. சிரீதர், தமிழ்நாடு ஓவியர் சங்கச் செய்தி தொடர்பாளர், ஈரோடு

05.07.2000 இந்தோ—டேனிசு நாணயங்கள் — நாணயவியல் அறிஞர் திரு. மா. கந்தசாமி, திருச்சி

11.07.2000 'மக்கட் தொகைப் பெருக்கமும் வேலை வாய்ப்பும்' — பொறியாளர் எம். எஸ். எஸ். இரவி, பொது மேலாளர், சேலம் மாவட்ட தொழில் மையம், சேலம்

24.08.2000 இந்தோ டச்சு நாணயங்கள் — நாணயவியல் அறிஞர் திரு. மா. கந்தசாமி, திருச்சி

30.08.2000 'தொன்மைச் சிறப்புகள்'—திரு. கி. பழனியாண்டி, தமிழாசிரியர், திருவாரூர்

21.09.2000 'சேலம் மாவட்ட ஊரும் பேரும்' — திரு. தாரை. ஆ.குமரவேலு, சேலம்

24.09.2000 'மூலிகை மருத்துவம்'—சித்த வைத்தியர்கள் திரு சோமசுந்தர், திரு. விஷ்ணுதேவ் மற்றும் அரசு கலைக்கல்லூரிப் பேராசிரியர் திரு. வேலுசாமி, கிருட்டிணகிரி

27.09.2000 'இதழியலும் தமிழ் இதழ்களின் வளர்ச்சியும்—' இலக்கியத் தென்றல், திரு வைரமாலை அந்தோணிசாமி, திருச்சி

பயிற்சிகளில் சிறப்புரை

17.07.2000 — 26.07.2000 கல்வெட்டுப் பயிற்சியில் —வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தை, மருத்துவர் கோ.சூடாமணி, முனைவர் செ. இராசு, புலவர் திரு. இரா.துரைசாமி, திரு க. இராஜவேலு, புலவர் கு.ப. பூங்குன்றன், திரு.. எஸ்.பி. திருநாவுக்கரசு, பேராசிரியர் க.ஆ. திருஞானசம்பந்தம் மற்றும் திரு பி. இராசேந்திரன், சேலம்

இவை தவிர காப்பாட்சியர்களின் பெயருக்கெதிரே உள்ளவாறு பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்றினர்.

திரு க. இலக்குமி நாராயணன், காப்பாட்சியர், கல்விப் பிரிவு

23.05.2000	தஞ்சாவூர் ஓவியங்கள் – அரசு அருங்காட்சியகம், சென்னை
04.07.2000	கலம்காரி ஓவியங்கள் – அரசு அருங்காட்சியகம், சென்னை
06.09.2000	மதுபானி ஓவியங்கள் – அரசு அருங்காட்சியகம், சென்னை
17.07.2000	கல்வெட்டுப் பயிற்சியில் சிறப்புரை – அரசு அருங்காட்சியகம், சேலம்
22.05.2000	ஓவியப் பயிற்சியில் சிறப்புரை – அரசு அருங்காட்சியகம், வேலூர்

முனைவர் வே.ஜெயராஜ், காப்பாட்சியர், வேதியியல் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம், சென்னை

09.05.2000	அருங்காட்சியகவியலில் வேதியியலின் பங்கு
23.05.2000	தஞ்சாவூர் ஓவியப் பாதுகாப்பு
01.06.2000 – 30.06.2000	அரும்பொருட் பாதுகாப்பு பயிற்சியில் பதினோரு தலைப்புகளில் உரை
15.08.2000	'புவியியல் பொருட்களைப் பாதுகாப்பதில் வேதியியலின் பங்கு' – புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் என்ற பயிற்சி

திரு பா.ஜவகர், காப்பாட்சியர், விலங்கியல் பிரிவு,

13–06–2000	'விலங்கியல் சேகரிப்புகள் பாதுகாப்பு' – அரும்பொருட் பாதுகாப்பு பயிற்சியில் உரை

திரு ம. மோகன், காப்பாட்சியர், வளர்கலைக்கூடம்,

07.05.2000	கலைப்பிரிவு சேகரிப்புகளின் இன வகைகள்
23.05.2000	'கலைப்பிரிவில் தஞ்சாவூர் ஓவிய இனவகைகள்' தஞ்சாவூர் ஓவியம் பணிப்பட்டறை
04.07.2000	கலைப்பிரிவில் கலம்காரி ஓவிய வகைகள் – கலம்காரி பணிப்பட்டறை
16.08.2000	'பலவித கல்மாறிகள்' – புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் பயிற்சி

திருமதி இரா. சாந்தி, காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு,

09.05.2000 'நாணயவியல் ஓர் அறிமுகம்' —சென்னை கிறித்துவக் கல்லூரி மாணவர்களுக்கு விரிவுரை

திரு தே.ஜவஹர் பிரசாத் ராஜ், காப்பாட்சியர், புவியியல் பிரிவு

16.06.2000 'புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் — அரும்பொருட் பாதுகாப்பு'பயிற்சி

26.08.2000 புவியியல் கூடத்தின் சிறந்த காட்சிப்பொருட்கள்— புவியியல் பொருட்களின் முக்கியத்துவம் பயிற்சி

திரு. ஜா. ரா. அசோகன், காப்பாட்சியர், வடிவமைப்புப் பிரிவு

19.06.2000 காட்சியமைப்பு மற்றும் கண்காட்சி யுக்திகள்— அரும்பொருட் பாதுகாப்பு' பயிற்சி

திருமதி ம. ந. புஷ்பா, காப்பாட்சியர், தாவரவியல் பிரிவு

10.05.2000 'தாவரங்களைப் பேணி காக்கும் முறைகள் அவற்றின் முக்கியத்துவம் '—சென்னை கிருத்துவக் கல்லூரி மாணவர்கள்

19—06.2000 'தாவரப் பொருட்களைப் பேணிப் பாதுகாக்கும் முறைகள்' — உலர் தாவரமாக்கும் வகைகள்— அரும்பொருட்பாதுகாப்பு பயிற்சி

முனைவர் சி. மகேசுவரன், காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், கோயம்புத்தூர்

03.04.2000 'சமுதாயத்தில் கலை பெறும் சிறப்பிடம்—கோவை வேளாண் பல்கலைக் கழகக் கலை மன்றத் தொடக்க விழாவில் சிறப்புரை

திரு ந. சௌந்திரபாண்டியன், காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், கன்னியாகுமரி

18.07.2000 அருங்காட்சியகமும் மாணவர்களும்—நாட்டு நலப் பணித் திட்ட முகாம்

திரு ந. சுந்தரராஜன், காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், கடலூர்

02.08.2000 'தமிழகச் சிறபங்கள்' — கடலூர் தூய யோசேப்பு கல்லூரியின் வரலாற்றுத் துறை மாணாக்கியர்க்கு

10.08.2000 'அருங்காட்சியங்கள்' – வள்ளியம்மாள் வித்யாலயா பள்ளியில் உரை

வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

28.04.2000 தூத்துக்குடி வானொலி – 'சுற்றுலாத் தகவல்' – மதுரை அருங்காட்சியகம்' என்னும் உரை – திரு சாம்சத்தியராஜ், காப்பாட்சியர், மதுரை

21.09.2000 'ஈரோடு தொலைக்காட்சி' – "ஈரோடு மாவட்ட அருங்காட்சியகம்"

18.04.2000 கோவை வானொலி 'கொங்கு வட்டாரத்தின் மரபுச் செல்வங்கள் 'தமிழ்உரை முனைவர் சி. மகேசுவரன், காப்பாட்சியர், கோயமுத்தூர் (ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் 2000 மாதங்களில் மும்முறை ஒலி பரப்பப்பட்டது)

20.07.2000 திருநெல்வேலி வானொலி 'கன்னியாகுமரி அருங்காட்சியகத்தில் ஒரு நாள்' –திரு ந. சௌந்திரபாண்டியன், காப்பாட்சியர், கன்னியாகுமரி

அருங்காட்சியகம், காட்சிக் கூடச் சீரமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள்:

சென்னையில்:

தொல்பொருள் பிரிவு	படிமக் கூடத்தில் காட்சியில் உள்ள பெரிய படிமங்கள் அனைத்திற்கும் 'அக்ரலிக்' தகடுகளால் பாதுகாப்பு பெட்டிகள் அமைக்கும் பணிகள் மற்றும் அமராவதி சிற்பங்களைப் புகைப்படமெடுத்து, ஆவணமாக்கும் பணிகள்
விலங்கியல் பிரிவு	இரு சுற்றுச் சூழல் காட்சியமைப்புக் காட்சிப் பெட்டிகள் செப்பனிடப்பட்டு கடம்பை மான், கழுதைப் புலி ஆகியவை காட்சிப் படுத்தும் பணிகள்
தாவரவியல் பிரிவு	சங்க காலத் தாவரங்களைக் காட்சிப்படுத்தும் பணி தொடரப்பட்டது.
மானிடவியல் பிரிவு	காட்சிக் கூடங்களிலும் சேமிப்பிலும் இருந்து பல்வேறு வகையான மானிடவியற் பொருட்கள் வேதியியப் பாதுகாப்பளிக்கப்பட்டு மீண்டும் காட்சிப்படுத்தும் பணிகள்
நாணயவியல் பிரிவு	பதக்கங்கள் காட்சிப் பெட்டியில் காட்சி சீரமைப்புப் பணி, இருப்புத் தொகுப்பிலிருந்து

	467 நாணயங்களுக்கு வேதியியப் பாதுகாப் பளித்து ஆய்வுப் பணிகள்
புவியியல் பிரிவு	ஒரு காட்சிப் பெட்டி சீரமைக்கப்பட்டு இயற்கைச் சூழலில் புவியியல் காட்சிப் பொருள்களைக் காட்சியமைக்கும் பணி
சிறுவர் அருங்காட்சியகம்	நாகரீகங்கள் கூடத்தில் சீன நாகரீகம், கிரேக்க நாகரீகம், பண்டைய தமிழகம் காட்சிப் பெட்டிகள் சீரமைக்கும் பணிகளும், இயற்பியல் பகுதியில் இரு வாரங்களுக்கு ஒரு முறை மாற்றி மாற்றி 12 மின் அணு இயங்கும் மாதிரிகளைக் காட்சிப்படுத்தும் பணிகள்
வடிவமைப்பு மற்றும் காட்சியமைப்புப் பிரிவு	சென்னை அருங்காட்சியக் காட்சிக் கூடப் பராமரிப்புப் பணிகள், சிறப்புக் கண்காட்சி, கணிப் பொறிகள், வலைதளம், சிறப்பு ஒளி அமைப்பு, நூல்கள் வெளியீடு
வளர்கலைக் கூடம் மற்றும் தேசியக் கலைக் கூடம்	சர் அயர் கூட், லார்ட் பெண்டிங், லார்ட் நேப்பியர் ஓவியங்கள் வேதியியப் பாதுகாப்பளிக்கப்பட்ட பின் காட்சிப்படுத்தும் பணி
ல்விப் பிரிவு	பள்ளி, கல்லூரி மாணாக்கியருக்கு விளக்குநர் சேவை, சிறப்பு விருந்தினர் வருகை, திங்கள் சிறப்புச் சொற்பொழிவுகள், பணிப்பட்டறை தொடர்பான ஏற்பாடுகள்

மாவட்டங்களில்

புதுக்கோட்டை	அருங்காட்சியகக் கட்டிடச் சீரமைப்புப் பணிகள் மற்றும் பழுதுகள் நீக்கும் பணி சுமார் 2 இலட்சம் செலவில் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது
மதுரை	ஓவியங்களைக் காட்சியமைக்க ஏதுவாக 6'X4' அளவில் 4 காட்சிப் பலகைகள் வடிவமைக்கும் பணிகள், புதிய அருங்காட்சியக பெயர்ப் பலகை செய்தல் மற்றும் விலங்கியல் காட்சிக் கூடத்தில் கூடுதல் ஒளியமைப்புப் பணிகள்
திருச்சிராப்பள்ளி	அருங்காட்சியகம் அமைந்துள்ள இராணி மங்கம்மாள் மண்டபக் கட்டிடப் பாதுகாப்புப் பணிகள் ரூ 4.00 இலட்சம் செலவிலும் புதிய காட்சிப் பெட்டிகள் ரூ.1.00 இலட்சம் செலிவலும் அமைக்கும் பகுதி 2 திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வேலூர்	படிமங்கள், நாணயங்கள், கைவினைப் பொருட்கள், போர் வாள்கள் மற்றும் இயற்கையியல் காட்சிப் பொருட்கள் புதிய காட்சிப் பெட்டிகளில் காட்சிப் படுத்தும் பணி
கோயம்புத்தூர்	காடர் பழங்குடியினரது 'குடில் மாதிரி உரு' – பிரிக்கப்பட்டு மீள உருவாக்கும் பணிகள் மற்றும் போஜ்பத்தர் மரப்பட்டையை காட்சியமைக்கும் பணி
கடலூர்	சமீப காலப் பயன்பாட்டுப் பொருட்களான அம்மி, கல்சட்டி, வீசைக்கல், கடிகாரம் வைக்கும் பெட்டி போன்றவை தனிக் காட்சிப் பெட்டியில் காட்சிப்படுத்தும் பணி
திருநெல்வேலி	புதிய வளாகத்தில் அருங்காட்சியகத்தின் அனைத்து காட்சிக் கூடங்களையும் முழுமையாகச் சீரமைக்கும் பணிகள்
கன்னியாகுமரி	ஒரு புதிய காட்சிப் பெட்டி அமைக்கும் பணி, சுடுமண் பொம்மைகளைக் காட்சிப்படுத்தும் பணி மற்றும் தேசிய நலத் திட்ட மாணவர்களைக் கொண்டு அருங்காட்சியக வளாகத் தூய்மைப் பணி
கிருட்டிணகிரி	தருமபுரி மாவட்டக் கோட்டைகளின் புகைப்படங்கள், கிருட்டிணகிரி கோட்டையின் பெரிய அளவிலான புகைப்படம், புதிதாகக் கொண்டு வரப்பட்ட நடுகல் மற்றும் விசயநகரக் காலக் கல்வெட்டு ஒன்றை காட்சிப்படுத்தும் பணிகள்
நாகப்பட்டினம்	கற்சிற்பங்களுக்கு புதிய பீடங்கள் அமைக்கும் பணி, இயங்கும் மாதிரிகள் சீரமைக்கும் பணி மற்றும் அருங்காட்சியக வெளியீடுகளைப் பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தும் பணி
காஞ்சிபுரம்	பதப்படுத்தப்பட்ட விலங்கினங்கள், மரச் சிற்பங்கள், நாணயங்கள் மற்றும் பாரிசுச் சாந்து மாதிரிகளைக் காட்சிப் படுத்தும் பணி

கண்காட்சிகள்

26.05.2000 – 25.06.2000	'தஞ்சாவூர் ஓவியங்கள்' – கல்வி மற்றும் வளர்கலைப் பிரிவுகள்
01–06–2000	'சென்னை கிறித்துவக் கல்லூரியின் சீரமைக்கப்பட்ட ஓவியங்கள்' – வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம்

30.06.2000 – 06.07.2000 'அரும்பொருட் பாதுகாப்பு' – வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம். சிறப்பு விருந்தினர் கண்காடசியைப் பார்வையிடுகிறார்.

07.07.2000 – 11.07.2000 'கலம்காரி ஓவியங்கள்' –கல்வி மற்றும் வளர்கலைப் பிரிவுகள்

12–7–2000 – 14–7–2000 'சிறப்பு மூலிகைக் கண்காட்சி'' – தாவரவியற் பிரிவு மற்றும் அரசு சித்த மருத்துவக் கல்லூரி

18–08–2000 'புவியியல் பொருட்களின் முக்கியத்துவம்' – புவியியல் பிரிவு

06.09.2000 – 11.09.2000 மதுபானி ஓவியங்கள்' – கல்வி மற்றும் வளர்கலைப் பிரிவுகள்

மாவட்டங்களில்

14.06.2000 – 22.06.2000 'பாத்திக் ஓவியங்கள்' – மதுரை

05.07.2000 – 04.08.2000 இந்தோ டேனிசு நாணயங்கள் – திருச்சிராப்பள்ளி

24.08.2000 – 23.09.2000 இந்தோ டச்சு நாணயங்கள் – திருச்சிராப்பள்ளி

30.08.2000 – 31.08.2000 'நாணயங்கள் ' – சேலம்

01.09.2000 – 15.09.2000 அப்புக் கல் புதையல் போர் வாள்கள் – வேலூர்

22.05.2000 – 05.06.2000 ஓவியப் பயிற்சியில் வரையப்பட்ட ஓவியங்கள் – வேலூர்

24.09.2000 'சித்த மருத்துவ மூலிகைகள்' – கிருட்டிணகிரி

அருங்காட்சியகம் இட மாற்றம்

01–04–2000 திருநெல்வேலி அரசு அருங்காட்சியகம், பாளையங்கோட்டை, சமாதானபுரம் புனித மார்க் சாலைக்கு மாற்றப்பட்டது.

நூல் வெளியீடுகள்

1.	Documentation on the Cannons in the Government Museum, Chennai	முனைவர். ரா.கண்ணன்,இ.ஆ.ப., அருங்காட்சியகங்களின் ஆணையர்
2.	Holistic Approach to Dating in Ancient History Especially Indian History (Monograph)	முனைவர். ரா.கண்ணன்,இ.ஆ.ப., அருங்காட்சியகங்களின் ஆணையர்
3.	சென்னை கிறித்துவக் கல்லூரி ஓவியங்கள் பராமரிப்பு	முனைவர்வே.ஜெயராஜ், காப்பாட்சியர் வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம்
4.	அருங்காட்சியக மலர் (அக்டோபர் 1999 – மார்ச் 2000)(தமிழ் மற்றும் ஆங்கிலம்)	முனைவர் வே.ஜெயராஜ், மற்றும் திரு க. சேகர், காப்பாட்சியர்கள்
5.	திமிங்கலங்கள்	திரு.ஜா.ரா.அசோகன், காப்பாட்சியர்,வடிவமைப்புப் பிரிவு
6.	இந்திய –தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பண்பாட்டுத் தொடர்புகள்	முனைவர். கே.வி.இராமன்

கட்டுரை வெளியீடுகள்

முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., ஆணையர், அரசு அருங்காட்சியகம், சென்னை.

1. Museum Management, அருங்காட்சியக மலர், மே –2000 (ஆங்கிலம்)
2. Museum: A Bridge Between Old Cities and New Cultures, அருங்காட்சியக மலர், மே– 2000 (ஆங்கிலம்)
3. Use of Modern Management Techniques Like Participatary Approach and Project Management for Establishment of New District Museums, அருங்காட்சியக மலர், மே– 2000 (ஆங்கிலம்)

திரு க. இலக்குமிநாராயணன், காப்பாட்சியர், கல்விப் பிரிவு

1. 'தமிழக வரலாற்றில் பழங்குடிகள்' – அருங்காட்சியக மலர், மே 2000

முனைவர் வே.ஜெயராஜ்,காப்பாட்சியர்,வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம்

1. வேதியியப் பாதுகாப்பு ஆராய்ச்சி ஆய்வகமும் பாதுகாப்புச் சேவையும் – அருங்காட்சியக மலர், மே – 2000
2. சென்னை மருத்துவக் கல்லூரி ஓவியங்கள் சீரமைப்பு – அருங்காட்சியக மலர், மே–2000 (ஆங்கிலம்)
3. ஒரு சீன நாணயத்தின் பகுப்பாய்வு, சிறப்பு மலர், சென்னை நாணயவியல் கழக வெளியீடு, மே –1999 (ஆங்கிலம்)
4. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் வேதியியப் பாதுகாப்புச் சேவை – அருங்காட்சியக மலர், மே –2000 (ஆங்கிலம்)
5. சென்னை கிறித்துவக் கல்லூரி ஓவியங்களின் பராமரிப்பு – கைப்பிரதி 01–06–2000
6. கலைப் பொருட் பாதுகாப்பு – கைப்பிரதி, 30–06–2000

திரு தே. ஜவகர் பிரசாத் ராஜ், காப்பாட்சியர், புவியியல் பிரிவு

1. கல்மாறிகள் – அருங்காட்சியக மலர், மே –2000 (ஆங்கிலம்)

திருமதி ம.ந.புஷ்பா, காப்பாட்சியர், தாவரவியல் பிரிவு

1. இயற்கையில் தாவரங்களின் ஒத்திசைவு – அருங்காட்சியக மலர், மே 2000

திரு க.சேகர், காப்பாட்சியர், சிறுவர் அருங்காட்சியகம்

1. சென்னை அரசு அருங்காட்சியகச் சிறுவர் அருங்காட்சியகம் – அருங்காட்சியக மலர், மே– 2000

திரு பா.ஜவகர், காப்பாட்சியர், விலங்கியல் பிரிவு

1. கொரில்லா மனிதன் – அருங்காட்சியக மலர், மே – 2000

திரு ஐ.ரா.அசோகன், காப்பாட்சியர், வடிவமைப்பு பிரிவு

Use of Modern Management Techniques Like Participatory Approach and Project Management for Establishment of New District Museums- அருங்காட்சியக மலர், மே 2000

திரு. இரா.பாலசுப்பிரமணியன், காப்பாட்சியர், தொல்பொருள் பிரிவு

1. ஒரு அரிய சதாசிவக் கற்சிற்பம் – அருங்காட்சியக மலர் மே – 2000

திரு ம.மோகன், காப்பாட்சியர், வளர்கலைப் பிரிவு

1. The Classical Art of Contemporary Indian Art - அருங்காட்சியக மலர் மே 2000

திரு ம.காந்தி, காப்பாட்சியர், வேலூார்

1. ஆலங்குப்பம் நந்திவர்மன் கல்வெட்டு – ஆவணம், இதழ் 11 ஆகஸ்ட் 2000
2. கள்ளக்குறிச்சி வட்டம், நீலமங்கலத்துப் புதையல் – ஆவணம் இதழ் 11 ஆகஸ்ட் 2000 உலோகச் சிலைகள்
3. வாலாசாபேட்டை வட்டம், ஒழுகூர், வைநாயகி கற்சிலை– ஆவணம் இதழ் 11, ஆகஸ்ட் 2000
4. வாணியம்பாடி வட்டம், மாதனூார் பொன் நகரில் இருந்து சேகரித்த தீர்த்தங்கரர் கற்சிலை – ஆவணம் இதழ் 11, ஆகஸ்ட் 2000

திரு ஜெ. முல்லைஅரசு, காப்பாட்சியர், ஈரோடு

1. காஞ்சிக்கோயிலும், பழம்பெருமையும் – அருங்காட்சியக மலர், மே – 2000

திரு செ.கோவிந்தராஜ், காப்பாட்சியர், உதகமண்டலம்

1. 'குடுமியான்மலை தமிழ் பிராமிக் கல்வெட்டில் ஒரு திருத்தம்' – ஆவணம் இதழ் 10 – 2000.
2. 'திராவிட பாணி தூணின் தோற்றம் ' – தமிழ்நாடு வரலாற்று பேரவையில் ஏழாவது மாநாட்டு மலர் – ஆய்வுக் கட்டுரை சுருக்கம்
3. நந்திகேசுவரருக்கு குரங்கு முகம் – அருங்காட்சியக மலர், மே– 2000
4. புதுக்கோட்டைப் பகுதியில் பாசுபத மூர்த்தி சிற்பங்களின் கண்டுபிடிப்பு – அருங்காட்சியக மலர், மே – 2000

முனைவர் சி.மகேசுவரன்,காப்பாட்சியர், கோயமுத்தூர்

1. கத்தரி – காடர் பழங்குடியினரது வேட்டையாடும் பொறி – அருங்காட்சியக மலர், மே 2000

திரு சொ. சீனிவாசன், காப்பாட்சியர், திருநெல்வேலி

1. தென்னிந்திய மந்தக் கரடிகள் – அருங்காட்சியக மலர், மே 2000

திருமதி ரு. தே. துளசி பிருந்தா, காப்பாட்சியர், கிருட்டிணகிரி

1. திமிங்கிலங்கள் – அருங்காட்சியக மலர், மே – 2000
2. கிருட்டிணகிரி மியூசியம் – தினகரன் – அக்டோபர் 2000
3. நடுகற்கள் – தினமணி – அக்டோபர் 2000

திரு அ. பெரியசாமி, காப்பாட்சியர், பழனி

1. திண்டுக்கல் மாவட்டத்தின் கல்வெட்டுகள் – அருங்காட்சியக மலர், மே 2000
2. திண்டுக்கல் மாவட்டத்தின் கோட்டைகள் – அருங்காட்சியக மலர், மே 2000.
3. திண்டுக்கல் மாவட்டத்தின் கல்வெட்டுகள் –கைப்பிரதி, 0.08.2000.

திருமதி ஜா. மோ. காந்திமதி, காப்பாட்சியர், காஞ்சிபுரம்

1. மரபு மற்றும் சமகால நுண்ணோவியங்கள் – அருங்காட்சியக மலர், மே – 2000.

ஆராய்ச்சித் திட்டங்கள்

அருங்காட்சியகங்களின் பணிகளுள் ஆராய்ச்சி சிறந்த பங்கு வகிக்கிறது. காப்பாட்சியர்கள் தங்கள் துறையைத் தவிர பிற துறைகளிலும் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடுகின்றனர். அவைகளில் குறிப்பிட்ட சில கீழே தரப்பட்டுள்ளன.

1. தென்னிந்தியப் படிமங்களை அடையாளமிடுதல்– இந்திராகாந்தி அணு ஆய்வு மையம் கல்பாக்கம் உதவியுடன் (வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகமும் தொல்லியல் பிரிவும்)
2. படிமங்களை முப்பரிமாண முழுப்படம் எடுத்தல் – அண்ணா பல்கலைக் கழக உதவியுடன் (வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகமும் தொல்லியல் பிரிவும்)
3. தமிழ்நாட்டு நினைவுச் சின்னங்கள் – முனைவர் வே.ஜெயராஜ், நேரு அறக்கட்டளை, புதுதில்லி உதவியுடன்
4. புதுக்கோட்டை மாவட்ட துறைமுகங்கள் தொடர்பான ஆய்வு அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை.

5. பழங்குடியினரது கலைகள், கைவினைப் பொருட்களை ஆவணமாக்கல் மற்றும் மூங்கில் ஆவணங்களின் செய்திகளை வெளிக்கொணர்தல் தொடர்பான ஆராய்ச்சித் திட்டம்– முனைவர் சி. மகேசுவரன், காப்பாட்சியர், கோயமுத்தூர்

ஆய்வு அறிக்கைகள்

1. சிங்கம் செட்டி அதீந்துருலு செட்டி அறக்கட்டளையின் இரண்டு ஓவியங்களுக்கான பாதுகாப்பு அறிக்கை, ஜூலை 2000– முனைவர் வே.ஜெயராஜ்
2. 'பிரிட்டானிகா என்சைக்ளோபீடியா' நூல் பாதுகாப்பு முறைகள் – ஜூலை 2000–முனைவர் வே.ஜெயராஜ்
3. ஸ்ரீகண்டேசுவரனின் இரு ஓவியங்களின் பாதுகாப்பு அணுகுமுறைகள்–ஆகஸ்டு 2000– முனைவர் வே.ஜெயராஜ்
4. மைய அரசின் நுண்கலைக் குழுவின் ஓவியங்கள் மற்றும் கலைப் பொருட்களின் பாதுகாப்பு–செப்டம்பர், 2000– முனைவர் வே. ஜெயராஜ்

பாதுகாப்புச் சேவை

சென்னை கிறித்துவக் கல்லூரிக்கு 13 எண்ணெய் வண்ண ஓவியங்கள், இந்திய தொல்லியல் ஆய்வுத் துறைக்கு 4 செப்புப் பொருட்கள் கட்டண அடிப்படையில் பாதுகாத்துத் தரப்பட்டன.

பாதுகாப்புப் பணிகள்

சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களைச் சார்ந்த 22 படிமங்கள், 22 இரும்பு ஆயுதங்கள், 24 செப்பேடுகள், 467 செப்பு நாணயங்கள், 17 கற்சிற்பங்கள், 10 சுட்டமண் பொம்மைகள், 24 மரச் சிற்பங்கள், 10 தோற்பாவைகள், 5 இசைக் கருவிகள், 10 மானிடவியல் மூங்கில் பொருட்கள், 27 ஓவியங்கள், 30 பனை ஓலைச் சுவடிகள் தகுந்த முறையில் தூய்மை செய்யப்பட்டு வேதியியப் பாதுகாப்புப் பிரிவில் சீரமைக்கப்பட்டன.

12 பறவைகள், 3 குளத்து ஆமைகள், 1 மலைப் பாம்பு, 1 கடல்பசு, தேவாங்கின் எலும்புக் கூடுகள், கங்காரு, கழுதைப் புலி, கடம்பை மான் ஆகியவற்றிற்கு வேதியியப் பாதுகாப்பும் சேமிப்பு உயிரிகள் உள்ள 300 ஜாடிகள் மற்றும் காட்சிக் கூடத்திலுள்ள 42 ஜாடிகளில் பார்மலின்/சுத்திகரிக்கப்பட்ட சாராயம் நிரப்பப்பட்டு காட்சிப்படுத்தும் பணிகள் விலங்கியல் பிரிவில் மேற்கொள்ளப்பட்டன.

அலுவலர் மாற்றங்கள்

1.திரு சொ.சீனிவாசன், உதவிக் காப்பாட்சியர், விலங்கியல் பிரிவு பதவி உயர்வில் திருநெல்வேலி அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியராக 23-04-2000 இல் பொறுப்பேற்றார்.

2.திருமதி ச. சுகந்தா, உதவி இயக்குநர் (நிர்வாகம்)30.04.2000 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

3.திருநெல்வேலி,அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியர்,திருமதி சே.கிருஷ்ணம்மாள், இராமநாதபுரம்,அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியராக 13-05-2000 இல் பொறுப்பேற்றார்.

4.திரு கோ.காளத்தி, உதவிக் காப்பாட்சியர், மானிடவியல் பிரிவு, பதவி உயர்வில் கரூர் அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியராக 05-06-2000 இல் பொறுப்பேற்றார்.

5.திரு இரா. பாலசுந்தரம், அலுவலகக் கண்காணிப்பாளர், உதவி இயக்குநர் (நிர்வாகம்) ஆக 24.08.2000 அன்று மேனிலைப் படுத்தப் பட்டார். 30.09.2000 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஆய்வுப் பயணங்கள்

1. சென்னை, மையத் தோலாராய்ச்சி நிறுவன அருங்காட்சியகம், சிங்கம் செட்டி அறக்கட்டளையிலுள்ள இரு ஓவியங்கள் பராமரிப்பு, மைய அரசின் லலித் கலா அகாடமியின் கலைப்பொருட்கள் ஆய்வு மற்றும் காஞ்சிபுரம் அருங்காட்சியகம் சென்று அரும்பொருட்களின் ஆய்வறிக்கை வழங்கப்பட்டது.(முனைவர் வே.ஜெயராஜ், காப்பாட்சியர், வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராயச்சி ஆய்வகம்)

2. சென்னை பேசின் பாலத்தில், ரயில் தடயத்தில் கிடைத்த தங்கக் கட்டிகள் மற்றும் சென்னை தம்புச் செட்டி தெருவில் கிடைத்த புதையல் நாணயங்களை, சென்னை மாவட்ட ஆட்சியரின் அலுவலக அறையில் ஆய்வு செய்து அவை கிழக்கிந்தியக் கம்பெனியார் சென்னையிலிருந்து வெளியிட்ட ‘பகோடா’ தங்க நாணயங்கள் என கண்டறியப்பட்டன (திருமதி இரா.சாந்தி, காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு)

3. விழுப்புரத்தில், புதிய அருங்காட்சியகம் அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடம் ஆய்வு-திரு ஜா.ரா.அசோகன், காப்பாட்சியர், வடிவமைப்புப் பிரிவு

4. திருநெல்வேலி அருங்காட்சியகப் புதிய வளாகத்தில் காட்சியமைப்புகள் தொடர்பான ஆய்வு-திரு ஜா.ரா.அசோகன், காப்பாட்சியர், வடிவமைப்புப் பிரிவு

5. தேசிய அருங்காட்சியம், புதுதில்லிக்கு 'அருங்காட்சியகப் பொருட்களை கணிப் பொறியில் பதிவு செய்தல்' தொடர்பான கருத்தாய்வு கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்-திரு ஜா.ரா.அசோகன், காப்பாட்சியர், வடிவமைப்புப் பிரிவு.

6. வெளிநாடுகளுக்கு கண்காட்சிக்காக அனுப்பப்படும் 'கலைப் பொருட்களின் மதிப்பு நிர்ணயம் செய்யும் மைய அரசின், குழுவில் புதுதில்லியில் ஏப்ரல் 19 முதல் 21 வரை பங்கேற்பு (திரு இரா. பாலசுப்பிரமணியன், காப்பாட்சியர், தொல் பொருள் பிரிவு)

7. திருச்சி அருங்காட்சியகக் காட்சிப் பொருட்களைச் சரிபார்க்கும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் புதிதாக மூன்று கல்வெட்டுகள் மற்றும் மாவட்டத்திலேயே முதன் முறையாக 'தலைப்பலி சிற்பம் ' ஒன்றும் பழங்கரை கிராமத்தில் உள்ள பாண்டியர் காலக் கோவிலில் புதிதாக நான்கு கல்வெட்டுக்களையும் கண்டுபிடித்துள்ளார். முனைவர் ஜெ. ராஜா முகமது, காப்பாட்சியர் அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை

8. ஈரோடு அருங்காட்சியகம் மற்றும் கிருட்டிணகிரி அருங்காட்சியகக் காட்சிப் பொருட்களைச் சரிபார்க்கும் ஆய்வு மற்றும் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கற்சிலை ஆய்வு – திரு ப. காசிலிங்கம், காப்பாட்சியர், சேலம்

9. வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் இரு நடுகற்கள் ஆய்வு மற்றும் திருநெல்வேலி அருங்காட்சியகக் காட்சிப் பொருட்களைச் சரிபார்க்கும் ஆய்வு – திரு பா. சாம்சத்தியராஜ், காப்பாட்சியர், மதுரை

10. மஜரா ஆனந்திமேடு கிராம புதைபொருட்களான தங்க 'மயில் தாலி' உள்ளிட்ட பொருட்கள் ஆய்வு, நாச்சியார்கோயில் ஸ்ரீனிவாசபெருமாள் ஆலய நந்தவனத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கற்சிலைகள் ஆய்வு மற்றும் உன்னியூர் கிராமப் புதைப்பொருட்களான தங்கக் கம்பிகள் ஆய்வு – திரு ப. இராசமோகன், காப்பாட்சியர், திருச்சி

11. 'தொல் பழங்காலப் பாறை ஓவியங்கள்', நீலகிரி மாவட்டம், இடுகட்டி என்னும் இடத்தில் ஆய்வு –(அருங்காட்சியகங்களின்

ஆணையருடன்) திரு செ.கோவிந்த ராஜன், காப்பாட்சியர், உதகமண்டலம்

12. பாலமலை கோவில்பாளையம், உதகமண்டலம், காளப்பட்டி, 'ஆல்குத்தி (முதுகர் குடியிருப்பு பகுதி), வெள்ளரிக் கொம்பை ஆகிய பழங்குடியினர் பகுதியில் கள ஆய்வு – முனைவர் சி. மகேசுவரன், காப்பாட்சியர், கோயமுத்தூர்

13. அத்தியூர் கிராமம் ஸ்ரீநிவாசர் சிலை, அரும்பராம்பட்டு கிராமத்தில் கிடைத்த உருக்கிய தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள், மேல்நாரியப்பனூர் கிராமத்தில் கிடைத்த வெள்ளிக் காசுகள், பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடராசர் சிலை, வடதொரச்சலூர் கிராமத்தில கிடைத்த 32 தங்கக் காசுகள், கொட்டாபாக் சந்து வேலி கிராமத்தில் கிடைத்த சுடுமண் உறைக் கிணறு, ஆய்வு – திரு ந. சுந்தரராஜன், காப்பாட்சியர், கடலூர்.

14. இரணியன்குளம் கிராமத்தில் 10 கற்சிலைகள், மானூர் – வெங்கலப் பொட்டில் கிராமத்தில மகாவீரர் சிலை மற்றும் இராமநாதபுரம் அருங்காட்சியக காட்சிப் பொருட்களைச் சரிபார்க்கும் ஆய்வு – திரு சொ. சீனிவாசன், காப்பாட்சியர், திருநெல்வேலி

15. விளவங்கோடு பத்ரேசுவரி அம்மன், குழிச்சல் கிராமத்தில் கிடைத்த சீனிவாசர் கற்சிற்பம் ஆய்வு, மதுரை அருங்காட்சியகக் காட்சிப் பொருட்கள் சரிபார்க்கும் ஆய்வு, திருவிதாங்கோடு சக்தியம்மன் கோயிலில் உதிரிச் சிற்பங்கள், கல்தூண்களின் புடைப்புச் சிற்பங்கள் ஆய்வு – திரு ந. சௌந்திரபாண்டியன், காப்பாட்சியர், கன்னியாகுமரி

16. நிலக்கோட்டை வட்டம், மட்டப் பாறை கிராமச் சிலை ஆய்வு மற்றும் கன்னியாகுமரி மாவட்ட அருங்காட்சியகப் பொருட்களைச் சரிபார்க்கும் ஆய்வு – திரு அ. பெரியசாமி, காப்பாட்சியர், பழனி

17. கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெருங்கற்கால முதுமக்கள் தாழி, ஆவூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் பெருங்கற்கால முதுமக்கள் தாழி, திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடராசர் மற்றும் தேவி படிமங்களையும், வழிபாட்டு விளக்கு, கற்பூரத் தட்டு ஆகிய உலோகப் பொருட்களையும் குடவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில 'சரசுவதி' படிமம் ஒன்றும் ஆய்வு செய்யப்பட்டன. – திரு கு. கருணாநிதி, காப்பாட்சியர், திருவாரூர்

18. மதுர மங்கல கிராமத்தில் கற்சிலை, திருப்புட்குழி கிராம புதைப்பொருட்களான 51 உலோகவழிபாட்டுப் பொருட்கள், வளையாப்புத்தூர் கிராமத்தில், இராமர், இலட்சுமணர் மற்றும்

ஆஞ்சநேயர் படிமங்கள், மதுராந்தகம் நகர பக்தனின் கற்சிலை, தின்னனூர் கிராமத்தில் தங்கம் மற்றும் செம்பு நாணயங்கள், பெருமாஞ்சேரி கிராமத்தில் கிடைத்த ஒன்பது வகையான 84 ஈமப் பொருட்களின் ஆய்வு–திருமதி ஜா. மோ. காந்திமதி, காப்பாட்சியர், காஞ்சிபுரம்

19. மரைக்காயர்பட்டினம் கடலில் கண்டெடுக்கப்பட்ட அம்மன் சிலை, பனிக்கரடி கிராமத்தில் துர்க்கை அம்மன் சிலை, ஆனந்தூரில் கோயில் திருப்பணிகளை மேற்கொள்ளும்போது கிடைத்த புதைப்பொருட்களான 20 படிமங்கள் ஆய்வு செய்யப்பட்டன–திருமதி சே. கிருஷ்ணம்மாள், காப்பாட்சியர், இராமநாதபுரம்

20. வெள்ளி அணை நத்தமேடு கிராமத்தில் மூன்று கருங்கல் செக்குகளும், ஐயர்மலை அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள சிவன் கோயில், அங்கு கிடைத்த மக்கிய நிலையிலுள்ள ஓலைச் சுவடிகளின் ஆய்வு–திரு கோ. காளத்தி, காப்பாட்சியர், கரூர்.

பார்வையாளர்கள்

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலத்தில் அருங்காட்சியகத்துறையின் கீழுள்ள அருங்காட்சியகங்களுக்கு வருகை புரிந்த மாணாக்கருள்ளிட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

சென்னை	157310
புதுக்கோட்டை	25450
சேலம்	5759
மதுரை	32567
திருச்சி	12487
வேலூர்	16384
ஈரோடு	4660
உதகமண்டலம்	2367
கடலூர்	2182
திருநெல்வேலி	5300
கன்னியாகுமரி	3309
கிருட்டிணகிரி	4200
பழனி	12096
திருவாரூர்	11999
நாகப்பட்டினம்	5586
காஞ்சிபுரம்	3210
இராமநாதபுரம்	7367
கரூர்	7200

விற்பனையிலுள்ள வெளியீடுகள்

Sl. No	Titles and Authors	Price Rs.
1.	Descriptive Catalogue of Butterflies In The Collection Of Madras Museum- *S.Thomas Satyamurti*	231.00
2.	The Echinodermata In The Collection of Madras Government Museum- *S. Thomas Satyamurti*	36.40
3.	The Wild Ferns Of Madras City And Its Immediate Neighbourhood- *M.S. Chandrasekar*	7.10
4.	The Birds' Eggs And Nests In The Collection Of The Madras Government Museum- *S. Thomas Satyamurti*	43.95
5.	Grasshoppers In The Collection of The Government Museum- *G. Kesavaram*	85.00
6.	Guide To The Bird's Gallery- *S. Thomas Satyamurti*	11.30
7.	பாலூட்டிகள் – *S. Thomas Satyamurti*	8.30
8.	Guide To The Principal Exhibits In The Geological Galleries- *E. George Jesudosan*	13.55
9.	Guide To The Important Monuments In And Around Pudukkottai- *M. Raghupathy*	30.00
10	Guide To The Archaeological Galleries – An Introduction To South Indian Temple Architecture And Sculpture *-F. H. Gravely & C. Sivaramamurti*	25.00
11	Guide To The Buddhist Antiquities- *A.Aiyppan & P. R. Srinivasan*	30.00
12	Guide To The Anthropological Exhibits *-C. J. Jayadev*	39.00
13	Illustration of Indian Sculptures Mostly Southern for Use With the Guide To the Archaeological Galleries- *F. H. Gravely & C. Sivaramamurti*	25.00

14	Select Bronzes in the Madras Government Museum- *M. Raman, IAS.*	35.00
15	Guide To The Bronze Gallery -*V. N. Srinivasadesikan*	50.00
16	A Souvenir Released on the Occasion of The Exhibition on South Indian Bronzes -*M. Raman, IAS*	51.00
17	Amaravati Sculptures in the Madras Government Museum- *C. Sivaramamurti*	210.00
18	Nagapattinam and Other Buddhist Bronzes - *T. N. Ramachandran*	117.00
19	Adivasis of Kodiakkarai- *A. V. N. Sarma*	9.75
20	The Tali in Relation to South Indian Initiation Rites- *C. J. Jayadev*	7.55
21	Catalogue of Vijayanagar Coins in the Madras Government Museum- *N. Sankaranarayana*	74.00
22	Catalogue of Venetian Coins in the Madras Government Museum- *T. G. Aravamudan*	40.00
23	Catalogue of Venetian Coins in the Madras Government Museum – *N. Sankaranarayana*	25.00
24	The Harappan and the Vedic Cultures Musing On Some Moot Problems- *K. R. Srinivasan*	15.00
25	Bronzes of South India- *P. R. Srinivasan*	386.00
26	Flowering Plants of Madras City and its Immediate Neighbourhood- *P. V. Mayuranathan*	308.00
27	Coins of India Through Ages - *P. N. Mohandoss*	10.00
28	மருத்துவத் தாவரங்கள் –*ம. ந. புஷ்பா*	10.00
29	Handbook of Madras Government Museum -*S. T. Satyamurti*	80.00
30	Notes on Hindu Images- *F. H. Gravely & C. Sivaramamurti*	12.00
31	Handbook of Preservation of Zoological Specimens- *P. Jawahar*	10.00
32	சித்த மருத்துவத்தின் சிறப்புகள் –*ம. ந. புஷ்பா*	25.00

33	Handbook of Museum Technique- *A. Aiyappan*	71.00
34	Jain Sculptures- *R. Balasubramanian*	20.00
35	Medals - *N. Sankaranarayana*	31.50
36	Tiruchi Museum Stone Sculptures -*N. Sankaranarayana*	20.00
37	Catalogue of Prehistoric Antiquities	35.00
38	Small Handbook of the Government Museum	5.00
39	Folder	10.00
40	Catalogue of Musical Instruments -*P. Sambamoorthy*	35.00
41	Ancient Industries of Tamil Nadu	
42	The Adichanallur Skulls- *S, Zuxkweman*	25.00
43	Sri Vaishnava Brahmins- *K. Rangachar*	100.00
44	Early Eastern and Chalukya Sculpture	70.00
45	Select Satavahana Coins- *M. Ramarao*	20.00
46	Excavation at Kilpauk- *M.D. Raghavan*	25.00
47	Scripts in and Around India- *V. Kannaiyan*	50.00
48	கலைச்செல்வங்கள் – *இரா. நாகசாமி*	50.00
49	Buddhist Sculpture from the Stupa Near Goli Village	40.00
50	Nayars of Malabar- *F. Fawcett*	35.00
51	Copper Plate Grants	40.00
52	List of Tombs- *Julian James Cotton*	110.00
53	Story of Buddhism - *A. Aiyappan and P. R. Srinivasan*	115.00
54	Report on the Socio Economic Conditions of the Tribes of Tamil Nadu	85.00
55	Nolamba Sculptures- *C. Sivaramamurti*	50.00
56	பெரியார் மாவட்டக் கோயில்கள் – *வே.ஜெயராஜ்*	70.00
57	Handbook on Preservation of Botanical Specimens- *M. N. Pushpa*	21.00
58	ஆவணங்கள் பாதுகாப்பு – *வே.ஜெயராஜ்*	15.00
59	Documentation on the Cannon in the Government Museum, Chennai-*R. Kannan, IAS.,*	50.00

	& R. Balasubramanian	
60	Guide to the Fish Gallery- *S. T. Satyamurti*	65.00
61	Guide to the Lizards, Crocodile, Turtles and Tortoises Exhibited in the Reptile Gallery - *S. T. Satyamurti*	55.00
62	Guide to the Galleries of Foreign Animals -*S. T. Satyamurti*	50.00
63	பழங்காலப் பண்பாடும் பழங்குடிகளின் பண்பாடும் – சி. ஜெ. ஜெயதேவ்	25.00
64	The Foote Collections of Indian Prehistoric and Protohistoric Antiquities- *Robert Bruce Foote*	200.00
65	Puppets in the Collection of the Madras Government Museum- *N. Devasahayam*	55.00
66	Indian Epigraphy and South Indian Scripts	285.00
67	Centenary Souvenir, Government Museum, Chennai	175.00
68	Three Main Styles of Temple Architecture Recognised by Silpa Sastra	20.00
69	Beginnings of the Traditions of South Indian Temple Architecture	20.00
70	An Outline of Indian Temple Architecture	20.00
71	Guide to the Sharks Exhibited in the Reptile Gallery- *S. T. Satyamurti*	20.00
72	திமிங்கிலங்கள் –*ஜா. ரா. அசோகன்*	10.00
73	Holistic Approach to Dating in Ancient History Especially Indian History- *R. Kannan, IAS.,*	35.00
74	முதலைகள் –*ஜா. ரா. அசோகன்*	15.00
75	பாம்புகள் பற்றிய அறிவியல் செய்திகள் – *ஜா. ரா. அசோகன்*	20.00
76	Government Museum, Chennai – As a Research Institution- *N. Devasahayam & V. Jeyaraj*	35.00
77	Proceedings of the Seminar on Conservation of Cultural Heritage- *V. Jeyaraj*	15.00

78	Snakes- *J. R. Asokan*	10.00
79	Medicinal Plants Used in the Siddha System of Medicine- *M. N. Pushpa*	
80	An Introduction to the Chemical Conservation and Research Laboratory- *V. Jeyaraj*	5.00
81	Guide to the Invertebrate Galleries - *S. T. Satyamurti*	7.05
82	Handbook on Conservation in Museums -*V . Jeyaraj*	35.00
83	***Care of Museum Objects*** - *N. Harinarayana &V. Jeyaraj*	20.00
84	Restored Paintings of the Madras Christian College- *V. Jeyaraj*	15.00
85	ஈரோடு அருங்காட்சியகக் கையேடு – *வே.ஜெயராஜ்*	15.00
86	நாகப்பட்டின அருங்காட்சியகக் கையேடு – *வே.ஜெயராஜ், க. சரவணன்.*	10.00
87	நாகப்பட்டினம் அருங்காட்சியகம்–ஓர் கண்ணோட்டம் –*வே.ஜெயராஜ், க. சரவணன்*	25.00

கட்டுரைப்பகுதி

கோவை மருதமலை முங்கில் துரு பகுதியிலுள்ள தொல்பழங்காலப் பாறை ஓவிய இடங்கள்

முனைவர் சி. மகேசுவரன்,
காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,
கோயம்புத்தூர்

முன்னுரை

'பாறை ஒதுங்கிடங்களில்' ('Rock Shelters') காணலாகும் 'பாறை ஓவியங்களும்' ('Rock Paintings' or 'Petrographs') 'பாறைக் கீறல்களும்' ('Rock Engravings' or 'Petroglyphs') 'பாறைக் கலைப்படைப்புகள்' ('Rock Arts') என அழைக்கப் பெறுகின்றன. இத்தகைய பாறை ஓவியங்களையும் பாறைக் கீறல்களையும் தன்னகத்தே கொண்ட 'பாறை (ஓவிய/கீறல்) ஒதுங்கிடங்கள்' ('Rock Art Shelters') உலக முழுமையும் காணக் கிடைக்கலாகின்றன. இவை பொதுவாக 'உயிரியல்–பண்பாட்டுப் படிமலர்ச்சியின் தொடர் வளர்ச்சி நிலைகளைப் ('Successive chapters of bio-cultural evolution') 'பழங்கற்காலம் தொடங்கி முந்தை வரலாற்றுக் காலங்கள் வரை' ('from palaeolithic to early historic times') காட்டுகின்றன.

இத்தகைய பாறைக் கலைப்படைப்புகளின் முகாமை தனித் தன்மை வாய்ந்தது. மாந்தர்க்கும் இயற்கைக்கும் இடையே நிலவும் தொடர் உறவு நிலைகளை அறிய விரும்பிடும் வரலாற்றியலாளர்க்கு இத்தகைய பாறைக் கலைப் படைப்புகள் முழுமையான வரலாற்றுத் தடயங்களைத் தருகின்றன; மாந்தரியலாளர்க்கோ இவை வெறும் கலை வடிவங்களாக மட்டும் அமையாமல், மாந்தர்ப் பண்பாட்டுத் தகவல் தொடர்பியலின் கலைப் படைப்புகளாகவும் விளங்குகின்றன. அதாவது, பாறைக் கலைப் படைப்புகள் அவை சார்ந்த காலத்தவரது பண்பாட்டை விளக்கிடும் 'புழங்கு பொருள்களையும்' ('Artefacts') அவற்றின் வாயிலாக அவர் தம் 'புழங்கு பொருள்கள் பண்பாட்டையும்' ('Material Culture') குறித்த 'தகவல் பெட்டகம்' ('Information Centre') என்ற நிலையில் பண்பாடு பற்றிய செய்திகளைக் கொண்டுள்ளன. சுருங்கக் கூறிடின், அந்நாளில் வாழ்ந்த மாந்தரது வாழ்வியல் முறைகளைக் ('Life-Ways')காட்டிடும் 'வரைகலைச் சாளரங்களே' ('Graphic Windows') இப் பாறைக் கலைப் படைப்புகள் எனலாம்.

இந்தியாவில் சற்றேறக்குறைய 200 பாறை ஒதுங்கிடங்களும் அவற்றுள் 2000–க்கும் மேற்பட்ட பாறைக் கலைப்படைப்புகளும் அவற்றின்கண் பல்லாயிரக் கணக்கான பாறை ஓவியங்களும் பாறைக் கீறல்களும் காணக் கிடைக்கின்றன. ஆழ்ந்து நோக்கும்போது,

ஒவ்வொரு பாறை ஓவிய/கீறல் இடமும் தனக்கே உரிய பண்புகளைக் கொண்டிருப்பதை உணரலாம். இத்தகைய தனித் தன்மைகளையும் கடந்து, அனைத்துப் பாறை ஓவிய/கீறல் இடங்களில் காணலாகும் பொதுப் பண்புகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில், ஒரு குறிப்பிட்ட காலத்தில், பொதுவானதொரு மரபு விளங்கியிருந்தமையை நமக்கு உணர்த்திடக் காணலாம்.

தமிழகப் பாறை ஓவிய/கீறல் இடங்களில் கோவை மாவட்ட நிலை:

தென்னிந்தியாவிலும், அதிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் இத்தகைய பாறை ஓவிய/கீறல் இடங்கள் பெருமளவில் காணப்பெறுகின்றன. 1970–1990 காலக்கட்டத்தில் கோவை மாவட்டத்தின்கண் மூன்று பாறை ஓவிய இடங்கள் தமிழ்நாடு தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. 1992–இல் தமிழ்நாடு அருங்காட்சியகத் துறையினரால் கண்டுபிடிக்கப் பெற்று வெளியுலகிற்கு வெளிப்படுத்தப் பெற்ற மருதமலையின் ‘மூங்கில் தூரு’ பாறை ஓவிய இடம் இவ்வரிசையில் நான்காம் இடத்தைப் பிடிக்கிறது.

‘மூங்கில் தூரு’ பாறை ஓவிய இடம் முதன் முதலில் கோவை மாவட்டக் கோட்டத் தீயணைப்பு அலுவலகத்தைச் சார்ந்த திரு கணேசன் மற்றும் அவரது உதவியாளர் திரு. மருதாசலம் ஆகியோரால் கண்டறியப் பெற்றது. கட்டுரையாளரின் பார்வைக்கு இத்தகவல் கொணரப்பட்ட போது, திருவாளர்கள். கணேசன், மருதாசலம், பத்மநாபன், ஆறுமுகம், காளிதாசு, பிலவேந்திரன், இராசகுமார் உள்ளிட்ட நண்பர் குழுவினரோடு அவர் மருதமலையின் மூங்கில் தூரு பகுதிக்குச் சென்று, அங்கு விரிவான ஆராய்ச்சியினை மேற்கொண்டு, அவ்விடத்திற்குச் சற்று அருகிலேயே மேலும் இரு பாறை ஓவிய/கீறல் இடங்களைக் கண்டுபிடித்தார். இதனைத் தொடர்ந்து, இப்பகுதிகளில் கட்டுரையாளர் மேற்கொண்ட ஒவ்வோர் ஆராய்ச்சிப் பயணத்தின்போதும் காளிதாசு, அவைநாயகன், இராசன், அன்பு மணிமாறன் உள்ளிட்ட நண்பர் துணை நின்றனர்.

மருதமலையின் ‘மூங்கில் தூரு’ பகுதியில் கண்டறியப் பெற்ற மூன்று பாறை ஓவிய இடங்களுள் ஒன்றில் மட்டும் பாறை ஓவியங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன; எஞ்சியுள்ள இரு பாறை ஓவிய இடங்களில் காணப்பெறும் பாறை ஓவியங்கள் மிகவும் தெளிவற்ற நிலையிலேயே உள்ளன. இருப்பினும், இம்மூன்று இடங்களிலும் காணலாகும் பாறை ஓவியங்கள் ‘உள்வெட்டுகளாகத்’ (‘Ingravings’) திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப் பாறை ஓவியங்கள் பல்வேறு வரிசைகளில் வரையப் பெற்றுள்ளன. இவை தவிர, பாறை ஒதுங்கிடங்களின் பக்கச் சுவர்களிலும் உள்புறச் சுவர்களிலும் ஒரு சில ஒற்றை ஓவியங்களும் காணக் கிடைக்கின்றன.

தெளிவாகக் காணப்பெறும் 'மூங்கில் துரு' பாறை ஓவிய இடத்தின் மேற்புற வரிசையில், இடது கையில் உயர்த்திய கேடயத்துடனும் வலது கையில் உயர்த்திய வாளுடனும் போர் வீரர் உருவங்கள் தீட்டப் பெற்றுள்ளன. இதையடுத்து கீழ் வரிசையில் கைகளைக் கோர்த்தவாறு பெண்கள் 'குழு நடனத்தில்' ('Group dance') ஈடுபட்டுள்ளதைக் காணலாம். இவ்வரிசைக்குக் கீழே 'கொம்புடைத் தலைப்பாகையை' ('Horned head-gear') அணிந்துள்ள மூவர் நீண்டதொரு மத்தளத்தை இசைப்பது காட்டப் பெற்றுள்ளது. இதற்குக் கீழான வரிசையில் ▼ எனும் வடிவில் 'விலங்கின் தலை' (எருதின் தலை) காட்டப் பெற்றுள்ளது. அதனருகில், விலங்கின் மீது அமர்ந்த நிலையில் ஓர் 'இனக்குழுத் தலைவன்' ('Culture Hero') அல்லது 'சிறு தெய்வம்' ('Deity') காட்டப் பெற்றுள்ளது. அதற்கு அடுத்த வரிசையில் ↑ எனும் மேல் நோக்கிய அம்பு வடிவக் குறியீடும், அதன் அருகிலேயே '2S' என்ற குறியீடும் தீட்டப் பெற்றுள்ளன. இவை 'இலிங்க – யோனி' வடிவைக் குறிப்பிடுவனவாகக் கொள்ளப் பெறுகின்றன. இவ்வடிப்படையில், இவை 'வளமை வழிபாட்டுக் குறியீடுகளாகக்' ('Symbols of fertility cult') கருதப்படுகின்றன. கடைசி வரிசையில் 'ஞாயிறு' அல்லது 'விண்மீன்' ('Sun' or 'Star') போன்ற ஒரு வடிவம் வரையப் பெற்றுள்ளது. இவ்வோவியங்கள் அனைத்தும் 'உண்மை வடிவில்' ('Realistic form') அமையாமல் 'கருப்பொருள் வடிவிலேயே' ('Abstract form') தீட்டப் பெற்றுள்ளன.

தற்போது, இப்பாறை ஓவியங்களுள் பெரும்பான்மையானவை வெண்மை நிறத்தில் காணப் பெற்றாலும் சில இடங்களில் பல பாறை ஓவியங்கள் மஞ்சள் நிறத்திலும் காணப் பெறுவதால், 'செம்மண் குழம்பில்' ('Red ochre paste') தீட்டப்பெற்ற இவ்வோவியங்கள் காலப் போக்கில் மஞ்சளாக ஆகியுள்ளன எனும் கருத்து உறுதி பெறுகிறது.

பாறை ஓவியங்களின் காலக்கணக்கீட்டு முறையும் மூங்கில் துரு பாறை ஓவியங்களின் காலமும் :

பாறை ஓவியங்களின் காலத்தை அறுதியிடுதற்கு 'எச்சரிக்கை விகிதக் காலக் கணக்கீட்டு முறை' ('Caution-Ratio Dating Method') எனும் அறிவியல்சார் முறை பயன்படுத்தப் பெறுகிறது. இம்முறையில், முதற்கண் பாறை ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ள பாறைப் பரப்புகளில் படர்ந்துள்ள 'படலத்தில்' ('Patina') காணப்பெறும் 'நுண்ணுயிரிகள்'ான ('Microbes') பாசி முதலியன சுரண்டி எடுக்கப்பெற்று அவற்றின் காலங்கள் 'கார்பன் 14 காலக் கணக்கீட்டு முறையில் ('Carbon 14

Dating Method') கண்டுபிடிக்கப் பெறுகின்றன. இவ்வகையில், பாறைப் படலத்தில் காணலாகும் நுண்ணுயிரிகளின் காலம் குறித்த அளவீடுகள் பலவாறாகக் கிடைக்கப் பெறுகின்றன. இவ்வாறு கிடைத்திடும் பல்வேறு கால அளவீடுகளும் ஒரு 'வரைபட'த்தில் ('Graph') குறிக்கப் பெறுகின்றன. பின்னர், இதிலிருந்து பெறப்படும் 'பொதுக் கணக்கீடு' ('Mode') பாறை ஓவியத்தின் 'சரியான காலமாக'க் ('Appropriate Date') கணக்கில் கொள்ளப் பெறும்.

'மூங்கில் துரு பாறை ஓவிய இடங்களில்' 'எச்சரிக்கை விழுக்காடு காலக் கணக்கீட்டு முறை' மேற்கொள்ளப்படா நிலையிலும் அவற்றை ஒட்டிய 'பாறை ஒதுங்கிடத் தளங்களில் ('Floors of Rock Shelters') 'தொடர்புடைப் பொருள்கள்' ('Associated finds') கிடைக்கின்றனவா என்று ஆராய்ந்திடா நிலையிலும் இப்பாறை ஓவிய இடங்களில் காணலாகும் ஓவியங்களின் பாங்கு ('Style') 'குறியீடுகள்' ('Symbols') உள்ளிட்டவற்றினை இந்தியாவில் காணப்பெறும் ஏனையப் பாறை ஓவியங்களின் 'பாங்கு', 'குறியீடுகள்' ஆகியவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவை சிந்துசமவெளி நாகரிகக் காலமான 'செம்பு-கல் காலம்' ('Chalcolithic Period') சார்ந்தனவாக இருக்கலாம் எனக் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது, மூங்கில் தூரு பாறை ஓவியங்கள் கி.மு.3000-க்கும் கி.மு.1000-க்கும் இடைப்பட்ட காலத்தன எனக் கருத வேண்டியுள்ளது.

பொதுவாகப் பாறை ஓவியங்களில் காணலாகும் பொதுப் பண்பாக மூங்கில் தூரு பாறை ஓவியங்களிலும் 'பழைய அடுக்கு ஓவியங்களும் ('Painting of Old layer') 'பிந்தைய அடுக்கு ஓவியங்களும் ('Paintings of late layer') ஒன்றுடன் ஒன்று 'பிணைந்த நிலைகளில்'('Super imposing') காணப் பெறுகின்றன.

கோவை மருதமலை மூங்கில்துரு பாறை ஓவிய இடங்களின் முகாமை

கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு தொல்லியல் துறையினரால் இதுவரை கண்டுபிடிக்கப் பெற்றுள்ள (வெள்ளெருக்கம்பாளையம், குமுட்டிபதி, பாலமலை) பாறை ஓவிய இடங்களிலிருந்து தமிழ்நாடு அருங்காட்சியகத்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட மருதமலை மூங்கில்துரு பாறை ஓவிய இடங்கள் கீழ்க்காணும் தன்மைகளில் சிறப்புற்று விளங்குகின்றன.

செம்பு-கல் காலப் பாங்கு ஓவியங்கள் மூங்கில்துரு பாறை ஓவிய இடங்களிலேயே காணக் கிடைக்கின்றன;

மூங்கில் துரு பாறை ஓவிய இடத்தில் காணப் பெறும்'கொம்புடையதலைப்பாகை அணிந்து மத்தளம் இசைப்போர் உருவமான 'பசுபதி' என்றும் 'சிவனின் தொன்மை வடிவம்' என்றும் முந்தை அறிஞர்களால் தவறாகக் குறிப்பிடப்பெறும் சிந்துசமவெளி முத்திரையில் காணலாகும் 'இனக்குழுத்தலைவன்' வடிவை ஒத்திருக்கிறது.

'குழு நடனம்', 'விலங்கு மீதமர்ந்த இனக்குழுத் தலைவன்', 'போர் வீரர்', 'ஞாயிறு' அல்லது 'விண்மீன்' உள்ளிட்ட வடிவங்கள் மூங்கில் துரு பாறை ஓவிய இடத்திலேயே ஒரு சேரக் காணலாகின்றன;

இவை தவிர மூங்கில் தூரு பாறை ஓவிய இடத்தில் இருப்பிடம்' உள்ளிட்டவை குறியீட்டு வெளிப்பாடுகள் வாயிலாக குறிப்பால் உணர்த்துப் பெறுவதையும் காண இயல்கிறது.

முடிவுரை :

தமிழகத்தின் பிற இடங்களில் (அதாவது, 'கீழ்வாலை', 'செத்தவரை', 'குளிர்சுனை', 'சித்தர்வரை', 'ஆலம்பாடி', 'நெகர்பட்டி', 'இடுகட்டி' உள்ளிட்ட ஊர்களில்) ஏற்கனவே சிந்துச்சமவெளி காலத்தைய பாறை ஓவிய இடங்கள் கண்டு பிடிக்கப் பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு நோக்கும்போது கோவை மருதமலையின் " மூங்கில் துரு" பாறை ஓவிய இடங்கள் தமிழகத்தின் தொல் பழங்கால வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தலில் பெறும் முகாமையான இடம் புலப்பட்டிடக் காணலாம்.

எனவே 'மூங்கில் துரு பாறை ஓவிய இடங்களில்' சிந்துச் சமவெளி காலத்தைய எழுத்துப் பொறிப்புகள் ஏதும் காணப்பெறுகின்றனவா என மேலாய்வு செய்திடுதல் காலத்தின் கட்டாயமாகும்.

நன்றியுரை:

கோவை மருதமலை மூங்கில் துரு பாறை ஓவியங்களின் ஒளிப்படங்கள் துணை கொண்டு, அவற்றின் 'பாங்கு', 'குறியீடுகள்' உள்ளிட்டவற்றை நுணுகி ஆராய்ந்து அவை சிந்துச்சமவெளி

நாகரிகக் காலத்தையன' எனக் கருத்துரை நல்கிய திருமிகு டி.பி. சர்மா, காப்பாளர், தேசிய அருங்காட்சியகம், புதுதில்லி – அவர்களது செவ்விய புலமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றி இங்கு படையலாக்கப்பெறுகிறது.

நெறித்துணை ஏடுகள்:-

(தமிழில்)
காந்தி, ம., 1998 தமிழ்நாட்டில் பாறை ஓவியங்கள், வேலூர் (அருங்காட்சியகத் துண்டு வெளியீடு
பவுன்துரை, இரா., 1988 – தமிழகப் பாறையோவியங்கள், சென்னை, சேகர் பதிப்பகம்.

(ஆங்கிலத்தில்)
Mathivanan, R., 1955 – Indus Script Among Dravidian Speakers, Chennai; International Society for the Investigation of Ancient Civilizations.
Verma, R.C. ,1993, Contribution of Tribal India in the Decipherment of Indus Scripts (Mimes)
--1990, Rock Art (Aboriginal Australia – Culture and Society (Series) Canberra; Commonwealth of Australia.
--1994, Rock Art in India and the World (Folder), National Museum, New Delhi

நாகப்பட்டினம் அருங்காட்சியகத்தில் தமிழ்க் கடவுளின் கற்சிற்பம்

க. சரவணன்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், நாகப்பட்டினம்

உலகில் உள்ள மிகப்பழமையான சமயங்களில் இந்து சமயமும் ஒன்றாகும். இதுநாள் வரையிலும், இந்து சமயம் தோன்றிய நாள் அறுதியிடப்படவில்லை. ஏனைய சமயங்கள் போல் அல்லாது, இந்து சமயத்தில் பல்வேறு கடவுள்கள் வழிபடப்பட்டு வருகிறார்கள். பொதுவாக இந்து சமயக் கடவுள்களை ஆறு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம்.

அவை: 1) சைவம் 2) வைணவம்3) சாக்தம் 4) காணாபத்யம் 5) கௌமாரம் 6) சௌரம்.

1) சைவம்:-
சிவபெருமானை மூலவராகக் கொண்டு, ஏனைய இந்து சமயக் கடவுள்களைப் பரிவாரமாகக் கொண்டு, உருவமாகவும், அருபமாகவும், ரூபாரூபமாகவும், சிவபெருமானை வழிபடுவது சைவம் எனப்படும்.

2) வைணவம்:-
மகாவிஷ்ணுவை மூலவராகக் கொண்டு, ஏனைய இந்து சமயக் கடவுள்களைப் பரிவாரமாகக் கொண்டு, வழிபடும் முறைக்கு வைணவம் என்று பெயர்.

3) சாக்தம் :-
சக்தியை மூலக் கடவுளாகவும் ஏனைய இந்துக் கடவுள்களைப் பரிவார மூர்த்தங்களாகக் கொண்டு வழிபடும் முறைக்கு சாக்தம் என்று பெயர்.

4) காணாபத்யம் :-
கணபதியை மூலவராகவும் முழு முதற்கடவுளாகக் கொண்டும் வழிபடும் முறைக்கு காணாபத்யம் என்று பெயர்.

5) கௌமாரம் :-
குமரக் கடவுளை மூலவராகக் கொண்டு வழிபடும் முறைக்கு கௌமாரம் என்று பெயர். கௌமார வழிபாடு இந்தியாயில் தமிழகத்தில்தான் பெருமளவில் காணப்படுகிறது, ஆதலின் தமிழ்க் கடவுள் என்றழைக்கப்படுகிறார்.

6) சௌரம் :-
உலக உயிர்கள் அனைத்தும் உயிர் வாழ முக்கிய இயற்கைச் சக்தியான சூரியனை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் முறைக்கு சௌரம் என்று பெயர்.

தமிழ்க்கடவுள் முருகன்:

இந்து சமயத்தில் பல கடவுள்கள் இருக்கும்பொழுது முருகனை மட்டும் தமிழ்க் கடவுளாக கூறப்படுவதற்கு காரணங்கள் பல உள்ளன.

"தமிழ்" என்பதற்கு அழகு என்று ஒரு பொருளுண்டு. அவ்வாறே "முருகு" என்பதற்கும் அழகு என்று பொருள்.

மன்னர் படைகளோடு தங்கும் இடத்தினை படைவீடு என்பர். குமரக்கடவுள் தம் படைகளோடு தங்கிய இடங்கள் ஆறு என்பர். அவ்விடங்கள் இன்று ஆறுபடைவீடுகள் என்றழைக்கப்படுகின்றன. ஆண்டியாய் நின்றது, அசுரரை அழித்தது, தந்தைக்கே உபதேசித்தது, தேவியர்களை மணந்தது போன்ற முருகப் பெருமானின் திருவிளையாடல்களை 6 படைவீடுகளும் விளக்குகின்றன. இந்த 6 படைவீடுகளும் தமிழகத்தில் மட்டுமே அமைந்துள்ளன.

தமிழில் மட்டுமே காணப்படும் ∴ என்ற எழுத்து குமரக் கடவுளின் சக்தி ஆயுதமாக உருவகப்படுத்தப்படுவதால், இது ஆயுத எழுத்து என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்மொழியினை வளர்க்க சங்கம் வைத்து பாடுபட்டனர் பண்டைக் காலத் தமிழகர்கள். தமிழ்ச் சங்கத்தின் கடவுளாக முருகப் பெருமான் விளங்கியதாக திருமுருகாற்றுப் படை கூறுகிறது.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் வைதீகத் திருமணம் மற்றும் கந்தர்வத் திருமணம் என்று இருவகை திருமண முறைகள் கூறப்படுகின்றது. தெய்வயானை மற்றும் வள்ளியை மணந்ததன் மூலம் தமிழ் இலக்கிய திருமண முறைக்கு முருகப் பெருமான் எடுத்துக் காட்டாக திகழ்கிறார்.

பழமை வாய்ந்த தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலும் தமிழ் பெருங்காப்பியங்களிலும் அகநானூறு, புறநானூறு ஆகிய சங்கத் தொகை நூல்களிலும், திருப்புகழ், திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்களிலும் முருகப் பெருமானின் வழிபாடு குறித்து கூறப்பட்டுள்ளதால், தமிழ்க் கடவுளாக முருகப் பெருமான் விளங்குகிறார்.

சிற்ப நூல்களில் குமரக் கடவுள்:-

விஸ்வகர்மியம், சுப்ரபேதஆகமம், காஸ்யபம், உத்ரகாமிகம், ஸ்ரீதத்வநிதி போன்ற சிற்ப நூல்கள் குமரக்கடவுளின் 16 வகையான உருவ அமைதிகளைப் பாங்குடன் விளக்குகின்றன. அவையாவன :

1. கந்தசுவாமி
9. ஆறுமுகன்

2. ஞானசக்திதரர்
3. தேவசேனாதிபதி
4. சுப்பிரமணியர்
5. கெஜவாகனர் (களிற்றூர்தி பெருமான்)
6. சரவணபவ ஸ்வாமி
7. கார்த்திகேயன்
8. குமாரசுவாமி
10. தாரகாரி
11. சுவாமிநாதன்
12. பிரமசாத்தன்
13. பாலமுருகன்
14. வள்ளிமணவாளன்
15. கிரவுஞ்சபேதனர்
16. சிகிவாகனர் (மயிலூர்தி பெருமான்)

1) கந்தசுவாமி: ஒரு முகமும் இரண்டு கைகளும், இடதுகையை இடுப்பில் வைத்து வலது கையில் கோலைத் தாங்கி, கோவணத்துடன் தாமரையிருக்கையில் நின்ற நிலையில் காணப்படுவார்.

2) ஞானசக்திதரர் : ஒருமுகமும் இருகரமும் வலது கையில் வேலும், இடது கையில் சூலமும் தாங்கியவாறு காணப்படுவார்.

3) தேவசேனாதிபதி: ஆறு முகமும் பன்னிருகரமும் கொண்டு அபயம், கத்தி, வேல், அம்பு, கதை, தாமரை, கோழி, சூலம், வில், வஜ்ரம், கேடயம் இவற்றை ஏந்தியவாறு தேவியான தெய்வயானையைத் தொடையில் அமர்த்தி, அமர்ந்த நிலையில் காணப்படுவார்.

4) சுப்பிரமணியர் : ஒரு முகமும் நாற்கரமும் கொண்டு அபயம், வரதம், சக்தி, வஜ்ரம் ஏந்தி நின்ற அல்லது அமர்ந்த நிலையில் காணப்படுவார்.

5) கெஜவாகனர் : ஒரு முகமும் நாற்கரமும் கொண்டு அபயம், வரதம், சக்தி, வஜ்ரம் ஏந்தி, யானை மேல் அமர்ந்தவராகக் காணப்படுவார்.

6) சரவணபவ சுவாமி: ஆறு முகமும் ஈராறு கரங்களும், கொண்டு தனது கரங்களில் தாமரை, கொடி, அங்குசம், வில், அம்பு, சக்தி, வஜ்ரம், மணி, சேவல், வேல், அபயம், வரதம் இவற்றுடன் அமர்ந்தவாறு காணப்படுவார்.

7) கார்த்திகேயசுவாமி: ஆறு முகமும் ஆறு கரங்களும் கொண்டு நின்ற நிலையில் அபயம், கத்தி, வஜ்ரம், வரதம், கேடயம், சக்தி ஆகியவற்றை ஏந்தியவாறு காணப்படுவார்.

8) குமாரசுவாமி: ஒரு முகமும் நாற்கரமும் கொண்டு கத்தி, சக்தி, கேடயம், வஜ்ரம் ஏந்தியவாறு நின்ற நிலையில் காணப்படுவார்.

9) ஆறுமுகசுவாமி (சண்முகர்) : ஆறுமுகங்களையும் பன்னிரு கைகளையும் உடையவர். அபயம், கதை, கொடி, கத்தி, அம்பு, வேல், வஜ்ரம், வில், கேடயம், தாமரை, சூலம், வரதம் இவற்றுடன் மயிலை வாகனமாகக் கொண்டும் வலது புறத்தில்

வள்ளியம்மையுடனும் இடது புறத்தில் தெய்வயானையுடனும் காணப்படுவார்.

10) தாரகாரி சுவாமி: ஆறு முகங்களையும், பன்னிரு கரங்களையும் கொண்டு அபயம், பாசம், சக்கரம், கத்தி, உலக்கை, வஜ்ரம், அங்குசம், கொடி, வில், அம்பு, சக்தி ஆயுதங்களை ஏந்தியவாறு நின்ற நிலையில் காணப்படுவார்.

11) சுவாமிநாதன் : ஒரு முகமும் இரண்டு கைகளும் கொண்டு கரண்டமகுடத்துடன் காணப்படுவார். இடதுகையை இடுப்பில் வைத்து, வலது கையில் வேலைத் தாங்கி, நின்ற நிலையில் காணப்படுவார். சுவாமியான சிவபிரானுக்கே இவர் குருவாக இருந்து உபதேசித்ததால் சுவாமிநாதன் என்றழைக்கப் படுகிறார்.

12) பிரமசாத்தன் : ஒரு முகமும், நாற்கரங்களும் கொண்டு வலதுகரத்தில் அபய முத்திரையுடனும் வலது மேற்கரத்தில் அட்சமாலையுடனும் இடது மேற்கரத்தில் கெண்டி, கீழ்க்கரத்தில் வரத முத்திரையுடனும் அமர்ந்த நிலையில் காணப்படுவார். இவர் நான்முகனான, பிரம்மனுக்கே ஆசிரியராக இருந்து பிரணவ மந்திரத்தினை உபதேசித் ததால், பிரமசாத்தன் என்றழைக்கப்படுகிறார்.

13) பாலமுருகன் : ஒரு முகமும் இருகரங்களும் கொண்டு, வலது கரத்தில் தாமரை ஏந்தியும் இடக்கையை இடுப்பில் வைத்தும் காணப்படுவார்.

14) வள்ளிமணாளன் : ஒரு முகமும் நாற்கரங்களும் கொண்டு வலது கரங்களில் அபயம், அட்சமாலையும் ஏந்தி இடது மேற்கரத்தில் கெண்டியை ஏந்தி, இடது கீழ்கரத்தை வள்ளியம்மையின் கையைப் பற்றியும், மணக்கோலத்தில் வள்ளியம்மையின் அருகே நின்ற நிலையிலும் காணப்படுவார்.

15) கிரவுஞ்சபேதனர் : ஆறுமுகங்களையும், எட்டுகரங்களையும், கொண்டு எண் கரங்களில் ஆயுதங்கள் ஏந்தியவாறு காணப்படுவார்.

16) சிகிவாகனர் : ஒரு முகமும் நாற்கரங்களும் கொண்டு வலது கீழ்க்கரம் அபயமாகவும், மேற்கரத்தில் வேல் ஏந்தியும் இடது கீழ்க்கரம் வரதமாகவும், மேற்கரம் வஜ்ரம் ஏந்தியும் மயில் வாகனத்தின் மேல் அமர்ந்த நிலையிலும் காணப்படுவார்.

நாகப்பட்டினம் அருங்காட்சியகத்தில் – தமிழ்க்கடவுள் சுப்பிரமணியர் கற்சிற்பம்

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், செம்போடை கிராமத்தில், 3 அடி 8 அங்குலம் உயரம் கொண்ட சுப்பிரமணியர் கற்சிற்பம் 3.2.1990–ல் கண்டெடுக்கப்பட்டது.



நான்கு கரங்களுடன், நின்ற நிலையில் காணப்படும் இச்சிற்பத்தின் மேற்பகுதிகள், நிறைவு செய்யப்படாமல் காணப்படுகின்றன. கரண்டமகுடம் தாங்கி, வலது கீழ்க்கரம் அபய முத்திரை தாங்கியும், இடது கீழ்க்கரம் வரத முத்திரை தாங்கியும் காணப்படுகிறது. மேற்கரங்களில் சக்தி, வஜ்ரம் செதுக்கப்பட்டு, முழுவதும் நிறைவு செய்யப்படாமல் காணப்படுகிறது. சுப்பிரமணியர் வாகனமான மயில், நிறைவு செய்யப்படவில்லை. இச்சிற்பம் தற்காலச் சிற்ப வகையைச் சேர்ந்ததாகும்.

28.6.2000 அன்று, வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து நாகப்பட்டினம் அருங்காட்சியகத்திற்கு கொண்டு வரப்பட்டு, பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

எடுத்தாண்ட நூல்கள்:

1. 'திருச்செந்தூர் முருகன்', புலவர் செந்துரை முத்து, மணிவாசகர் பதிப்பகம், டிசம்பர், 1983
2. 'திருப்பரங்குன்றம்' புலவர் செந்துரை முத்து, மணிவாசகர் பதிப்பகம்.
3. 'படிமக்கோடுகள்', கோ. திருஞானம், 2000
4. Guide to the Bronze Gallery, Dr.V.N. Srinivasa Desikan, 1972.

தலைப்பலி சிற்பம்

முனைவர் ஜெ. ராஜா முகமது,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் அருள்மிகு பொன்வாசிநாதர் கோயிலில் அரிய "தலைப்பலி சிற்பம் ஒன்றினை இக்கட்டுரை ஆசிரியர் கண்டுபிடித்துள்ளார். மேற்படி கோயிலில் கள ஆய்வு மேற்கொண்டிருந்த போது அந்தக் கோயிலின் இடிபாடுகளுக்கிடையே இந்தச் சிற்பம் இருந்தது தெரியவந்தது. தற்போது இந்தச் சிற்பம் அக்கோயிலின் முன்புறத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிற்பங்கள் தமிழகத்தில் வேறு சில இடங்களிலும் கிடைத்துள்ளன. ஆனால் வெகு அறிதாகவே கிடைக்கின்றன. பழமையும் தொல்லியல் சிறப்பும் வாய்ந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்தகையச் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

சுமார் 3 அடி உயரமுள்ள இந்த சிற்பம் வீரன் ஒருவன் தனது தலையை தானே அறுத்துக் கொள்வது போன்று உள்ளது. நின்ற கோலத்திலுள்ள வீரனின் இடக்கை தனது தலைமுடியை பிடித்துக் கொண்டு வலக்கையிலுள்ள வாள் கழுத்தின் ஊடே பாய்ந்து இருக்கும் நிலையில் உள்ளது. சிற்பத்தின் இடது பக்கவாட்டில் உள்ள கல்வெட்டு "கீழ்க்குறிச்சி ஊராா்களுள் அழகன், கோனாட்டு பேரரையன் ஆதி தன்மம்" எனக் கூறுகிறது. இதன்மூலம் அழகன் என்ற பெயருடைய இந்த வீரன் கீழக்குறிச்சியை (அன்னவாசலுக்கு அருகில் உள்ள ஊர்) சேர்ந்தவன் என்றும் அவன் தன்னைத் தானே பலி கொடுத்துக் கொண்டான் என்றும் அவனது நினைவாக கோனாட்டு பேரரையர் இந்த நினைவுச் சிற்பத்தினை செய்து வைத்துள்ளனர் எனவும் தெரியவருகிறது. கல்வெட்டு எழுத்தமைப்பினைக் கொண்டு இந்த சிற்பத்தின் காலம் கி.பி.15–16ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

இத்தகைய தலைப்பலி சிற்பம் குறித்த சில சுவையான செய்திகள்:-

இத்தகைய பலியிடல் சங்ககாலம் முதற்கொண்டு அண்மை நூற்றாண்டுகள் வரை வழக்கில் இருந்துள்ளது. புகார் நகரில் நடந்த இத்திருவிழாவினை விவரிக்கும் சிலப்பதிகாரம், தங்கள் வேந்தன் எப்போதும் வெற்றிக்கொள்ளவேண்டி, போர்க்களத்திலே வெற்றிவாகை சூடிய வீரர்கள் அந்நகரத்தைக் காத்துவரும் காவல் பூதத்தின் முன் உள்ள பலிபீடத்தின் மீது தங்கள் தலைகளைக் கொய்து வைத்தனர் என்று கூறுகிறது. இருப்பினும் கொற்றவை (காளி) வெற்றித்தேவியாக

கருதப்பட்டதால் போர்க்காலங்களில் வீரர்கள் தங்களுக்கு வெற்றி தருமாறு பெரும்பாலும் கொற்றவைக்கு தலையைப் பலியாகக் கொடுத்தனர். போரில் வெற்றிபெற்ற பிறகும் இப்பலி இடப்பட்டது. போரில் அடைந்த வெற்றிக்கு நன்றிக் கடனாற்ற எயினர்கள் தங்கள் தலையை அறுத்து அதிலிருந்து பொங்கி எழும் குருதியை விலையாக ஏற்றுக்கொள்ளுமாறு கொற்றவையை வேண்டினர் எனவும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

பலியிட முனைந்த மறவர்கள் தங்கள் குலக்குமரி ஒருத்தியை கொற்றவையாக (காளி) பாவித்து, அக்குமரியை அழகுபடுத்திய பின், கலைமானின் முதுகிலே ஏற்றிவைத்து, வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, சந்தனம், சோறு, எள்ளுருண்டை கொழுப்புச் சாதம், பூ, மணப்பொருட்கள் முதலியவற்றைப் படைத்து வணங்கினர். பலியிடும் சமயம், பறை, ஊதுகுழல் ஆகியவை ஒலித்தன. வீரர்கள் முதலில் பலிபீடத்தையும் பின்னர் கொற்றவையையும் தொட்டு வணங்கியபின் தலையை, பலியாக இட்டனர். இவ்வாறு சிலப்பதிகாரம் அக்காலத்தில் வீரர்கள் தங்களைத் தாங்களே பலியிட்டுக் கொண்ட செய்தியினைத் தெரிவிக்கிறது.

இவ்வாறு பலியிடுதல் பிற்காலத்திலும் வழக்கில் இருந்து வந்துள்ளது. மாமல்லபுரம், சிங்கவரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள பல்லவர் கால குகைக்கோயில்களிலும், புள்ளமங்கலம் மற்றும் மயிலாடுதுறையில் உள்ள கோயில்களிலும் இத்தகைய சிற்பங்களைக் காணலாம்.

" வீரர்கள், குடுமியோடு கூடிய தலையை கழுத்தின் அடியில் அறுத்து பலிபீடத்தின் மீது வைக்க, காளிக்கு ஏவல் செய்யும் யோகினிப் பெண்கள் அந்த தலைகளை எடுத்துச் சென்று தேவியின் முன் சமர்ப்பித்தனர் " என கி.பி.11ஆம் நூற்றாண்டில் ஆண்ட குலோத்துங்கச் சோழனின் வீரத்தை விவரிக்கும் கலிங்கத்துப்பரணி கூறுகிறது.

மேற்கண்ட இலக்கியச் சான்றுகளைக் கொண்டு மன்னன் நலம் பெறவும், போரில் வெற்றி பெறவும் வீரர்கள் தலைப்பலியிட்டதை அறிகிறோம். எடுத்த செயல் வெற்றியாக முடியவேண்டும் என்பதே இப்பலியிடலின் நோக்கமாகும். பல்லவர் காலத்தில் தொடங்கிய இத்தகைய பலியிடலை சித்தரிக்கும் சிற்பங்கள் தொடர்ந்து வந்த காலங்களில் அறிதாகவே கிடைக்கின்றன. இத்தகைய பலிக்காக நினைவுச் சின்னங்கள் அமைத்தல் 15 – 16ஆம் நூற்றாண்டில் பெரு வழக்கமாகியதாகத் தெரியவருகிறது. இக்காலத்தைச் சேர்ந்த தலைப்பலிச் சிற்பங்கள், பிற மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் கல்வெட்டுகளுடன் மிக அறிதாகவே கிடைத்துள்ளன.

இலுப்பூரில் காணப்படும் சிற்பமும் இக்காலக்கட்டத்தைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். (15–16ஆம் நூற்றாண்டு). இந்த சிற்பம் தற்போது அருள்மிகு பொன்வாசிநாதர் என்னும் சிவன் கோயிலுக்கு அருகில் காணப்படினும் இது இந்த கோயிலைச் சேர்ந்த சிற்பம் அல்ல. ஏனெனில் சிவபெருமானுக்கு இத்தகைய பலியிடல் வழக்கமன்று. எனவே இந்தச் சிற்பம் அருகிலிருந்த காளி கோயில் ஒன்றில் இருந்திருக்கவேண்டும். கட்டுரை ஆசிரியர் இது குறித்து இலுப்பூரில் தொடர்ந்து கள ஆய்வ மேற்கொண்டபோது இந்தக் கோயிலுக்கு சற்றுத் தொலைவில் பழமையான காளிகோயில் ஒன்று இருப்பது தெரியவந்தது. எனவே இந்த சிற்பம் இக்கோயிலுக்கு அற்பணிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். பிற்காலத்தில் எப்படியோ பொன்வாசிநாதர்கோயிலுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதும் ஆய்வில் தெரியவருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்தகைய 'தலைப்பலி' சிற்பம் முதன்முறையாக கிடைத்திருப்பதால் இது ஆய்வாளர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

துணை நூல்கள் :-

1.சிலப்பதிகாரம் : இந்திர விழா எடுத்தகாதை வரிகள் – 81–88
சிலப்பதிகாரம் – வேட்டுவரி – வரிகள் 7 –8, 16–17, 21–45
2.கலிங்கத்துப்பரணி – கோயில்பாடியது வரி: 108,111,112,116
3.'ஆவணம்' : தமிழக தொல்லியல் கழக ஆண்டு இதழ், தஞ்சாவூர் எண்.4(1994) பக்கம் 62–64 எண்.11,(2000), பக்கம் 111.

சங்கநூல்கள் காட்டும் ஓவியக்கலை

திருமதி ரு.தே. துளசிபிருந்தா,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், கிருட்டிணகிரி.

மனித வாழ்க்கையை மாண்புறச் செய்வன கலைகள். அவற்றுள் ஓவியக்கலை மிகச் சிறந்த இடத்தைப் பெறுகிறது. மனிதன் இவ்வுலகில் தோன்றியபோதே ஓவியக்கலையும் தோன்றியது எனலாம். இக்கலையை அனைத்துக் கலைகளுக்கும் அடிப்படையாகக் கருதலாம். பண்டைத் தமிழ்நாட்டில் ஓவியக்கலை மிக உயர்ந்த நிலையில் இருந்தது. கோயிற் சுவர்கள் மற்றும் மன்னர்கள், செல்வந்தர்களின் மாடங்களைப் பல வகையான ஓவியங்கள் அழகுபடுத்தின என்றும் ஆடைகளிலும், இல்லங்களில் காணப்பட்ட திரைச்சீலைகளிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டன என்றும், ஓவியங்களைப் பற்றிய பல விபரங்களைச் சங்ககால நூல்களிலிருந்து நாம் அறியவும் காணவும் முடிகிறது.

தென்னிந்தியாவின் தொன்மையான நூலான தொல்காப்பியம் ஓவியக்கலையைப் பற்றி குறிப்பிட்டுள்ளது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு நடுகல் எடுத்து அதில் அவ்வீரனின் உருவத்தைச் செதுக்கி வழிபடும் வழக்கத்தைத் தொல்காப்பியம் விவரிக்கிறது. கல்லில் இவ்வாறு ஓர் உருவத்தை செதுக்குமுன் அதை ஓவியமாக வரைந்து கொண்டு செதுக்குவர் என்பதால் ஓவியக்கலை பழந்தமிழகத்தில் சிறப்பாக இருந்தது என்பதை அறிய முடிகிறது.

பழங்காலத்தில் ஓவியக்கலையைப் பற்றி அறிவதற்கு நூல் ஒன்று இருந்தது என்பதை சங்க இலக்கியத்திலிருந்து நாம் அறிய முடிகிறது.

" ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத்துறை போகிய பொற்கொடி நங்கை "[1]

என்ற வரிகளின் மூலம் ஓவியக்கலை என்று ஒரு நூல் இருந்ததை தெரிந்து கொள்ள முடிகிறது.

'மாடக்குச் சித்திரமும்' என்னும் நன்னூற் பொதுப்பாயிரத் தொடரும், சுவரை வைத்துக் கொண்டன்றோ, சித்திரமெழுத வேண்டும்? என்னும் பழமொழியும், மாடச்சுவர்களிலெல்லாம் அக்காலத்தில் ஓவியம் வரையப் பெற்றிருந்தமையை அறிவிக்கும் 'மணிமேகலை' காப்பிய வரிகளை இங்கு காணுவோம்.

"வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கி நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி

வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங் கண்டுநிற் குநரும்"[2]

பண்டைத் தமிழகத்தில், மன்னர்களின் அரண்மனைகளில் ஓவியங்களுக்காகத் தனிக்கூடம் ஒதுக்கியிருந்தனர். பாண்டியன் நன்மாறன் தனது சித்திரமாடத்தில் தங்கியிருந்தபோது உயிர் நீத்தான். இதனால் அவனைப் 'பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன்' என்று புறநானூறு கூறுகிறது. பாண்டியரின் சித்திரமாடத்தைக் கண்டு வியந்த மாங்குடி மருதனாரெனும் புலவர் அதனைக் குளிர்ந்த குளத்தின் காட்சிக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். சித்திரம் தீட்டப்பெற்ற சுவர் செப்புத் தகட்டைப்போல் சிவந்து பளபளத்துக் காட்சியளித்ததெனவும் விளக்கினார்.

"கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து"[3]
என்கிறது மதுரைக் காஞ்சி

பாண்டியரின் சித்திரமாடத்தைக் கண்ட நக்கீரர் அம்மாடம் வெண்சாந்தால் பூசப்பட்டதென்றும், அதன் தூண்கள் நீலமணியைப்போல் கருமையும் திரட்சியும் உடையனவென்றும், சுவர்கள் செம்பினால் செய்யப்பட்டவைபோல் சிவந்த நிறமுடையனவென்றும் கூறி, அவற்றில் இருந்த பல்வேறு வண்ண ஓவியங்களில் பல பூக்களையுடைய வள்ளியெனும் உயர்கொடி படர்ந்துள்ள ஓவியத்தைக் காட்சிக்கினியதாய்

"வெள்ளி யன்ன விளங்கும் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்யுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூவொருகொடி வளை இக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில் "[4]
எனச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

அரசர்களின் அரண்மனைகளில் இருந்த சித்திரக் கூடங்களைப் போல கோயில்களிலும் சித்திரக் கூடங்கள் இருந்தன. மதுரைக்கு அருகில் உள்ள திருப்பரங்குன்றத்து முருகன் கோயிலில் சித்திர மாடமொன்று இருந்ததைக் குன்றம்பூதனார் என்னும் புலவர்
" நின் குன்றத்து
எழுதெழில் அம்பலங் காமவேள் அம்பின்
தொழில்வீற் றிருந்த நகர்"[5] எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதே சித்திர மாடத்துள் எழுதப்பட்டு இருந்த ஓவியங்களை,

"இரதி காமன் இவளிவன் எனாஅ,
விரகியர் வினவ வினாவிறுப் போரும்
இந்திரன் பூசை இவளக லிகைஇவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படிவிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல வெழுத்துநிலை மண்டபம்" 6 என நப்பண்ணனார் எனும் புலவர் கூறியுள்ளார்.

காவிரிப்பூம்பட்டிணத்திற்குப் புதியதாக வந்த மக்கள், அங்குள்ள வீடுகளின் நீடுயர்ந்த வெளிச்சுவர்களில் வரையப்பட்டுள்ள பல வகையான ஓவியங்களைக் கண்டு வியந்ததை,

"எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டு" 7

என்று சாத்தனார் வர்ணித்துள்ளார்.

மாளிகைகள், அரங்குகள் முதலியவற்றின் கூரைப்பகுதிகளிலும் பழங்காலத்தில் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. சிலப்பதிகாரத்தில் மாதவி நாட்டியமாடிய அரங்கின் மேனிலத்தே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு வகை வண்ணப் பூதங்களை எழுதி யாவரும் வணங்குமாறு படைக்கப்பட்டிருந்த காட்சியை இளங்கோவடிகள்

"தோற்றிய வரங்கின் றொழுதன ரேத்தப்
பூதரை எழுதி மேனிலை வைத்து" 8

எனக் குறிப்பிட்டுள்ளார். சிலம்பு, 'ஓவியவிதானம்' என்று இதனை அழைக்கிறது.

மணிமேகலையில் வஞ்சிமா நகரத்திலிருந்து புத்த தவச்சாலைகளிலும் ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்த செய்தியை

"சாலையும் கூடமும் தமனியப் பொதியிலும்
கோலங்குயின்ற கொள்கை யிடங்களும்" 9

என்ற வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

பிற்காலத்திய நூலான பெருங்கதையிலும் தமிழகத்தில் சித்திரச்சாலைகள் இருந்ததைப் பற்றி

"வித்தக வினைஞர் பத்தியிற் குயிற்றிய
சித்திரச் சாலை ... ..." 10

என்ற குறிப்பு உள்ளது.

சங்க இலக்கியங்களில் ஓவியத்தைப் பற்றிச் சிறப்பாக மற்றொரு செய்தியும் கூறப்பட்டுள்ளது. அக்கால மக்கள் வெளிப்புறங்களில் தங்கும்போது திரையை வளைத்து மேற்கட்டில் (கூடாரம்) தங்குவது

வழக்கம். அத்திரையிலும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. கடலாடு காதையில் மாதவி புன்னைமர நிழலில் அழுக்கற்ற மணல் பரந்த நிலத்தே சித்திரத் திரையை வளைத்து மேற்கட்டுங்கட்டி, இடப்பட்ட வெண்கால் அமளிமிசை கோவலனுடன் சேரவிருந்து யாழை வாசித்தாள்.

"புன்னை நீழற் புதுமணற் பரப்பில்
ஓவிய எழினி சூழவுடன் போக்கி
விதானித்துப் படுத்த வெண்கால் அமளிமிசை" 11

என்ற வரிகளினால் இந்த சித்திரத் திரையை 'ஓவிய எழினி' என இளங்கோவடிகள் சிறப்பித்துக் கூறியுள்ளார், என்பதை அறியமுடிகிறது.

சீவகசிந்தாமணியில் சித்திரச் சீலை 'படம்' என்றே வழங்கப் பெறுகிறது. தக்க நாட்டின்கண் சீவகன் பயணம் செய்தபோது அந்நாட்டில் காட்சியளித்த தாமரைக் குளங்கள், திரைச்சீலையில் ஓவியக் கலைஞன் தீட்டியத் தாமரை குளங்களைப் போலவே தோற்றமளித்தனவாம் என்பதனை

"படம்புனைந் தெழுதிய வடிவில் பங்கயம்
தடம்பல தழீஇயது தக்க நாடு" 12

என்ற வரிகளால் அறிகிறோம்.

அக்காலத்தில், வண்ணம் கலந்து தீட்டும் ஓவியங்களை வண்ண ஓவியங்கள் என அழைத்தனர். இந்த வகை ஓவியங்களை வரைய வண்ணந் தீட்டுவதற்கு பயன்படும் கோல்களை தூரிகை துகிலிகை என்று அழைத்தனர், என்பதை

"ஓவ மாக்கள் ஒள்ளரக் கூட்டிய
துகிலிகை யன்ன துய்த்தலைப் பற்றி" 13

என்ற வரிகளால் அறிய முடிகிறது.

ஓர் உருவத்தை வண்ணம் தீட்டாமல் கோடுகளைக் கொண்டே ஓவியமாக வரைவது புனையா ஓவியம் எனப்பட்டது. இதனை வரி வடிவ ஓவியம் என்றும் அழைத்தனர்.

"புனையா ஓவியம் கடுப்ப" 14
"புனையா ஓவியம் போல நிற்றலும்" 15

என்ற வரிகளால் புனையா ஓவியம் பற்றி அறிய முடிகிறது.

மேற்காணும் செய்திகளிலிருந்து ஓவியம் சங்க காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்ததையும் அதன் வளர்ச்சியையும் அறிகிறோம். தற்காலத்தில் பாரம்பரியமிக்க ஓவியம் நலிவுற்று வருவதைத் தவிர்க்க, ஓவியக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டும், ஓவிய பயிற்சிகளை அரசு துறைகளின் மூலம் வளரும் கலைஞர்களுக்கு அளித்தும் தற்கால அரசு ஓவியக்கலையை வளர்க்க பாடுபடுகிறது. இக்கலை வளர நாமும் துணை நிற்போம்.

குறிப்புகள்

1. மணிமேகலை 2: 31–32
2. மணிமேகலை 3 : 126–131
3. மதுரைக் 484–5
4. நெடுநல்வாடை 110–114
5. பரிபாடல் 18: 27–29
6. பரிபாடல் 19: 48–53
7. மணிமேகலை 3: 129–131
8. சிலப்பதிகாரம் 3: 106–107
9. மணிமேகலை 28 : 66–67
10. பெருங்கதை 3 : 4: 15–15
11. சிலப்பதிகாரம் 6 : 168–170
12. சீவகசிந்தாமணி 1439
13. நற்றிணை 118: 8–10
14. நெடுநல்வாடை 147
15. மணிமேகலை 16 : 131

காவிய நகரம் காஞ்சிபுரம்

திருமதி ஜா.மோ.காந்திமதி,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், காஞ்சிபுரம்.

தென்னகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்களில் காஞ்சிபுரமே தலையாயதாகக் கருதப்படுகிறது. இந்நகரிலுள்ள நூற்றுக்கணக்கான கோயில்களும் கலையழகு வாய்ந்த சிற்பங்களும் இதன் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுகின்றன. இந்நகரம் கச்சிப்பேடு, கச்சி, காஞ்சிபுரம், காஞ்சி எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டது. இந்தியாவில் சப்தபுரி எனப்படும் ஏழு புண்ணிய நகரங்களுள் காஞ்சிபுரமும் ஒன்றாய் திகழ்கிறது. இங்கு சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய நான்கு சமயங்களும் தழைத்தோங்கின. ஒரு காலத்தில் இந்நகரில் 108 சைவக்கோயில்களும் 18 வைணவக்கோயில்களும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

'தொண்டை மண்டலம்' என்றழைக்கப்பட்ட பகுதியில் இந்நகரம் அமைந்திருந்ததாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கி.பி. பதினோராம் நூற்றாண்டில், சோழர்கள் காலத்திலே இது 'ஜெயங்கொண்ட சோழ மண்டலம்' எனப் பெயர் பெற்றது. தொண்டை மண்டலத்தில் இருபத்து நான்கு கோட்டங்கள் இருந்ததாகவும் அவற்றில் ஒன்றான எழிற்கோட்டத்தில் காஞ்சிபுரம் முக்கிய நகரமாக விளங்கியதென 'தொண்டை மண்டல சதகம்' என்ற நூல் தெரிவிக்கின்றது. சீன பயணி யுவான்–சுவாங் வருகை புரிந்த காலத்தில், சுமார் ஆறு மைல்கள் சுற்றளவுடையதாக இருந்த இந்நகரில் மக்கள் கல்வியிலும், வீரத்திலும், கலைகளிலும், தர்மத்திலும் சிறந்து விளங்கினர். நகரின் மையப் பகுதியில் பிராமணர்கள் வசித்தனர். விவசாயக் குடும்பங்களும் பிற இன மக்களும் புறநகரில் வாழ்ந்தனர்.

வேகவதி அல்லது கம்பை என்னும் ஆற்றங்கரையில் அமைந்திருந்த காஞ்சி நகரில் நான்கு வகையான பாடிகள் அல்லது சேரிகள் இருந்ததைப் பற்றி கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அவை கம்புதன்பாடி, அதிமன்பாடி, கஞ்சகப்பாடி மற்றும் எருவளச்சேரி ஆகியனவாகும். இவற்றில் பெரும்பாலும் நெசவாளர்கள் குடியிருந்தனர். அரசன் இவர்களை கோயில்களை பராமரிக்கும் பாடசாலியர்களாக நியமித்து வெகுமதிகளை அளித்துச் சிறப்பித்தான். சமுதாயத்தில் இவர்களுக்கு உயர்மதிப்பும் சிறப்பும் இருந்தன. இதனாலேயே காஞ்சிபுரம் பட்டு நெசவில் புகழ்பெற்று திகழ்ந்ததெனக் கருதலாம். இன்றும் கூட பிள்ளையார்பாளையம் என்ற பகுதியில் நெசவாளர்களே குடியிருந்து வருகின்றனர். சைவக்குடியிருப்புகள் ரணஜெயபாடி,

ஏகவீரபாடி மற்றும் வாமனசங்கரபாடி என்றழைக்கப்பட்டன. சோலைநியமம் என்ற பகுதியில் வசித்துவந்த தொலைசெவியர் என்பார்க்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இவர்கள் ஊரகம் என்ற கோயிலுக்கு அரிசியும் தீபமேற்ற எண்ணெயும் அளித்தனர். நாலாயிர திவ்யபிரபந்தம் குறிப்பிடும் ஊரகம் என்ற கோயில், தற்போதுள்ள உலகளந்த பெருமாள் கோயில் என்பதை இக்கோயிலில் காணப்படும் சில கல்வெட்டுகள் மூலம் தெளிவாகிறது. இவை தவிர துணுக்கச்சேரி மற்றும் வீரப்பாடி என்ற பகுதிகளும் குறிப்பிடத்தக்கவையாகும்.

உயர்ந்த கோட்டைகளுடைய அரசனின் அரண்மனை நகருக்கு வெளியே அமைந்திருந்தது. அங்கு காலாட்படைக்கும், குதிரைப்படைக்கும் பயிற்சியளிக்க கொத்தளங்கள் இருந்தன. தற்போது பெரிய காஞ்சிபுரத்திற்கும் சின்ன காஞ்சிபுரத்திற்கும் இடையில் பல்லவமேடு (பாலிமேடு) உள்ளது. இதுவே பண்டைய பல்லவர் அரண்மனை இருந்த இடமாகும் என பலரும் கூறுகின்றனர். இம்மேடு காஞ்சி நகர மட்டத்திற்கு மேல் ஏறத்தாழ இருபதடி உயரமுடையது. இங்கு செங்கல்லாலும் சுதையாலும் ஆன ஆவுடையார் கோயிலும், இரண்டு மண்டபங்களும் உள்ளன. இங்குள்ள சுரங்கப்பாதை கைலாசநாதர் கோயிலுக்குச் செல்வதாகக் கூறுகின்றனர். முற்காலத்தில் காஞ்சி நகரைச் சுற்றி பெரிய மதிற்சுவரும் ஆழ்ந்த அகழியும் இருந்திருக்க வேண்டும். எனவே தான் தேவாரத்தில் 'மதிற்கச்சி' என்று பாடப்பெற்றுள்ளது.

நகரில் அரச வீதிகள் நான்கும் சுமார் நூறடி அகலத்தில் தேரோடும் வீதிகளாக விளங்கின. காஞ்சிபுரம் செங்கல்பட்டு ரயில் பாதைக்கு தெற்கில் தொண்டைமான் சோழபுரம் என்னும் பகுதியில் சங்ககாலத்துக் காஞ்சிக்கோட்டை அமைந்திருக்கலாம். கோட்டைக்குள் இருந்த யானைகட்டுத்தெரு, பட்டாளத்தெரு, காவலன் தெரு, திருச்சோலைத்தெரு, மதுரன் தோட்டத்தெரு, தோப்புத்தெரு, மதங்கீசர் தெரு, திருமேற்றளி ஈசர் தெரு என்னும் தெருக்கள் இன்றும் அப்பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. வடக்கு வாசல் தெரு எனப்படும் வீதி பண்டைய கோட்டை வாயிலாக இருந்திருக்கலாம்.

காலப்போக்கில் அழிந்துவிட்ட சங்ககாலக் காஞ்சியைக் குறிப்பிடும் பெரும்பாணன், மதிற்கச்சி என ஆற்றுப்படுத்தும் இடம், இன்றுள்ள உலகளந்த பெருமாள் கோயிலுக்கு கிழக்கில் தொடங்கி தொண்டைமான் சோழபுரத்து ஏரி வரையில் பரந்திருந்தது. அதன் தென்பகுதி இன்றுள்ள யதோத்காரி கோயிலுள்ள பகுதிக்கும் திருக்காலி மேட்டிற்கும் வடக்கில் அமைந்திருக்கலாம்.

இக்கட்டுரையில் காஞ்சிநகர் பற்றிய முழுமையான வரலாற்றை அடக்க இயலாது. அரசியல், சமயம், இலக்கியம் ஆகிய மூன்று

நிலைகளில் காஞ்சியின் வரலாறு கரைகாணவியலாத அளவு பரந்துள்ளது. இந்நகரம் பண்டைய நாளில் சிறப்புற்று விளங்கியது போலவே இன்றளவிலும் ஒரு காவிய நகரமாகத் திகழ்ந்து வருகிறது என்றால் அது மிகையாகாது.

எடுத்தாண்ட நூல்கள்

1. தென்னிந்திய கோட்டைகள் – சி.எஸ். முருகேசன், டிசம்பர் 1994
2. SOUTH INDIAN SHRINES – P.V. Jagadisa Ayyar, First Print 1982, Reprint 1993

குரங்கு மண்டபம்

ந. சுந்தரராஜன்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், கடலூர்.

முன்னுரை :

தூண்களின் மீது கட்டமைத்த கூரையுடன் உள்ள கட்டிடங்களை மண்டபங்கள் என்பர். மண்டபங்கள் பெரும்பாலும் அடைப்புச் சுவர் இன்றி நான்கு பக்கமும் திறந்த நிலையில் காணப்படும் தூண்கள் தாங்கிய கூரைப்பகுதி ஆகும். விஜய நகர மன்னர்கள் கோயில் கோபுரங்களுக்கு வெளிப்பகுதியில் இத்தகைய மண்டபங்களைப் பக்தர்களின் வசதிக்காக அமைத்தனர். சத்திரங்களும் அமைக்கப்பட்டன. டில்லியை ஆண்ட ஷெர்ஷா மன்னர் காலத்தில் 'ஷராய் அடில்' எனப்படும் இளைப்பாறும் கட்டிடங்கள் நெடுஞ்சாலை ஓரங்களில் கட்டப்பட்டன. அக்பர் காலத்தில் *'இபதத்கானா'* எனப்படும் வழிபாட்டு இடங்கள் கட்டப்பட்டன. வழிபோக்கர்கள் தங்கி இளைப்பாறும் வகையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட கட்டிடமே குரங்கு மண்டபம்.

அமைவிடம் :

கடலூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் கிழக்குப் பக்கத்தில் குரங்கு மண்டபம் அமைந்திருந்தது. மழைக்கும் வெயிலுக்கும் அம்மண்டபத்தில் பலர் தங்குவதுண்டு. சுண்ணாம்புக்காரை மற்றும் செங்கல் கொண்டு கட்டப்பட்டிருந்த அம்மண்டபத்தின் தூணின் மேல்பகுதியில் குரங்கு சிற்பங்கள் கருங்கல்லில் செய்து வைக்கப்பட்டிருந்தன. தூண்களின் மீது குரங்குச் சிற்பங்கள் இருந்தமையால் 'குரங்கு மண்டபம்' என அழைக்கப்பட்டது.

தூணின் மேல் பகுதி

இன்றைக்கும் சாதாரணமாக கிராமத்து ஓட்டு வீடுகளில் தூண்களின் மேல் பகுதிக்கும் உத்திரத்திற்கும் இடையில் அகலமான கட்டை வைக்கப்படுவதுண்டு. இக்கட்டை கூரையின் பாரத்தினை தாங்கி, தூணிற்கு உதவுகிறது. இவ்வாறான தூணின் மேல் பகுதியை போதிகை (Bracket)என்றும் தூணின் நடுப் பகுதியை கால் (Shaft) என்றும் அடிப் பகுதியை பாதம் (Base) என்றும் அழைப்பர்.

முற்கால மன்னர்கள் தூண்களின் மேல் பகுதியில் உள்ள போதிகைப் பகுதியில வெவ்வேறு வகையான பாணிகளைப் பின்பற்றினர். பல்லவ மன்னர்கள் எளிமையாக அமைத்தனர். முற்காலச் சோழர்கள் போதிகைப் பகுதியில் பிதுக்கம் ஒன்றை காட்டினர். பிற்காலச் சோழர்கள் காலத்தில் மாற்றங்கள் புகுத்தினர். மொக்கு போன்ற ஒரு அமைப்பு காட்டப்பட்டது. இதுவே விஜய நகர மன்னர்களின் காலத்தில் சிறிய மாங்காய் அளவு காட்டப்பட்டது. இத்தகைய கலையமைப்பு ஐரோப்பியர்களையும் கவர்ந்தது போலும். அவர்களும் போதிகைப் பகுதியில் குரங்கு சிற்பங்களை வைத்து அலங்கரித்தனர்.

குரங்கு சிற்பத்தின் அமைப்பு

சிற்பத்தில் சிறிய பாறையின் மீது குத்திட்டு அமர்ந்த நிலையில் குரங்குகள் காட்டப்பட்டுள்ளன. தலையின் மீது பாரம் தாங்கிய நிலையில் உள்ளன. பாரம் அழுத்துவதால் தலை சற்று குனிந்த நிலையில் சிற்பியால் கவனமாக வடிக்கப்பட்டுள்ளது. முன்னங்கால்கள் இரண்டும் அது குத்திட்டு அமர்ந்துள்ள பாறை மீது ஊன்றிய நிலையில் உள்ளன. பாரத்தினை முன்னங்கால்கள் தாங்கியுள்ளதால் சற்று மடிந்த நிலையில் உள்ளது. வால் தலை வரை மேல் நோக்கி காட்டப்பட்டுள்ளது.

குரங்கின் உடை

குரங்கு குரங்காட்டியுடன் செல்லும்போது வண்ணமயமான ஆடை அணிந்து காணப்படுவதுண்டு. இங்கு சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் முற்பட்ட குரங்குகள் மண்டப சிற்பம் ஐரோப்பிய பாணியில் உடையணிந்து காணப்படுகின்றன. தோள்கள், கை மூட்டுப் பகுதி, கால் மூட்டுப்பகுதியில் ஐரோப்பிய பாணி உடையலங்காரம் காணப்படுகின்றது.

முடிவுரை

கிரேக்கக் கலைத் திறனும், இந்தியச் சிற்பக் கலையும் இணைந்து எவ்வாறு காந்தாரக் கலை உருவானதோ அதுபோல ஐரோப்பியச் சிந்தனையும், இந்தியக் கலைத் திறனும் இணைந்ததாக இந்த குரங்குச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

நான்கு பேருக்கு நிழல் தர வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் தோன்றிய குரங்கு மண்டபம் 1980களில் சாலை அகலப்படுத்தப்படும்போது இடிக்கப்பட்டது. அவ்வாறு கால வெள்ளத்தால் அழிக்கப்பட்டாலும் இந்தியக் கலையும், ஐரோப்பிய சிந்தனையும் இணைந்து பிறந்த குரங்குச் சிற்பங்கள் நான்கு கடலூர் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

1.K.A.Nilakanta Sastri, The Colas, University of Madras, 1984 .P. 748

2.கட்டுரையாசிரியர் மண்டபம் இடிக்கப்படுவதற்கு முன்னர் கண்டதை நினைவில் வைத்து எழுதியுள்ளார்.

பத்ரேசுவரி அம்மன் மற்றும் சீனிவாசர் கற்சிற்பங்கள்

ந.சௌந்திர பாண்டியன்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், கன்னியாகுமரி.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் பைங்குளம் கல்லுப் பாலத்தடி கடலிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கி.பி.17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அம்மன் கற்சிலை ஒன்று இந்திய புதைபொருள் சட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு கன்னியாகுமரி அரசு அருங்காட்சியகத்திற்கு 27.09.2000 அன்று கொண்டு வரப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

சிற்ப விளக்கம்

இந்த பத்ரேசுவரி அம்மன் கற்சிற்பம் அமர்ந்த நிலையில் உள்ளது. உயரம் 3 அடி 2 அங்குலம், அகலம் 2 அடி ஆகும். தலையில் பானைகளைக் கவிழ்த்து வைத்தாற் போன்ற ஆபரண வேலைப்பாடுகள் உடைய கரண்டமகுடமும் காதில் ஒட்டினாற் போன்ற நீண்ட மகர குண்டலங்களும் காணப்படுகின்றன. கழுத்தில் அணிந்துள்ள நுண்ணிய வேலைப்பாடுடைய ஆபரணங்களில் ஒன்று மார்பு வரை நீண்டும் மற்றொன்று கழுத்தை ஒட்டினாற்போன்றும் உள்ளது. சாந்தமான முகத்துடன், நான்கு கைகளை உடையவளாக வடிவமைக்கப்பட்டு, வலது காலை மடித்து வைத்தும் இடது காலைத் தொங்க விட்டும் அரக்கனின் உடல் மேல் மிதித்த நிலையிலும் உள்ளது. வலதுபுறம் அரக்கனின் முகம் விரிந்த தலையுடனும் கோரைப் பற்களுடன் அகோர வடிவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தேவி அணிந்துள்ள ஆடை வேலைப்பாடுமிக்கதாய் உள்ளது. மேற்கைகளில் வலது புறம் கத்தி போன்ற ஆயுதத்தினையும், இடது புறம் கேடயம் போன்ற சதுரமான ஆயுதத்தினையும் கீழ்க் கைகளில் வலது புறம் சூலாயுதத்தையும் இடது புறக் கையில் இரத்தக் கிண்ணத்தை ஏந்தி, கையை தம் இடது தொடையின் மீது வைத்து அமர்ந்து நிலையில் காணப்படுகிறது. ஆயுதங்களைத் தன்னுடைய இரு விரல்களால் தாங்கியும் மற்ற மூன்று விரல்களை மடக்கியும், கையில் வளையல் மற்றும் இதர ஆபரணங்களை அணிந்தும் மார்க்கச்சை இன்றியும் காணப்படுகிறது.

ஆடை, ஆபரணம், தலை, அங்க அமைப்புகள், ஆயுதங்களின் துணை கொண்டு இக்கற்சிற்பம் கி.பி.17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என வரையறை செய்யலாம்.

கன்னியாகுமரி மாவட்டம் பைங்குளம் பகுதியில் சக்தி வழிபாட்டில் அம்மன் பெயர்கள் பத்ரேசுவரி, காளி என மக்கள் அழைத்து வருகின்றனர். எனவே இந்த அம்மன் கற்சிலையின் வடிவமைப்புப்படி பத்ரேசுவரி அம்மன் எனப் பெயரிட்டு அழைக்கிறோம்.

சீனிவாசர் கற்சிற்பம்

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டம் அருமனை அருகே தாமிரபரணி ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட விஷ்ணு கற்சிற்பம் இந்திய புதைபொருள் சட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்ட அருங்காட்சியகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 27.09.2000 அன்று கொண்டு வரப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டது.

சிற்ப விளக்கம்

இந்த விஷ்ணு கற்சிற்பமானது 121 செ.மீ. உயரமும் 54 செ.மீ. அகலமுமுடையது. தலையில், மிகுந்த வேலைப்பாடுகளுடன் கூடிய கிரீட மகுடத்துடனும், முகம் நீண்ட சதுரமாகவும் கைகள் மார்போடு மிகவும் நெருக்கமாக ஒட்டினாற்போன்றும் உள்ளன. மேல் வலது கையில் உள்ள 'பிரயோகச் சக்கரம்' வட்ட வடிவமாக, சுண்டுவிரல் மற்றும் பெருவிரலால் அழுத்தி பிடிக்கப்பட்டு, பார்வையாளர்களை நோக்கியவாறு உள்ளது. மற்ற மூன்று விரல்களும் மடித்து வைத்த நிலையில் உள்ளன. கைகளில் விரல்கள் தெளிவாகத் தெரியும்படி உள்ளன. இடது கையில் சங்கு மூன்று விரல்களால் தாங்கிப் பிடிக்கப்பட்டும், கழுத்தில் ஒரு ஆபரணம் மட்டும் அணிந்தும் காணப்படுகிறது. பூணூலானது மிகவும் தடியாகவும், இடது மார்பில் சதுரமாகக் கட்டப்பட்ட அமைப்பினை உடையதாகவும் உள்ளது. பூணூலின் மற்றொரு பாகம் வலது முழங்கையின் வழியே செல்கிறது. இரு கைகளிலும் மிகப் பெரிய வளையங்கள் உள்ளன. கீழ் வலது கை வரத முத்திரையுடனும், இடது கை தொடையில் வைத்தாற்போலும் உள்ளன. வலது மார்பில் 'திருமறு ' அல்லது 'ஸ்ரீ வத்ஸ ' சின்னம் ஒரு சிறிய அம்பைப் போல உள்ளது.

இடுப்பில் தடிமனாகவும் கனமாகவும் மூன்று மடிப்புகளை உடைய ஆடையைச் சதுர வடிவங்களில் முழங்கால் வரை எந்தவிதமான நுண்ணிய வேலைப்பாடுகளும் இல்லாமல், மிகுந்த தடிமனாகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இடது கையை இடுப்பில் வைத்துக்

கொண்டு நிற்பது போன்று தோற்றமளிக்கும் இக்கற்சிற்பத்தின் உடையலங்காரம், உருவ அமைப்பு, ஆயுதங்கள் ஏந்தியுள்ள அமைப்பு ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு, 'சீனிவாசர்' எனவும் இதன் காலம் கி.பி.18ஆம் நூற்றாண்டு எனவும் வரையறை செய்யலாம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்கள் குறிப்பு

க. சரவணன்
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியம்,
நாகப்பட்டினம்

தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களை விட நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஏராளமான புதைபொருட்கள் அண்மைக் காலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் அமைந்துள்ள திருஇந்தளூர், கோனேரிராஜபுரம், மூவலூர், சீர்காழி வட்டத்திலுள்ள திருநகரி, அளக்குடி, கூத்தியம்பேட்டை; வேதாரண்யம் வட்டத்திலுள்ள கத்திரிபுலம், செம்போடை, மருதூர் ; நாகப்பட்டினம் வட்டத்திலுள்ள வாழ்குடி மற்றும் நாகூர் ; திருக்குவளை வட்டத்திலுள்ள அனக்குடி மற்றும் மேல ஈசலூர் ; கீழ்வேளூர் வட்டத்திலுள்ள பிரதாபராமபுரம் ; தரங்கம்பாடி வட்டத்திலுள்ள கொடைவிளாகம் மற்றும் பிள்ளைபெருமாள்நல்லூர் ஆகிய இடங்களில் அண்மையில் புதைபொருட்கள் ஏராளமான அளவில் கிடைத்துள்ளன. இவற்றில் தரங்கம்பாடி வட்டத்திலுள்ள பிள்ளைபெருமாள் நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

தரங்கம்பாடி வட்டம், பிள்ளைபெருமாள் நல்லூர் புதைபொருட்கள்

தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள புகழ்பெற்ற திருக்கடையூருக்கு 4 கி.மீ.க்கு கிழக்கே பிள்ளைபெருமாள் நல்லூர் எனும் சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூரில் பி.பி. ஜெனரேட்டிங் கம்பெனியின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இந்தக் கம்பெனிக்கு புல எண் 118/1ல் புஞ்சையில் தேவையான மண் எடுத்துக் கொள்ள மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கி உள்ளார். கடந்த 12.3.1999 அன்று மண்ணை எடுத்து சமப்படுத்தும்போது, அதிலிருந்து கருங்கல்லால் ஆன சிவலிங்கப் பகுதி (ஆவுடையார் பாகம் இல்லாமல்) கிடைத்துள்ளது. 13.3.1999 அன்று கீழ்க்காணும் புதைபொருட்கள் அன்றைய தரங்கம்பாடி வட்டாட்சியர் திரு நா. பாலசுப்பிரமணியன் அவர்களால் கையகப்படுத்தப்பட்டன.

புதைபொருட்களின் விவரம்

	பொருளின் பெயர்	சுற்றளவு செ.மீ.	உயரம் செ.மீ.	எடை கிராம்	உலோகம்
1.	கலயம்	53	13	750	செம்பு

2.	உடைந்த முக்காலி	40 செ.மீ.	20 செ.மீ.	900	செம்பு
3.	உடைந்த முக்காலி	33 செ.மீ.	20 செ.மீ.	500	செம்பு
4.	உடைந்த தீபக்கால்	17 செ.மீ.	14 செ.மீ.	550	செம்பு
5.	துபக்கால்	16 செ.மீ.	11 செ.மீ.	550 கிராம்	செம்பு
6.	சாமரக் கைப்பிடி	22 செ.மீ.	24 செ.மீ.	125 கிராம்	செம்பு
7.	தீர்த்த பாத்திரத் தாங்கி	26 செ.மீ.	10 செ.மீ.	300 கிராம்	செம்பு
8.	முக்காலியின் கால்	14 செ.மீ.	18 செ.மீ.	275 கிராம்	செம்பு
9.	உடைந்த கால்	4 செ.மீ.	12 செ.மீ.	60 கிராம்	செம்பு
10.	உடைந்த கால்	4 செ.மீ.	19 செ.மீ.	40 கிராம்	செம்பு
11.	மணி	38 செ.மீ.	27 செ.மீ.	1050கிராம்	செம்பு
12.	மணியின் நாக்கு	7 செ.மீ.	11 செ.மீ.	75 கிராம்	இரும்பு
13.	முக்காலியின் கால்	4 ச.மீ.	6 செ.மீ.	40 கிராம்	செம்பு
14.	உடைந்த வளைந்த துண்டு	3 செ.மீ.	9 செ.மீ.	40 கிராம்	செம்பு

மொத்த எடை 5255 கிராம்

மேற்காணும் புதைபொருட்கள் யாவும் பூமி மட்டத்திற்கு 6 அடிக்குக் கீழ் கண்டெடுக்கப்பட்டவை. அவ்விடத்தில் பண்டைக்கால செங்கற்களும் ஓடுகளும் காணப்படுகின்றன. மற்றும் தரை மட்டத்திற்கு 8 அடிக்குக் கீழ் உறைகிணறு ஒன்றும் காணப்படுகிறது.

அருங்காட்சியகங்களின் ஆணையர் அவர்களின் ஆய்வு

கடந்த 31.12.1999 அன்று அருங்காட்சியகங்களின் ஆணையர் முனைவர் ரா.கண்ணன், இ.ஆ.ப., அவர்கள், பிள்ளைபெருமாள் நல்லூருக்கு நேரில் சென்று, கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்களை ஆய்வு செய்தார். புதைபொருட்கள் பண்டைக் காலத்து செங்கற்களும், ஓடுகளும் தளத்திலிருந்து 6 அடிக்கு கீழே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாலும் 8 அடி ஆழத்தில் உறைகிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாலும் இங்கு மேலும் பல அரிய பொருட்கள் இருப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதாகக் கருத்து தெரிவித்துள்ளார்.

பிள்ளைபெருமாள் நல்லூரில் பழங்காலக்கோயில்

கருங்கல்லால் ஆன சிவலிங்கம் கிடைத்திருப்பதாலும் ஆலய வழிபாட்டுப் பொருட்கள் கிடைத்திருப்பதாலும் பழங்காலக் கோயில் பூமிக்குள் புதையுண்டு இருக்க அதிக வாய்ப்புகள் உண்டு. அகழ்வாய்வு செய்தால் பல அரிய உண்மைகளை வெளிக் கொணரலாம்.

பிள்ளைபெருமாள் நல்லூர் புதைபொருட்களின் தற்போதைய விவரம்

கண்டெடுக்கப்பட்ட பிள்ளைபெருமாள் நல்லூர் புதை பொருட்கள் அனைத்தும் தற்போது தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இப்புதைபொருட்களை நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகத்திற்கு கொண்டு வந்து, பொது மக்கள் பார்வைக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

பண்டைய தமிழகக்காசுகளை முன்மாதிரியாகக் கொண்ட இலங்கைக் காசுகள்

திருமதி இரா.சாந்தி,
காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு,
அரசு அருங்காட்சியகம், சென்னை.

சென்னை அரசு அருங்காட்சியக நாணயவியல் பிரிவில் உள்ள இனம் கண்டறியப்படாத செப்பு நாணயங்களில் இரு அரிய செப்பு நாணயங்கள் பண்டைய தமிழரின் காசுகளை முன் மாதிரியாகக் கொண்டு வெளியிடப்பட்ட இலங்கை காசுகளாக கருதப்படுகிறது. இவ்விரு செப்புக் காசுகளும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த தனி நபரிடம் இருந்து பெறப்பட்டவைகள்.

நாணயங்களைப் பற்றிய குறிப்பு:

நாணயம் 1

உலோகம் : செம்பு

வடிவம் : சதுரம் 1.7 X 1.7 செ.மீ.

எடை : 3.56 கிராம்

முன்புறம் : வலதுபுறம் நோக்கி நிற்கும் திமிலுட்ன் கூடிய காளை. அதன் முகவாய்க்கு கீழே ஒரு உயர்ந்த பாத்திரம். எழுத்துக்கள் ஏதும் இல்லை. காளையை சுற்றி சதுர கட்டம். அதற்கும் நாணயத்தின் விளிம்பிற்கும் இடையே சதுரமாக மிகச் சீரான இடைவெளியில் புள்ளிகள்

பின்புறம் : நாணயத்தில் மையத்தில் மூன்று புள்ளிகள். இவைகளைச் சுற்றி ஒரு வட்டம். அதனை அடுத்த சதுர வடிவக் கட்டத்திற்கும் நாணயத்தின் விளிம்பிற்கும் இடையே முன்பக்கம் உள்ளது போல் சீரான புள்ளிகள்

நாணயம் 2

உலோகம் : செம்பு

வடிவம் : சதுரம் 1.7 X 1.7 செ.மீ.

எடை : 3.57 கிராம்

முன்புறம் : இடதுபுறம் நோக்கி நிற்கும் திமிலுடன் கூடிய காளை. மற்றவை முதல் நாணயத்தில் உள்ளவாறே

பின்புறம் : முதல் நாணயத்தில் உள்ளது போல்

ஒப்பீடு:

1) சங்ககால பாண்டியரின் சில செம்பு நாணயங்களிலும், முன்புறத்தில் திமிலுடன் கூடிய காளை இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் நிற்கும் நிலையில் பொறிக்கப்பட்டு, அதன் முகவாய்க்கு கீழே உயர்ந்த பாத்திரம் ஒன்று காணப்படுகிறது. பின்புறத்தில் மீன்வடிவம் கோடுகளால் காண்பிக்கப்பட்டுள்ளது.
2) சங்ககாலச் சேரர்களின் சில செப்பு நாணயங்களிலும் திமிலுடன் கூடிய காளை உருவம் நின்ற நிலையில் காணப்படுகிறது.
3) முற்கால பல்லவர்களின் செப்பு நாணயங்களிலும் திமிலுடன் கூடிய காளை நின்ற நிலையில் காணப்படுகிறது.
4) இம்மன்னர்களின் ஒரு நாணயத்தில் முன்புறம் சிங்கமும், பின்புறத்தில் நான்கு புள்ளிகள் அதனைச் சுற்றி ஒரு வட்டம் மிக நேர்த்தியாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நான்கு புள்ளிகளும் எடையைக் குறிக்கலாம் என்று கருதப்படுகிறது.

மேற்கண்ட நாணயங்களில் காணப்படும் எருது சின்னங்கள் மற்றும் பின்புறத்தில் உள்ளபுள்ளிகளைக் கொண்டு ஒப்பிடுகையில் இங்கு தரப்பட்டுள்ள இரு செப்பு நாணயங்களும் பண்டையத் தமிழ் மன்னர்களின் நாணயங்கள் என்று கருத வாய்ப்பு உள்ளது. எனினும் இந்நாணயங்கள் தமிழ்நாட்டில் புதைபொருளாகவோ அதிக அளவிலோ இதுவரைக் காணப்படவில்லை என்பதனை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

நமது தொகுப்பில் உள்ள நாணயங்களை ஒத்த நாணயங்களைப் பற்றிய நாணயவியல் ஆய்வாளர்கள் கருத்துகளையும் ஒப்பிடுகையில் மேற்கண்ட கருத்து ஏற்புடையதாக இல்லை.

5) திரு பி.யு. அபெல்ஸ் என்ற ஆய்வாளர் இத்தகைய செப்புக்காசு ஒன்றை தாம் ஜெர்மனியில் வாங்கியதாகவும் அதனை ஆய்வு செய்ததில் அது ஏறக்குறைய பல்லவர் நாணயத்தை ஒத்து காணப்படுகிறது. எனினும் அதில் காணப்படும் எழுத்துக்கள் வட இந்திய கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த நாணயங்களில் காணப்படும் எழுத்துக்களை ஒத்திருப்பதால் இந்நாணயம் முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த வட இந்திய மன்னர்களின் வெளியீடு என்று கருத வாய்ப்புள்ளது என்கிறார்.
6) மேற்கண்ட இக்கூற்றை கட்டுரைத் தொகுப்பு நூல் ஆசிரியரும் ஏற்றுக் கொள்கிறார்.
7) ஆனால் சவிதா சர்மா அவர்கள் மேற்கண்ட கருத்தை மறுக்கிறார். இவர் தாம் கொழும்பு அருங்காட்சியகத்தில்

நாணயங்களை ஆய்வு செய்யும் பொழுது அனுராதாபுரத்தில் கிடைத்த புதைப்பொருள் நாணயங்களுடன் இத்தகைய சதுர வடிவம் மற்றும் சின்னங்கள் கொண்ட செப்பு நாணயங்கள் குறிப்பிடத்தக்க அளவில் தாம் பார்த்ததாகக் குறிப்பிடுகிறார். மேலும் இவைகள் ஈழ மன்னர்களின் வெளியீடு என்கிறார். அதே சமயத்தில், இந்நாணயங்கள் முந்தைய தமிழ்நாட்டு காசுகளை ஒத்துள்ளன என்றும் இவைகள் தமிழ் மன்னர்களின் காசுகளை முன் மாதிரியாக கொண்டு வெளியிடப்பட்ட நாணயங்களாகவும் இருக்கலாம் என்றும் கருத்து தெரிவிக்கிறார்.

எனவே மேற்கண்ட ஒப்பீடுகளைக் கொண்டு பார்க்கையில் இவ்விரு நாணயங்களும்
1) புதைபொருளாக இதுவரை கிடைக்கப் பெறாததாலும்,
2) குறிப்பிடும் அளவில் இலங்கையில் கிடைத்துள்ளதாலும்,
தற்காலிகமாக இவைகள் இலங்கையைச் சார்ந்த கி.மு. முதலாம் நூற்றாண்டு செப்புக் காசுகளாகக் கருதலாம்.

மேலும் நமது பண்டைய தமிழக மன்னர்களின் நாணயங்களின் எடை, அவைகளில் காணப்படும் சின்னங்களின் தோற்றம், அமைப்பு நாணயங்களின் வடிவம் இவைகளைக் கொண்டு ஒப்பிடுகையில் இவ்விரு நாணயங்களும் நம் பண்டைய 'தமிழகக் காசுகளை முன் மாதிரியாகக் கொண்ட இலங்கைக் காசுகள்' என்றே தற்பொழுது கருத வாய்ப்பு மிகையாக உள்ளது.

அடிக்குறிப்புகள்:

1 & 2 : Sangam Age Tamil Coins, R. Krishnamurthy, 1997, pp.42.113.
3 & 4: Coins of South India, 1975 Sir Walter Eliot, pp152
5 & 6 : Numismatic Digest, Vol.V, 1981 Part I , pp. 4 & 5
7 Numismatic Digest, Vol.VI, 1982, Part I and II, pp. 10& 11.

ஆர்கிட்கள்

திரு க. இலக்குமிநாராயணன்,
காப்பாட்சியர், கல்விப்பிரிவு,
அரசு அருங்காட்சியகம், சென்னை.

மலரும் தாவரங்களில் உள்ள மிகப் பெரிய குடும்பங்களில் ஒன்றாக ஆர்கிட் செடிகள் விளங்குகின்றன. உலகில் இக்குடும்பத்தில் சுமார் 800 பிரிவுகளைச் சார்ந்த 30,000க்கும் அதிகமான செடி வகைகள் இருக்கின்றன. உலகம் முழுமையும் இவைக் காணப்பட்டாலும், வெப்பமும் ஈரப்பதமும் நிலவும் வெப்ப மண்டலங்களில் இவை அதிகமாக வளர்கின்றன. இப்பகுதிகளிலிருந்து துருவங்களை நோக்கிச் செல்லச் செல்ல இவைகளின் எண்ணிக்கை குறைகின்றன.

ஆர்க்கிட்களின் பல்வேறு வகைகளும், வடிவங்களும், வண்ணங்களும் பிரமிப்பு ஊட்டுபவை. சில இனங்களில் முழுத்தாவரமே கட்டை விரல் நகத்தின் அளவே இருக்கும். வேறு சிலவற்றில் பூவிதழ் மட்டும் இரண்டடி நீளம் இருக்கும். இத்தகைய வேறுபாடுகள் இருப்பினும் ஆர்க்கிட்கள் அனைத்தும் என்றும் வளரும் ஒரு முளையிலை பூண்டினங்களாகும். இவை அழுகிப்போன உயிர்ப் பொருள்களிலிருந்தும், நிலத்திலிருந்தும் உணவை எடுத்துக் கொள்ளும். ஆனால் இவை ஒட்டு உயிருண்ணிகள் அல்ல.

பூக்கள் தனிப்பூக்களாகவும், கொத்துகளாகவும், காம்பின் கிளைக்கும் துணர்களாகவும் தோன்றலாம். ஒத்த பாதிகளாக பகுக்கக் கூடியவை பூக்களுக்கு மூன்று புற இதழ்களும், இரண்டு அக இதழ்களும், ஒரு உதடும், பூவின் ஆண், பெண் உறுப்புகளின் சேர்க்கையில் உருவான சூழலும் உண்டு. மகரந்தச் சேர்க்கையின் வகைகளுக்கேற்ப பூக்களுக்கு சிக்கலான வடிவமைப்பு அமைகிறது.

மரப்பட்டைகள் மீது வளரும் பெரும்பாலன ஆர்க்கிடுகள் வெப்ப மண்டல மழைக்காடுகளுக்கு உரியவை. இவை ஈரந்தாங்கிய மஞ்சுலாவும் மலைக்காடுகளின் முகடுகளில் செழித்து வளருகின்றன.

சில வெப்ப மண்டல இனங்களும், மித தட்ப வெப்ப மண்டல இனங்களும் தரையில், புல்வெளிகளில், சதுப்பு நிலங்களில், மரக்காடுகளில், மலைப்பாறைப் பிளவுகளில் பிற நிலத்தாவரங்களைப் போல் வளரும்.

பவழ வேர் போன்ற காட்டு நில இனங்கள் அழுகிய உயிர் பொருள்களிலிருந்து உணவை எடுத்துக் கொள்கின்றன. அவைகளுக்கு

பச்சையம் இல்லாமையால் இவ்விதம் மக்கிய அங்ககப் பொருட்களை அவை சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

பவழ வேர் போன்ற காட்டு நில இனங்கள் அழுகிய உயிர் பொருள்களிலிருந்து உணவை எடுத்துக் கொள்கின்றன. அவைகளுக்கு பச்சையம் இல்லாமையால் இவ்விதம் மக்கிய அங்ககப் பொருட்களை அவை சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

சென்னை அரசு அருங்காட்சியகத்தின் 149 ஆண்டு கால வளர்ச்சியில் தாவரவியற் பிரிவு

திருமதி. ம.ந.புஷ்பா,
காப்பாட்சியர், தாவரவியல் பிரிவு
அரசு அருங்காட்சியகம், சென்னை.

1828 ஆம் ஆண்டு, சென்னை "லிட்டரரி சொசைட்டி" மற்றும் "இலண்டன் ஆசிய சமுதாயத்தின"ரும் இணைந்து, சென்னையில் பொருளாதாரப் புவியியல் அருங்காட்சியகத்தைத் துவக்கினர். இந்த அருங்காட்சியகம் 1,100 புவியியல் பொருட்களுடன், 1851 ஆம் ஆண்டு பொது மக்கள் பார்வைக்கெனத் துவக்கப்பட்டது.

ஐரோப்பிய சமுதாயத்தைச் சார்ந்த உறுப்பினர்களிட மிருந்தும், கொச்சின் மற்றும் திருவனந்தபுரம் மன்னர் களிடமிருந்தும் நவாபுகளிடமிருந்தும், பல தென்னிந்திய ஜமீன்தார்களிடமிருந்தும், காட்சிப் பொருட்கள் நன்கொடை யாகப் பெறப்பட்டன.

சென்னை, அரசு அருங்காட்சியகம், இந்தியாவின் பழமை வாய்ந்த அருங்காட்சியகங்களுள் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. 1951 ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியகம் தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடி, விழா மலரினை வெளியிட்டது. இதில் இடம் பெற்றக் கண்காட்சியில், தாவரங்களின் முக்கியத்துவம், மாதிரிகள் மற்றும் பல்வகைத் தாவரங்கள் வழி எடுத்தியம்பப்பட்டன.

1854 டிசம்பர் திங்களில், தற்போதுள்ள பாந்தியன் சாலையில் அருங்காட்சியகம் முறையாகத் துவக்கப்பட்டது. இதன் முதல் கௌரவ அலுவலரான சர்ஜன் எட்வர்ட் கிரீன் பால்ஃபர், புவியியல் சேகரிப்புகளுடன் அருங்காட்சியகத்தைத் துவக்க, காப்டன் மிட்செல் விலங்கியல் பொருட்களை அதிக அளவில் சேர்த்தார். திரு. பிட்டியின் தலைமையில் தாவரவியற் பொருட்கள் சேகரிப்பு மிகுதியாக்கப்பட்டன. இவற்றில் மருத்துவச் செடிகள், பொருளாதார முக்கியத்துவம் பெற்ற செடிகள், அரிய மரங்கள் போன்றவை இடம் பெற்றன. 1873—74 ஆம் ஆண்டுகளில் அருங்காட்சியகத்தில் உலர் தாவரங்களின் சேகரிப்பு திரு. பெட்டோம்சன் தனி சேகரிப்புகளால் மேலும் வளப்படுத்தப்பட்டது. இச்சேகரிப்பு சுமார் 2435 தாவரங்களைக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1878 ஆம் ஆண்டு வனத் துறை இயக்குநரிடமிருந்து பிரத்யேகமாகச் சேகரிக்கப்பட்ட வனப் பொருட்கள் பெறப்பட்டன. இத்தகு சேகரிப்புகளினால், சென்னை அரசு அருங்காட்சியகத்தின் தாவரவியற் பிரிவின் உலர் தாவர சேகரிப்பு,

உலகப் புகழ் பெற்ற கியூ தோட்டத்திலும் (Kew Garden), இடம் பெற்றது என்பது இப்பிரிவின் சிறப்பம்சமாகும்.

ஆரம்ப காலங்களில் தாவரவியல் மற்றும் புவியியல் பிரிவுகள் தாவரவியற் பிரிவுக் காப்பாட்சியர் பொறுப்பில் இருந்து வந்தன. இவற்றின் சேகரிப்புகள் பெருகவே தாவரவியல், புவியியல் என இரு பிரிவுகளாக பகுக்கப்பட்டு, இரு வேறு காப்பாட்சியர்கள் அவற்றின் பொறுப்பேற்றனர்.

அக்காலத்தில் தாவரவியற் பிரிவு 1. பொதுக் கூடம் 2)சேமிப்புச் சேகரிப்பு 3.சிறப்புக் கண்காட்சிகள் 4. ஆய்வு மற்றும் பருவ இதழ் வெளியீடு 5. செய்தியளிக்கும் பணி என ஐந்து பகுப்புகளாகச் செயல்பட்டது.

கூடக் காட்சிப் பொருட்கள் 1) வகைபாட்டுத் தாவரவியல் 2) பொருளாதாரத் தாவரவியல் 3)சுற்றுச் சூழல் தாவரவியல் மற்றும் பல்வகைச் சேகரிப்புகள் என பகுக்கப்பட்டிருந்தன.

வகைப்பாட்டுத் தாவரவியல் கூடத்தில் காட்சிப் பொருட்கள், பரிணாம வளர்ச்சி முறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. இதில் குறி மறையினச் செடிகள் முதலிடத்தை வகித்தன. தென்னிந்திய மர வகைகள் சுமார் முந்நூறு காட்சிக் கூடத்தில் இடம் பெற்றன. இக்கூடத்தின் தனிச் சிறப்பாக அமைந்தது, 200 ஆண்டு முதிர்ந்த ஈட்டி மரம் மற்றும் 500 ஆண்டு முதிர்ந்த தேக்குமரத்தின் குறுக்கு வெட்டுத்தோற்றங்களாகும். இதில் ஈட்டிமரத்தின் சுற்றளவு 21' என்பதும் தேக்கு மரத்தின் அடிப்பகுதிச் சுற்றளவு 23'9'' என்பதும் குறிப்பிடத்தக்கன.

தேக்கு மரத்தில் ஒவ்வொரு நூறு ஆண்டுகளின் நிறைவுகள் (வெள்ளை வண்ணத்தில்) வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புப்படுத்தப்பட்டுள்ளது. இது பெரும்பான்மையான பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

உயிரின வாழ்க்கைச் சூழல், நிழற்படங்கள் மற்றும் உலர்தாவரங்கள் வழி காட்டப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடத்தக்கவை ஈரல் வடிவில் கற்பாளத்தில் அமைந்த ஈரல் செடி, பாசிகள் மாதிரி, சதுப்பு நிலத் தாவரத்தின் தாவர சேய் முளைப்பு மரபு ஆகியவை. இவை கல்வியார்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன.

அண்மைக் காலச் சேகரிப்புகள், எனும் தலைப்பில் புதியதாகச் சேகரிக்கப்படும் தாவரவியற் பொருட்களைக் கொண்டு சிறப்புக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அக்காலக் கட்டத்தில், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களின் பூக்கும் தாவரங்களைப் பற்றி

திரு பி.வி.மயூரநாதன் எழுதிய நூலும் அதன் பிற்சேர்ப்பாக பேராசிரியர் திரு பார்னஸ் எழுதிய நூலும் குறிப்பிடத்தக்கவையாகத் திகழ்ந்தன. காட்சிப்படுத்தப்படாத உலர் தாவரங்கள், சேமிப்புச் சேகரிப்பில் அதற்கான குறிப்பட்டைகளுடன் வைக்கப்பட்டுள்ளன. இவை தாவரவியலாளர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் கண்டறிய பயனுள்ளதாகத் திகழ்கின்றன.

1997–98–ல் சங்க காலத் தாவரங்களைப் பற்றி மக்களறியும் வகையில், தாவரங்களைச் சேகரித்து, அவற்றின் தமிழ்ப் பெயர் சங்க காலப் பெயர் மற்றும் தாவரப் பெயருடன், வகைபாட்டுத் தாவரவியற் கூடத்தின் பதிமூன்று காட்சிப் பெட்டிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் அறுபதிற்கும் மேற்பட்டத் தாவரங்கள் வகைபாட்டுத் தாவரவியற் கூடத்தில், குறிஞ்சிப்பாட்டுப் பூக்கள் எனும் தலைப்பில் காட்சிப் பெட்டிகளில் கவினுற வைக்கப்பட்டுள்ளன.

தாவரங்களைச் சேகரித்தல், பாதுகாத்தல், உலர் தாவரமாக்கும் பணி அன்று முதல் இன்று வரை நடந்து வருகிறது. இம்முறை மாணவர்களுக்கு பயிற்சியாகவும் அளிக்கப்படுகிறது.

இரண்டாவது கூடமான பொருளாதாரத் தாவரவியற் கூடத்தில் தாவரப் பொருட்கள் அவற்றின் பயன்பாட்டிற்குத் தக்கவாறு வகைப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. இக்கூடத்தில் நார்கள், கரும்பு, தானியங்கள், மருந்து மற்றும் பதனிடும் பொருட்கள், பொம்மைகள், இரப்பர் மற்றும் பிசின்கள், தேயிலை, காப்பி, போன்றவை சுவரையொட்டிய காட்சிப் பெட்டிகளிலும் சாய்வுக் காட்சிப் பெட்டிகளிலும் வைக்கப்பட்டிருந்தன. 1961 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்ட பொருளாதார தாவரவியற் கூடம் திருத்தியமைக்கப்பட்டு 1984, சூன் திங்கள் ஏழாம் நாள் இக்கூடம் பொது மக்கள் பார்வைக்கு திறந்து விடப்பட்டது. இதில் இரப்பர் தோட்டம், தேயிலைத் தோட்டம், கடற்கணைகள் உள்ளிட்ட நான்கு சுற்றுச் சூழல் காட்சிப் பெட்டிகள் 'அழகு சாதனப் பொருட்கள்', வாசனைத் திரவியங்கள், மற்றும் 'தாவரமும் பொறியியலும்' உள்ளிட்ட ஒன்பது புதிய காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டன. கட்டிடக் கலையில் தாவர அமைப்பின் பயன்பாடு பற்றியும், மனிதனின் அதி நவீன தொழில்நுட்பத்தையும் விஞ்சி நிற்கும், தாவரத்தின் சிறப்பினையும், முதன் முதலாக சறுக்கு விமானத்தை உருவாக்கிய 'எட்ரிச் வெல்ச்', சகோதரர்கள், இதற்கானக் கருவியினை 'ஜனோனியர்' விதையின் அமைப்பிலிருந்து கிடைக்கப்பெற்றனர் என்ற தகவல் பிற அடிப்படை அமைப்புகளையும் நிழற்படங்கள் வாயிலாக விளக்கி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது பொருளாதாரத் தாவரவியற் கூடத்தின் சிறப்பம்சமாகும். 'தாவரமும் பொறியியலும்' காட்சியமைப்பு, மனிதனின் அன்றாட வாழ்வில் தாவரங்கள் பெரும் பங்கு வகிப்பதால், அதன் நுண்ணிய அறிவுப்பூர்வமான பயன்பாட்டினை மக்கள் துய்த்துணரும்

வகையில் புதிய பரிமாணத்தில் தாவரவியற் கூடங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

பொருட்களை பிற கல்வி நிறுவனங்களுக்கு கடனாக அளித்தல், சிறப்புச் சொற்பொழிவ ஆற்றுதல், ஆய்வாளர்களுக்குத் தாவரங்களைப் பற்றிய குறிப்புகள் அளித்தல் போன்ற ஆரம்ப காலப் பணிகளுடன், தற்போது உலர் தாவரமாக்கும் பயிற்சி கல்லூரி மாணவ மாணவியருக்கும், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும் அளிக்கப்பட்டு வருவதுடன், பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியோடு முதன் முறையாக தொழில் பயிற்சிக் கல்வி (vocational training course) பாரதி மகளிர்க் கல்லூரி மாணவியருக்கு அளிக்கப்பட்டது. இது தாவரவியற் பிரிவின் நிலையான வளர்ச்சிப் பணிக்குத் தக்க சான்றாகும். இத்துடன் சித்த மருத்துவ கல்லூரியுடன் இணைந்து மூலிகை பயன்பாடுடைய சித்த மருத்துவ இலவச முகாம்களும் நடைபெறுகின்றன.

டிசம்பர் திங்கள் 2001 இல் 150 வது ஆண்டைக் காணப் போகும் இந்த அருங்காட்சியகமும் இதன் பல்வேறு பிரிவுகளும் மேலும் பல முன்னேற்றங்களடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தீத்தடுப்பு முறைகளும் தீத்தடுப்புக் கருவிகளும்

முனைவர் வே. ஜெயராஜ்,
காப்பாட்சியர்,
வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம்,
அரசு அருங்காட்சியகம், சென்னை—600 008.

முன்னுரை

தீ இயற்கையிலும் செயற்கையிலும் உருவாகி அனைத்துப் பொருட்களையும் அழிக்கும் தன்மையுடையது. பொதுவாக, அருங்காட்சியகங்கள், நூலகங்கள் போன்ற இடங்களில் உள்ள பொருட்கள் எரியக்கூடிய தன்மையுடையவையாக இருப்பதால் மிகக் கவனமாக இருந்து அவற்றைப் பாதுகாக்க வேண்டும். தீயின் தன்மைகள், தீத்தடுப்பு முறைகள், தீ அணைப்புக் கருவிகள், தீயணைப்பு முறைகள் ஆகியவற்றை அறிந்தால் மாத்திரமே நமது பொறுப்பிலுள்ள பொருட்களைப் பாதுகாக்க முடியும். எனவே, இக்கட்டுரையில் அவற்றைச் சுருக்கமாகக் காணலாம்.

தீ மற்றும் அதன் தன்மைகள்

ஒரு பொருள் ஜுவாலையுடன் எரிவதை தீ என்கிறோம். தீ எரிவதால் வெப்பம் உண்டாகிறது. இதனால் அடுத்துள்ள பொருட்களுக்கும் தீ பரவுகிறது. தீப்பற்றிய பொருட்களைப் பாதுகாப்பது கடினமானது.

தீத்தடுப்பு முறைகள்

தீ உருவாக மூன்று முக்கியக் கூறுகள் தேவை. அவை, எரி பொருள், போதுமான வெப்பம் மற்றும் காற்று ஆகும். இவற்றில் ஏதாவது ஒன்று இல்லாவிட்டால் தீ எரிய வாய்ப்பில்லை. எனவே, தீப்பற்றுவதைத் தவிர்க்க முன்னெச்சரிக்கையாக இருப்பதே ஏற்றது. மேற்கூறிய மூன்று கூறுகளும் ஒன்று சேராது பார்த்துக் கொண்டாலே போதும்.

தீயின் வகைகள்

எரிபொருட்களின் தன்மையின் அடிப்படையில் தீயை ஐந்து வகைப் படுத்தலாம். அவை,

1. 'ஏ' வகை (Type-A திடப்பொருளின் மீது ஏற்படும் தீ)
2. 'பி' வகை (Type-B திரவப் பொருட்களின் மீது ஏற்படும் தீ)

3. 'சி' வகை (Type-C வாயுப் பொருட்களின் மீது ஏற்படும் தீ)
4. 'டி' வகை (Type-D உலோகப் பொருட்களின் மீது ஏற்படும் தீ)
5. 'இ'வகை(Type-E மின்சாரத்தாலும் மின்கருவிகளிலும் ஏற்படும்தீ)

தீயணைப்புக் கருவிகள்

தீயணைப்புக் கருவிகள், தீப்பற்றத் தேவையான மூன்று கூறுகளில் ஏதாவது ஒன்றை நீக்கக் கூடிய தன்மையுடையது. உதாரணமாக, அருங்காட்சியகங்கள் மற்றும் நூலகங்களில் ஏற்படும் தீ, முதல் மற்றும் கடைசி வகையைச் சார்ந்தது. பொதுவாக, தீ பற்றக் கூடிய பொருட்களை தீ உருவாகக் கூடிய இடங்களில் வைப்பதைத் தவிர்க்க வேண்டும். தீ ஏற்படும் வேளையில், தீ பற்றக் கூடிய பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றி தீயினைத் தவிர்க்கலாம். காற்று இல்லா சூழ்நிலையை உருவாக்கி தீயினைத் தவிர்க்கலாம்; வெப்பத்தைக் குறைத்தும் தீயினைத் தவிர்க்கலாம். இவை, இரு வகைப்படும். அவை, பட்டினி போடும் முறை மற்றும் போர்வை முறையாகும்.'ஏ' வகைத் தீயணைக்கும் கருவி நீரினை வெளியேற்றி வெப்பத்தைத் தணித்து மரம், காகிதம் போன்ற பொருட்களின் மீதுள்ள தீயை அணைக்கும் தன்மையுடையது. 'பி' வகைத் தீயணைக்கும் கருவி சோடியம் பை கார்பனேட் என்ற வேதிய உப்பை வெளியேற்றி காற்றை எரிபொருளுடன் (எண்ணெய், பெட்ரோல் போன்ற திரவ எரிபொருட்களுடன்) சேரவிடாது தடுத்துத் தீயை அணைக்க உதவுகிறது. 'சி' வகைத் தீயணைக்கும் கருவி சமையல் வாயு போன்ற எரியக்கூடிய பொருட்களுடன் காற்றைச் சேரவிடாது தவிர்த்து தீயை அணைக்கும் தன்மையுடையது. 'டி' வகைத் தீயணைக்கும் கருவி சோடியம், பொட்டாசியம் போன்ற உலோகங்களை எரிய விடாது தடுக்கும் தன்மையுடையது. 'இ' வகைத் தீயணைக்கும் கருவி மின் இணைப்புகளில் ஏற்படும் தீயை அணைக்க வல்லது.

தீயணைப்பு முறைகள்

பொதுவாக அருங்காட்சியகங்கள், நூலகங்கள் போன்ற இடங்களில் திடப் பொருட்கள் மற்றும் மின் சாதனங்களில் ஏற்படும் தீ விபத்தே பொதுவானது. எனவே, 'ஏ','பி','சி' வகைத் தீயணைப்புக் கருவிகளே போதுமானது. தீ பற்றிய சில விநாடிகளுக்குள் தீயணைப்புக் கருவியைப் பயன்படுத்தி தீயை அணைக்க வேண்டும். ஒவ்வோரு தீயணைப்புக் கருவியும் 20 விநாடியிலிருந்து 1 நிமிடம் வரைதான் செயல்படும். எனவே, தீ பரவுவதைத் தடுக்க முடியாத சூழ்சிலையில் தீயணைப்புத் துறையினர்க்கு தெரிவிக்க வேண்டும். தீ விபத்து தொடர்பாக

கட்டணமின்றி தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் : தீயணைப்புத்துறை—101, ஆம்புலன்ஸ்—102. போக்குவரத்து காவல் துறை—103. தொடர்பு கொள்ளும்போது தீ எரியும் இடம், முகவரி, தெரிவிக்கும் நபரின் பெயர், தொலைபேசி எண் போன்றவற்றைத் தெரிவித்து திரும்பும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் வரை காத்திருக்க வேண்டும்.

'ஏ' வகைத் தீயணைப்புக் கருவியில் நீரும் கார்பன் டை ஆக்ஸைடும் வைக்கப் பட்டுள்ளன. தீப்பற்றியதும் பொருட்களின் தன்மையை அறிந்து, பொருட்களுக்கேற்ப குறிப்பிட்ட வகை தீயணைப்புக் கருவியை பொருத்தியுள்ள இடத்திலிருந்து எடுத்து, மேல் பாகத்தில் உள்ள பாதுகாப்புக் கொக்கியை அகற்றி, பலமாக முனையில் கையால் அடிக்க வேண்டும். இப்போது உள்ளே உள்ள கார்பன் டை ஆக்ஸைடு குடுவை உடைந்து, கார்பன் டை ஆக்ஸைடு வெளிவருவதால் அத்துடன் நீர் விசையுடன் வெளியேறுகிறது. பீச்சும் நீரை தீயின் அடிப்பகுதியில் படும்படி செய்ய வேண்டும். இப்போது எரிபொருளின் வெப்பம் குறைவதால் தீ அணைகிறது.

'பி' மற்றும் 'சி' வகைத் தீயணைப்புக் கருவியில் கார்பன் டை ஆக்ஸைடும் சோடியம் பை கார்பனேட்டும் தனித்தனியாக வைக்கப் பட்டுள்ளன. தீப்பற்றியதும் தீயணைப்புக் கருவியை பொருத்தியுள்ள இடத்திலிருந்து எடுத்து, மேல் பாகத்தில் உள்ள பாதுகாப்புத் தகட்டை அகற்றி, பலமாக முனையில் கையால் அடிக்க வேண்டும். இப்போது உள்ளே உள்ள கார்பன் டை ஆக்ஸைடு குடுவை உடைந்து, கார்பன் டை ஆக்ஸைடு வெளிவருவதால் அத்துடன் சோடியம் பை கார்பனேட் விசையுடன் வெளியேறுகிறது. பீச்சும் சோடியம் பை கார்பனேட்டை தீயின் அடிப்பகுதியில் படும்படி செய்ய வேண்டும். இப்போது தீ எரிய போதிய காற்று கிடைக்காததால், தீ அணைகிறது. மின்சாரம் மூலம் ஏற்பட்டுள்ள தீயை அணைக்க 'பி' மற்றும் 'சி' வகைத் தீயணைப்புக் கருவியைப் பயன் படுத்தலாம்.

முடிவுரை

தீ விபத்தைத் தவிர்க்க போதிய சமயோஜிதம் தேவை. தியாக உணர்வு தேவை. உடனடியாக உரிய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். யாவரும் தீ பற்றிய அறிவுடையவர்களாக இருக்க வேண்டும். தீத்தடுப்புப் பணி அனைவரையும் சார்ந்ததாகும். யாவரும் விழிப்புடன் இருந்தால் தீயைத் தடுக்கலாம். இதன் மூலம் அரும்பொருட்களைப் பாதுகாப்பதோடு அரும் உயிர்களையும் பாதுகாக்கலாமே.